# அரங்கம்
செய்திகள்
கிழக்கு மண்ணில் இருந்து ஒரு தொடர்புடகம்

அரங்கம் இணைய வானொலி
+94 70 300 900 1
+94 65 222 911 2
+94 71 399 909 1
227,Bar road,Batticaloa
அரங்கம் Fm

வார இதழ்- மட்டுநகரிலிருந்து... | www.arangamnews.com | வெள்ளி, பங்குனி 02, 2018. இதழ் – 02




# அம்பாறையில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலுக்கு அரசியல் தலைவர்கள் கண்டனம்

கிழக்கில் அம்பாறை நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலை இலங்கையின் பலதரப்பட்ட அரசியல் தலைவர்களும் கண்டித்துளனர்.

அம்பாறை நகரில் ஒரு சிற்றுண்டிச்சாலையில் சில தினங்களுக்கு முன்னதாக சாப்பிட வந்த சிலர், அங்கு "குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகளை உணவில் கலந்து கொடுப்பதாக" குற்றஞ்சாட்டி கடைக்கார்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், பின்னர் அங்கு கூடிய பலர் அந்தக்கடையையும் பள்ளிவாசல் உட்பட முஸ்லிம்களுக்கு சொந்தமான சில உடமைகளையும் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு ஒரு பதற்றமான சூழ்நிலையும் உருவானது. குறிப்பாக அந்தப் பகுதியில் வாழும் முஸ்லிம்கள் பெரும் அச்சமடைந்தனர்.

### இரா. சம்பந்தர்

---

இந்தச் சம்பவத்தை தாம் வன்மையாக கண்டிப்பதாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

இது குறித்து "அரங்கம்" பத்திரிகைக்கு பேசிய அவர், முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இப்படியான சம்பவங்கள் நடந்திருப்பதாக கூறிய அவர், இனிமேலும் இப்படியான நடவடிக்கைகள் தொடராமலிருப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

அந்த ஹொட்டலில் மருந்து கலந்த உணவு கொடுக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டமை குறித்து கேட்டதற்கு பதிலளித்த எதிர்க்கட்சிதலைவர் இரா. சம்பந்தன், அப்படியாக நடந்ததா என்பது குறித்து தனக்கு தெரியாது என்று கூறியதுடன், அது குறித்த முறைப்பாடு இருந்தால் அதற்கு எதிராக சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமே ஒழிய, எவரும் சட்டத்தை கையில் எடுத்து, அந்தக் கடை உட்பட ஏனைய கடைகளையும்,வழிபாட்டிடத்தையும் தாக்குவதை அனுமதிக்க முடியாது என்றும் கூறினார்.

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி

இந்த தாக்குதலை தாமும் மிகவும் வன்மையாக கண்டிப்பதாகக் கூறுகிறார் தமிழ் காங்கிரஸ் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த செல்வராசா கஜேந்திரன். சிங்கள பேரினவாதம் தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதே இந்த தாக்குதலுக்கு காரணம் என்று "அரங்கம்" பத்திரிகையிடம் கூறிய அவர், முஸ்லிம்களின் வர்த்தக ஆதிக்கத்தை ஒழிக்கவே அது இதனை திட்டமிட்டுச் செய்வதாக கூறுகிறார்.

இதேபோலவே முன்னர் தமிழர்கள் வணிக ரீதியில் முன்னோடியாக இருந்த வேளை

. (பக்கம்- 02)

**பாரிசவாதத்துக்கு எதிரான விழிப்புணர்வு நடைபயணம் ஒன்று மட்டக்களப்பு நகரில் வெற்றிகரமாக நடந்தது. பல்லாயிரக்கணக்கானோர் அதில் பங்கேற்றனர். பாரிசவாத விழிப்புணர்வு பற்றிய குறிப்பை உள்ளே காணலாம்.**







# மழை விட்டும் தொடரும் தூவாணம் – இது அரசியல் வானம்

மழைவிட்டும் தூவாணம் விடாதநிலை. நான் கிழக்கு காலநிலையை கூறவில்லை. உண்மையில் வரும் நாட்களில் இந்த இடைப் பருவநிலை மழைகுறைந்துவிடும் என்றுதான் மட்டக்களப்பு வானிலை மையம் கூறுகின்றது.

நான் சொன்ன மழையும், தூவாணமும் இலங்கை அரசியலைப் பற்றியது. வராது வந்த மாமணிபோல வந்த உள்ளராட்சி தேர்தல்கள், இங்கு பெருத்த மழையாகத்தான் வந்துபோயிருக்கிறது. அதுவும் இடியுடன் கூடிய மழை.

இது எவரும் எதிர்பார்த்த மழையல்ல. ஏதோ தமது அரசியல் செல்வாக்கை ஓரளவு பிராந்திய மட்டங்களில் சோதித்துப் பார்க்கும் களமாக இதனை அரசியல் கட்சிகள் எதிர்பார்த்தது உண்மைதான். ஆனால் அது பெரும் இடியுடன் கூடிய மழை என்று அவர்கள் கருதியிருக்கவில்லை.



அதுவும் மஹிந்த மீண்டும் ஒரு அச்சுறுத்தலாக மாறிவிடுவார் என்று ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ நினைத்தும் பார்த்திருக்கவில்லை.

பிரதமர் பதவி விலக வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கும் வரை மஹிந்த அணியினரும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்டிவைத்துவிட்டனர். இப்போதைக்கு கட்சி தப்பியது "தம்பிரான் புண்ணியம்" என்ற அளவில் ஒருவாரம் கூட ஐக்கிய தேசியக் கட்சியால் ஆறுதலடைய முடியவில்லை.

அதற்கிடையில் இன்னுமொரு பூதம் கட்சிக்குள் இருந்தே கிளம்பியிருக்கிறது. பிரதமர் உரிய மாற்றங்களை செய்யாவிட்டால், நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவேன் என்று இராஜாங்க அமைச்சரான பாலித ரெங்கே பண்டார போர்க்கொடி தூக்கியுள்ளார்.

புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த



இவர் பொதுவாகவே ஒரு ரணில் எதிர்ப்பாளர்தான். அந்த மாவட்டத்தில் இன்னுமொருவரை முன்னிலைப்படுத்த ரணில் தரப்பு முயலுவதான குற்றச்சாட்டுகள் உள்ளன. அதுமாத்திரமன்றி ரெங்கே பண்டாரவின் அனுபவத்துக்கு ஏற்ற பதவி அவருக்கு வழங்கப்படவில்லை என்ற அதிருப்தியும் அவருக்கு உண்டு.

## நம்பிக்கையில்லான தீர்மான மிரட்டல் யதார்த்தமானதா?

ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவி தனக்கு தரப்பட்டிருக்க வேண்டும் என்பது அவரது நீண்ட நாள் ஏக்கம். இவற்றின் காரணமாக நீண்ட நாட்களாகவே இவர் ரணிலின் விமர்சகராக கட்சிக்குள் இருந்து வருகிறார்.

ஆனால், ரணிலுக்கு எதிரான உணர்வு வெறுமனே ஓரிருவர் மனதில் மாத்திரம் இருக்கிறது என்று சொல்லிவிடமுடியாது. அங்கே கட்சிக்குள் 'இது மாற்றத்துக்கான நேரம். தேர்தல் பின்னடைவுக்கு பிறகும் இதனை கருத்தில் கொள்ளாது இருப்பது தவறு' என்ற கருத்து பரவலாக காணப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி ரணில் செயற்திறன் இன்றி இருக்கிறார் என்று கருதுபவர்கள் நிறைய இருக்கிறார்கள் போலும். அத்தோடு பிணைமுறி விவகாரத்தில் இருந்து வெளியே வருவதற்கான முயற்சியில்லாமல், அவர் இன்னமும் சம்பந்தப்பட்டவர்களை காப்பாற்ற நினைக்கிறாரோ என்ற கருத்தும் பரவலாக இருக்கிறது.

இந்த நிலைமைதான் கட்சிக்குள் "தலைமையில் மாற்றம் தேவை" என்ற கருத்தை வலுப்படுத்தியுள்ளது. ஆனால், அங்கே ரணிலுக்கு மாற்று யார் என்ற கேள்விக்குத்தான் பதில் இன்னமும் இல்லை. அடுத்த நிலையில் உள்ள கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாஸ போன்றோர் கூட, ரணிலுக்கு மாற்றான தலைவர்களாக தம்மை நிருபிக்கத் தவறிவிட்டனர்.

ஆனால், இப்படியான பதவி விலகக் கோரும் அழுத்தங்கள் எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்றே தோன்றுகின்றது. அதிலும் குறிப்பாக மாகாணசபைத் தேர்தல் என்பன வரும் போது நிலைமை மோசமாகலாம்.

போதாக்குறைக்கு, இப்படியான நம்பிக்கையில்லா தீர்மானம் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து வந்தால், தாம் அதனை ஆதரிப்போம் என்று பொதுஜன பெரமுன வேறு கூறிவிட்டது. இது எரியும் நெருப்பில் எண்ணெய். மஹிந்த தரப்பை பொருத்தவரை அவர்களுக்கு இப்போது தேவை ரணிலுக்கு தொடர்சியான ஒரு அழுத்தம் கொடுப்பது மாத்திரமே. அதற்காக இப்படியான விசயங்களை அவர்கள் சிக்கென பிடித்துக்கொள்வார்கள். ஆகவே ரணிலுக்கு அழுத்தம் அதிகரிக்கவே செய்யும்.

**ரணிலுக்கு மாற்றாக அடுத்த கட்ட தலைவர்கள் எவரையும் அவர் கட்சியில் காணமுடியவில்லை**

மஹிந்த அணியினரைப் பொறுத்தவரை அவர்களுக்கு கோட்டாபாய, பசில் என்று தொடர்ச்சியான அடுத்த மட்டத் தலைவர்கள் இருக்கிறார்கள். அதனால் கட்சி பலமாக இருக்கிறது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியில் அப்படியாக பலமாக எவரையும் பார்க்க முடியவில்லை. இதுதான் ரணிலின் பலமும் பலவீனமும்.

மாற்றான தலைவர் இல்லை என்பது இப்போதைக்கு ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைப் பதவிக்கு அரணாக இருக்கலாம். ஆனால் கட்சியில் பிளவு வலுத்து வருகின்றது. இது அந்த அரண்களை விரைவில் உடைத்துவிட வழி செய்யலாம். அதுமாத்திரமன்றி எதிர்காலத்தில் பொதுஜன பெரமுன பலமடையும் என்ற கருத்து, பலர் கட்சி மாறவும் வழி செய்யலாம்.

ஆகவே ஒரு பெருத்த மழை விட்டபிறகும் தொடரும் தூவாணந்தான் இந்த நம்பிக்கையில்லா தீர்மான மிரட்டல். ஆனால் அது அடுத்த கன மழையாகாமல் பார்த்துக்கொள்வது பிரதமரின் கையில்தான் இருக்கிறது. அவர் முதலில் செயற்படத் தொடங்க வேண்டும். மக்களின் நலன்களுக்கான நேரடியான திட்டங்களில் அக்கறை காண்பிக்க வேண்டும்.

### அம்பாறையில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலுக்கு அரசியல் தலைவர்கள் கண்டனம்

தொடர்ச்சி..

அவர்களுக்கு எதிராக இனக்கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டதாக கூறும் கஜேந்திரன், அதனை எதிர்த்து தமிழர் போராட்டத்தை ஆரம்பித்த வேளை, அவர்களை பயங்கரவாதிகளாக உலகுக்கு காட்டி, பெரும் எண்ணிக்கையில் தமிழர்களை அழித்ததாகவும் கூறுகிறார். அதேவேளை அப்போதைய நடவடிக்கைகளில் சில முஸ்லிம் அரசியல்வாதிகளை தமக்கு ஆதரவாக வைத்திருந்து, தமிழ் - முஸ்லிம் மக்கள் இடையே இணக்கப்பட்டையும் அரசாங்கம் சிதைத்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே இந்த தாக்குதலை இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடபட பல தென்பகுதி அரசியல்வாதிகளும் கண்டித்துள்ளனர். இது நல்லிணக்கத்துக்கு முரணான செயல் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதேவேளை அமைச்சரவை தீர்மானங்களை அறிவிப்பதற்கான சந்திப்பில் உரையாற்றிய அமைச்சரவை பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனரட்ண, குடும்பக்கட்டுப்பாட்டு மருந்தை உணவில் கலந்து கொடுத்ததாக வந்த குற்றச்சாட்டுக்களை, பொய்ப் பிரச்சாரம் என்று வர்ணித்தார்.

தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டது என்றும் அவர் கூறினார்.

அட்டப்பள்ளம்

---

இதற்கிடையே அம்பாறை மாவட்டத்தில் அட்டப்பள்ளம் இந்து மயானத்தை தனிநபர் ஒருவர் ஆக்கிரமிக்க முயன்றதாக வந்த தகவல்களால் அங்கு மக்கள் குவிய, அங்கு ஒருவிதமான பதற்றமான சூழ்நிலை வார முற்பகுதியில் ஏற்பட்டது.

ஆக்கிரமிக்க முற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர் என்று கூறப்பட்டதால் அங்கு கூடிய தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கிடையே ஒரு முறுகல் நிலையும் ஏற்பட்டது. இந்த விடயத்தில் தலையிட்ட சம்மாந்துறை பொலிஸார், இது குறித்த சமாதானக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். அந்தக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடக்க ஏற்பாடாகியிருப்பதாக சம்மாந்துறை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி இப்னுஅசார் தெரிவித்துள்ளார்.



# தமிழ் கட்சிகள் இணைந்து செயற்படுவதன் சாத்தியம்

## கிழக்கின் யதார்த்தம் வடக்கில் இருந்து வேறுபட்டது

தமிழ் கட்சிகளை ஒரே அணியில் இணைத்து தமிழர்களின் பலமான அரசியல் தலைமை ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சட்டத்தரணி கே.சிவநாதன் அவர்களை ஒருங்கிணைப்பாளராக கொண்டு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு தமிழர் ஒன்றியம் என்ற அமைப்பு இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

தமிழ் கட்சிகள் ஒரே அணியில் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் கிழக்கில்தான் அதிகம் உணரப்படுகிறது. வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற கட்சியாகவும் சர்வதேச

## தமிழ் கட்சிகள் இணையாவிட்டால் கிழக்கில் தமிழர் பலவீனப்பட நேரிடும்

ரீதியில் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாகவும் ஏற்றுக்கொள்ளப்; பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு வித்து இடப்பட்டது கிழக்கில் தான்.

தமிழ் கட்சிகள் பிரிந்து நிற்பதால் ஏற்படும் பாதிப்பை அனுபவரீதியாக உணர்ந்தவர்கள் கிழக்கில் உள்ள தமிழர்கள்தான்.

நவக்கிரகங்கள் போல செயற்பட்டு வந்த தமிழ் கட்சிகளை ஒரே அணியில் இணைக்கும் முயற்சி 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டாலும் 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகளே அந்த முயற்சிகளை மேலும் துரிதப்படுத்தியது.

அந்த முயற்சிகள் ஊடகவியலாளர் சிவராம் தலைமையில் கிழக்கிலேயே ஆரம்பிக்கப்பட்டன. அந்த முயற்சிகளுக்கு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் பக்கபலமாக இருந்தது.

2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் நான்கு உறுப்பினர்கள் தெரிவாகும் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் ஒருவர் கூட தெரிவு செய்யப்படவில்லை. தமிழர்கள் 36வீதமும், முஸ்லீம்கள் 29வீதமும், சிங்களவர்கள் 33வீதமும் காணப்படுகின்றனர். 29வீதமுள்ள

தமிழர் விடுதலைக் கூட்டணி

முஸ்லீம்கள் இரு பிரதிநிதிகளையும் 33வீதமுள்ள சிங்களவர்கள் இரு பிரதிநிதிகளையும் பெற்றுக்கொண்டனர்.

5 ஆசனங்களை கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 உறுப்பினர்களை மட்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றுக்கொண்டது மட்டக்களப்பு மாவட்டத்தில் 76வீதம் தமிழர்கள் வாழ்கின்றனர்.

கிழக்கில் தமிழர்கள் தமது பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்வதற்காகவும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பலமான அரசியல் தலைமை வடக்கு கிழக்கில் உருவாக வேண்டும் என்ற நோக்கிலேயுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அதன் பலனாக 2001ஆம் ஆண்டிலிருந்து வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் அதிக ஆதரவை பெற்ற கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு திகழ்ந்து வருகிறது. ஆனாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியையும் அதன் சின்னத்தையும் 2004ல் ஆனந்தசங்கரி பிரித்தெடுத்து சென்றார். அது பெரிய



தாக்கத்தை உருவாக்கவில்லை. 2010ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் பிரிந்து சென்றது. கடந்த ஆண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரிந்து சென்றது.

2004ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற கருணா, தமிழர் ஐக்கிய முன்னணி என்ற கட்சியையும் பிள்ளையான், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்ற கட்சியையும் உருவாக்கி உள்ளனர்.

கிழக்கு மாகாணசபை தேர்தல் நடைபெறப்போகும் சூழலில் கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை ஆசனங்களை பெற்று அச்சபையின் நிர்வாகத்தை தமிழர் தரப்பு கைப்பற்ற வேண்டுமாக இருந்தால் கிழக்கில் தமிழ் கட்சிகள் ஒரே அணியில் நிற்கவேண்டும்.

வடக்கில் தமிழ் கட்சிகள் பிரிந்து நின்றாலும் தமிழர்களே மாகாணசபையில் ஆட்சி அமைப்பார்கள்.

ஆனால் கிழக்கில் நிலைமை எதிர்மாறானது. தமிழ் கட்சிகள் பிரிந்து நின்றால் முஸ்லீம் கட்சிகளோ அல்லது தென்னிலங்கை தேசியக் கட்சிகளோ தான் பெரும்பான்மையை பெற்று ஆட்சி அமைப்பார்கள்.

இதனால்தான் கிழக்கு தமிழர் ஒன்றியம் முதற்கட்டமாக கிழக்கில் உள்ள தமிழ் கட்சிகளை ஒரே அணியில் இணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்ற கொள்கையுடைய கட்சிகளுடன் தாம் இணையத்தயார் என தமிழரசுக்கட்சியின் செயலாளர் கி.துரைராசசிங்கம் அறிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பு ஒட்டுமொத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முடிவாக ஏற்றுக்கொள்ளலாம்.

தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வெளியில் இருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆகிய கட்சிகளும் மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைவதற்கு தயாராகவே உள்ளனர்.

கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய முன்னணியும் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்ற கொள்கையை ஏற்றுக்கொள்வதாக அண்மையில் அறிவித்திருந்தார்கள். ஆனால் கருணாவை இணைத்துக் கொள்வதற்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளுக்கு நெருக்கமாக செயற்படும் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் சிலர் ஏற்றுக்கொள்வார்களா என்பதும் சந்தேகம் தான்.

பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை இணைத்துக்கொள்வதில் தான் சிக்கல்கள் எழக்கூடும்.

ஏனெனில் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பிரதான கொள்கைகளில் ஒன்று கிழக்கு மாகாணம் தனியாக இருக்க வேண்டும் வடக்குடன் இணையக் கூடாது என்பதே. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்ற கொள்கையை பிள்ளையான் தலைமையிலான கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை.

பிள்ளையானின் தலைமையிலான கட்சியை இணைத்துக் கொள்வதில் நியாயமான தயக்கங்கள் சில இருக்கலாம். தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும், மாவட்ட தலைவராகவும் இருந்த ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் கொலைவழக்கில் பிள்ளையான் என அழைக்கப்படும் சந்திரகாந்தன் குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை



ஆணையாளர் நியமித்த உண்மையை கண்டறியும் மூவர் அடங்கிய நிபுணர் குழுவின் அறிக்கையின் 141, 142 143 ஆகிய பக்கங்களில் கருணா குழு மற்றும் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி புரிந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரு பெண்கள் உட்பட 596 சிறுவர்களை படைக்கு சேர்த்து அவர்கள் பலரின் படுகொலைக்கு காரணமாக இருந்தது, தமிழர் புனர்வாழ்வு கழக உறுப்பினர் படுகொலை, உபவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத் கடத்தல் மற்றும் படுகொலை, சிறுமிகள் உட்பட பலர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடப்பட்டிருக்கிறது

ஐ.நா.நிபுணர் குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் குற்றம் புரிந்தவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் கருணா மற்றும் பிள்ளையான் போன்றவர்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைத்துக் கொண்டால் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என எப்படி கோர முடியும் என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு கேள்வி.

இவை எல்லாவற்றையும் தாண்டி மட்டக்களப்பில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி குறிப்பிடத்தக்க சக்தியாக வளர்ந்திருக்கிறது. வாழைச்சேனை பிரதேசசபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்ற அதேஅளவு ஆசனத்தை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி பெற்றிருக்கிறது.

இந்த சபைகளில் இணைந்து ஆட்சி அமைப்பதற்கோ அல்லது எதிர்காலத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரே அணியில் இணைந்து செயற்படுவதற்கோ பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி விரும்பவில்லை என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியுடன் பேச்சு நடத்திய தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் மகிந்த ராசபக்ச கைப்பற்றலாம்




என எதிர்பார்க்கப்படும் இன்றைய சூழலில் மகிந்தவின் பொதுஜன பெரமுனவின் பங்காளி கட்சியாக செயற்படுவதையே பிள்ளையான் விரும்புகிறார் என அவருடன் நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. மஹிந்த ராசபக்ஷ ஆட்சிக்கு வந்தால் சிறையில் இருக்கும் பிள்ளையான் விடுதலையாவார் என்ற நம்பிக்கை அவரின் கட்சி ஆதரவாளர்களிடம் மேலோங்கி உள்ளது

இந்நிலையில் கிழக்கில் உள்ள தமிழ் கட்சிகளை ஒரே அணியில் சேர்க்கும் கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் முயற்சிகள் சவால் நிறைந்ததாகவே காணப்படுகிறது.

அனைத்து தமிழ் கட்சிகளும் ஒரே அணியில் இணையாவிட்டால் கிழக்கு மாகாணசபையை தமிழர் கைப்பற்றுவது என்பதும் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்பதும் கானல் நீராகவே தெரியும்.

~~ இரா.துரைரத்தினம் ~~

# கவலைக்கிடமான நிலையை அடைந்துள்ள கிழக்குத் தமிழர் அரசியல்





## கிழக்கின் முடிவுகளை கிழக்குத் தமிழர்களே எடுக்க அரசியல் கட்சிகள் அனுமதிக்க வேண்டும்

இன்றைய நிலையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர்களின் நிலைத்திருப்புக்கான சக்தி என்பது தனியே அரசியல் சார்ந்ததாக மாத்திரமே உள்ளது.

ஆயுதப் போராட்டத்தின் உச்ச நிலையைத் தொட்டு, சம பலத்துடன் இலங்கை அரசோடும் ஏனைய இனத்தவர்களோடும் பேரம் பேசும் பலமான நிலையிலிருந்த தமிழர்கள், ஆயுதப் போராட்டம் தோல்வியுற்ற பின்னர் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்த போதிலும் தங்களுக்கான அரசியல் சக்தியை ஓரளவுக்காவது பலமான நிலையில் இதுவரை வைத்துள்ளனர்.

ஆனாலும் அந்த அரசியல் பலம் என்பது வடக்கு, கிழக்கு என இரண்டு மாகாணங்களில் வாழும் ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் பயன்படக் கூடியதாக அமைகிறதா என ஆராய்ந்தால் நிச்சயமாக இல்லை என்ற பதிலே சொல்லமுடியும்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

யுத்தம் முடிவடைந்த பிற்பாடு வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்கள் தங்கள் அரசியல் சக்தியாக மீண்டும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வரித்துக்கொண்ட போதிலும் கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சரியான திசையில் கொண்டு செல்லத் தவறிவிட்டது என்பது கசப்பான உண்மையாகும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010 இல் வந்த முதலாவது பொதுத் தேர்தலின்போது கிழக்குத் தமிழ் மக்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையே தெரிவு செய்தனர்.

ஆனாலும் தெரிவு செய்யப்பட்ட கிழக்குப் பிரதிநிதிகள் கிழக்குத் தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கான காத்திரமான தனித்துவமான பங்களிப்புகளை வழங்காது, கட்சிக்கும் கட்சித் தலைமைக்கும் கைப்பிள்ளைகளாகச் செயற்பட்டனர் என்பதுதான் வேதனையானது.

2012 இல் தனியாக கிழக்கு மாகாணத்துக்கான தேர்தல் நடைபெற்ற போது அதில் அக்கறையற்ற நிலையையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கடைப்பிடித்தது.

கிழக்கு மாகாணத்துக்கு முதலமைச்சர் வேட்பாளராக எவரையும் குறிப்பிடாது பலமான வேட்பாளர்களை நிறுத்தாது கிழக்கு மாகாண சபையை தமிழர்கள் கைப்பற்ற வேண்டும் என்ற இலக்கற்று அன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டதன் விளைவாக ஐந்து வருடங்கள் கிழக்குத் தமிழர்களின் உட்கட்டமைப்புக்களும் பொருளாதாரமும் சின்னாபின்னமாகின என்பதுதான் உண்மை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தின் மீது வைத்திருக்கும் அக்கறை அளவுக்கு கிழக்கு மாகாணத்தின் மீது வைக்கவில்லை என்பது வேதனையானது.

அதன் விளைவு கடந்த உள்ளராட்சித் தேர்தலில் பிரதிபலித்துள்ளது என்பதை இன்னும் கூட்டமைப்பின் தலைமை உணர்வதாக இல்லை.

இது பிரதேசவாத சிந்தனையோ அல்லது கூட்டமைப்பின் மீதான பொய்ப்பிரச்சாரமோ அல்ல.



ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் எனச் சொல்லப்படும் கூட்டமைப்பு, கிழக்கு தமிழர்கள் விடயத்தில் காட்டும் அசமந்தப் போக்கை கோடிட்டுக் காட்டும் விதமாகவே இதை இவ்வாறு வெளிப்படுத்தவேண்டியுள்ளது.

கிழக்கின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சொல்லிக் கொள்ளக் கூடிய தலைவர்களாக பொன்.செல்வராசா அவர்களும் துரைராஜசிங்கம் அவர்களும் உள்ள நிலையில் பொன்.செல்வராசா அவர்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஓரம்கட்டுவதாகவே அறிய முடிகிறது.

கடந்த உள்ளராட்சி தேர்தலின் போது அவரை கலந்தாலோசிக்காது, கிழக்கு மாகாணம் தொடர்பாக



எதேச்சையான முடிவுகளை கூட்டமைப்பு எடுத்ததன் விளைவாக அவர் அதிருப்திக்குள்ளானதாகவும் தேர்தல் பிரச்சாரங்களிலிருந்து ஒதுங்கியதாகவும் அறியமுடிகிறது.

**இரண்டு இனங்களோடு போட்டி போடும் நிலையில் உள்ள கிழக்குத் தமிழர்**

அதேபோல அடுத்த தலைவராக சொல்லப்படும் துரைராஜசிங்கம் அவர்கள் பெயரளவிலான தலைவராக உள்ளாரேயன்றி கிழக்கு மாகாணம் தொடர்பான தீர்க்கமான முடிவுகளை எடுக்கமுடியாத நிலையிலேயே கூட்டமைப்பு அவரை வைத்துள்ளதாக இங்குள்ள பல வட்டாரங்கள் கருதுகின்றன.

கடந்த உள்ளராட்சி தேர்தல் முடிவடைந்த பிற்பாடு வடக்கின் உள்ளராட்சி சபைகளில் ஆட்சியமைக்க கூட்டமைப்பால் எடுக்கப்பட்ட காத்திரமான முயற்சிகளில் ஒருவீதம் கூட கிழக்கு உள்ளராட்சி சபைகளில் காண்பிக்கப்படவில்லை.

கிழக்கின் அரசியல் தொடர்பான விடயங்களை கிழக்கிலுள்ள கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களே எடுத்தல் வேண்டும்.

விடயமறியாத, கிழக்கு தமிழ் மக்களின் மனநிலையறியாத எவரும் கிழக்கு மக்களின் அரசியல் தொடர்பான முடிவுகளை எடுப்பது ஆரோக்கியமான விடயமல்ல.

கிழக்கு தமிழர்களின் அரசியல் நிலையை கிழக்கிலுள்ளவர்களே தீர்மானிக்க கூடிய பலத்தை தமிழர் அரசியலிலுள்ள கட்சிகள் வழங்கவேண்டும்.

கடந்த கிழக்கு மாகாண ஆட்சியின்போது கூட்டமைப்பு விட்ட தவறுகளே இன்று கிழக்கில் அதன் பின்னடைவுக்கான காரணமாக அமைந்தது.

மறுபுறம் கிழக்கை மையப்படுத்திய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியானது அதன் தலைவர் இல்லாத நிலையிலும் சரியான பிரச்சார ஏற்பாடுகளற்ற நிலையிலும் மட்டக்களப்பில் 42,000 வரையான வாக்குகளைப் பெற்று பல சபைகளுக்கான ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக வளர்ந்திருக்கிறது. இது மக்களின் எதிர்ப்புணர்வுன் ஒரு வெளிப்பாடாகக் கூட பார்க்கப்படலாம்.

எதிரும் புதிருமான நிலைப்பாடுகளைக் கொண்ட கட்சிகள் ஒருபோதும் இணைந்து செயற்பட வாய்ப்புகளில்லை. கொள்கை, கோட்பாடு எனச் சிந்திக்கும் எந்தக் கட்சிகளும் கிழக்கு தமிழர் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு செயற்படத் தயாராக இல்லை.

இரண்டு இனங்களோடு போட்டியிட்டு அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றவேண்டியவர்களாக உள்ள கிழக்குத் தமிழ் மக்களுக்கு ஒருவரையொருவர் ஓரம்கட்டி போட்டிபோட்டு நடத்தும் அரசியலானது ஒருபோதும் எவ்வித விமோசனத்தையும் ஏற்படுத்தாது. அது எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழர்களை நடுத்தெருவில் விட்டுச் செல்லும் என்பதே யதார்த்தமானது.

எனவே எதிர்வரும் கிழக்கு மாகாண சபை ஆட்சியை தமிழர்கள் கைப்பற வேண்டும் என்ற தூரநோக்குடனும் கிழக்கு தமிழர்களின் எதிர்காலத்தை மட்டும் கருத்தில் கொண்டும் கிழக்கிலுள்ள அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகளும் கிழக்கு புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து காத்திரமான கிழக்கு தமிழர் அரசியல் சக்தி ஒன்றை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகும். அதுவே கிழக்கில் தமிழரின் இருப்பை நிலைநிறுத்த உதவும்.

~~ நவநீதன் ~~



## கட்சிகளின் பெயர்கள்

தொகுப்பு : கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா

| வட்டாரம் | தமிழ் அரசுக் கட்சி | ஈழமக்கள் ஜனநாயக கட்சி | ஐக்கிய தேசியக் கட்சி | தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | தமிழர் விடுதலைக் கூட்டணி | ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | சுயேட்சைக் குழு 01 | சுயேட்சைக் குழு 02 | சுயேட்சைக் குழு 04 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 அமிர்தகழி | த.இராஜேந்திரன் (647) | ச. பிரபாகரன் (08) | வி. சசிகலா (384) | அ.அருள்யோகசுந்தரம் (438) | வே.கணேசமூர்த்தி (222) | க.மைக்கல் (83) | வை.கா. முத்துலிங்கம் (182) | க.பவானி (01) | க.மு. பிரதீப் (01) |
| 02 திராய்மடு | த.லக்ஸ்மணராஜனி (698) | ஞா.தெய்வேந்திரதாஸ் (30) | சு.சுமதி (288) | த.உருத்திரமூர்த்தி (344) | ஐ.சிறிதரன் (817) | த.கௌரி (256) | பொ.கிருபானந்தன் (27) | ர.ஜெயசித்ரா (27) | சு.குணரெத்தினம் (38) |
| 03 சத்துருக் கொண்டான் | க.ரகுநாதன் (1044) | க.சித்திரவேல் (31) | த.லிங்கராஜா (228) | சி.சுதன்ராஜ் (352) | தி.வரதராஜன் (226) | க. தியாகராஜா (265) | வே.தங்கவேலு (06) | இ.முருகவேல் (30) | அ.மோகன் (13) |
| 04 சின்ன ஊறணி | க.சத்தியசீலன் (958) | செ.விஜயராஜா (97) | ஆ.தர்மராஜா (162) | சி.லுமர்ஜ்ஜனி (238) | அ.ஆரியரத்ன (500) | ஐ.சுதாசினி (106) | யோ.சுதர்ஷன் (09) | அ.பிறேமானந் (378) | சு.மணிமாலதி (50) |
| 05 இருதயபுரம் | வி.பூபாலராஜா (1414) | மோ.துஸ்யந்தன் (02) | வி.விஜயகுமார் (321) | க.ஸ்டான்லி (267) | தி.வி.நெட்டோ (76) | செ.அமிர்தம் (396) | மே.அ.செல்வராணி (04) | யு.டிலக்ஷன் (08) | து.வெ. யோசப் (23) |
| 06 கருவப்பன் கேணி | வே.தவராஜா (609) | வி.விஜயகுமாரி (18) | அ.பி.ராஜசேகரம் (386) | கு.காந்தராஜா (608) | பீ.புனிதவதி (66) | சி. சதீஸ்காந் (271) | ந.சங்கரப்பிள்ளை (04) | சி. அன்ரனிஜோசப் (263) | த.ரஜனிகாந் (23) |
| 07 மாமாங்கம் | பு.ரூபராஜ் (880) | தா.விதுஷன் (11) | பொ.சுரேஸ்குமார் (520) | ப.அன்ரனிராஜ் (490) | அ.சுகிதா (165) | க.தவராஜா (473) | க.சற்குணராஜா (21) | லோ.ஜெயந்தி (38) | ஜெ.ரஜிகரன் (39) |
| 08 ஞானசூரியம் சதுக்கம் | து.மதன் (1430) | ர.ஜெசந்தா (52) | ச.ராஜேந்திரன் (457) | அ.சசிகலா (623) | நி.நிருக்ஷன் (243) | க.அழகன் (227) | அ.ஜெயராசா (04) | க.தரணிகரன் (05) | அ.சகாயநாதன் (09) |
| 09 தாண்டவன்வெளி | யூ.பிலிப் (1067) | அ.நவரூபன் (26) | செ.தேவராஜன் (578) | ஏ.ஜோஜ்பிள்ளை (222) | பி.பிரதிபராஜ் (289) | ஸ்ரிபன் ராஜன் (549) | கு.றே.நவரெட்ணராசா (09) | அ.அன்ரனிராஜ் (09) | சு.கி.வசந்தகுமார் (28) |
| 10 அரசடி | சிவம் பாக்கியநாதன் (1333) | செ.விக்கினேஸ்வரன் (11) | அ.த.மாசிலாமணி (218) | க.நிமலகரன் (222) | ஜெ.விஜிதா (37) | ப.அனஸ்ரி (172) | ந.சுபாஷினி (04) | ர.கெர்ஷோன் (02) | யூ.ஏ.ஒக்கஸ் (09) |
| 11 பெரியஉப்போடை | ச.இ.சந்திரகுமார் (818) | கோ.ரஜனிகாந் (03) | த.சோமவாசன் (155) | க.ரொனி பிரின்சன் (798) | நா.நடேஸன் (87) | சு.சதாசிவம் (158) | ந.தேவகிதெய்வானை (02) | பு.சுகந்தன் (01) | அ.பிரான்சீஸ் (04) |
| 12 திருச்செந்தூர் | சீ.ஜெயந்திரகுமார் (1000) | சி.செல்வம் (68) | பே.சுரேஸ்குமார் (765) | ரு.குமாரதாஸ் (118) | இ.விஜயகுமார் (368) | பா.ஜோசப் (65) | தெ.நேசலிங்கம் (19) | செ.பிரியாதரன் (04) | ச.கோமளேஸ்வரி (12) |
| 13 கல்லடி | தி.சரவணபவான் (1321) | தே.அஜித்குமார் (22) | தெ.சிவலிங்கம் (770) | சி.சிவராஜ் (620) | க.லிங்கநாதன் (70) | கு.திருமால் (47) | எ.ஹரீ.டிலிமா (06) | தே.கஜன்முகன் (05) | பா.சுபாஸ் (23) |
| 14 நொச்சிமுனை | மா.தி.ஸ்ரீஸ்கந்தராஜா (1033) | ம.சிறிகாந்த் (17) | கோ.பேபி (238) | ம.செல்வி (812) | ஆ.பஞ்சலிங்கம் (439) | ம.ராஜானந்தம் (148) | ந.சறோஜா (03) | ந.ரிசாந்தன் (00) | வி.விஸ்வாஜினி (14) |
| 15 நாவற்குடா | ம.நிஸ்கானந்தராஜா (883) | க.வசந்தமலர் (25) | கா.கிருஷாந் (347) | மு.மோகன் (224) | க.சுரேந்திரன் (832) | ந.கருணானந்தம் (137) | கு.றொ.தயாளராஜா (00) | தே.கவிதாஸ் (33) | ந.சா.சுசிலாதேவி (05) |
| 16 மஞ்சந்தொடுவாய் | சி.சந்திராதேவி (104) | பா.திலக்ஷன் (04) | மீ.ஆயிஷாஉம்மா (47) | க.தி.ரூபன் (11) | கி.ஜெகன் (127) | மொ.உ.மொ.நில்லார் (923) | ந.ரஜனிகாந் (03) | இ.சதீஸ்குமார் (02) | மு.இக்பால் (00) |
| 17 புளியந்தீவு | ம.ரூபாகரன் (774) | சு.சியாந்த் (05) | ஜோ.ப.பெர்னாண்டோ (159) | ம.மோகன் (259) | சு.கிருபாகரன் (143) | வி.பிரதீபன் (396) | ஜெ.ந.திலீப்குமார் (24) | பி.பிரதீபகாசன் (02) | சு.கி.நிலோஸ்காந்த் (12) |
| 18 புளியந்தீவு மேற்கு | அ.கிருஜன் (578) | ச.அருள்கொலின் (19) | லி.பிரதாப் (85) | இ.ஜோ.அ.கமலராஜா (349) | சு.டா.குணநாதன் (57) | சோ.சூரியகாந்தன் (182) | இரா.பிரபாகரன் (12) | ச.உகந்தன் (04) | நா.பூவண்ணச்செல்வன் (16) |
| 19 திருப்பெருந்துறை | ஜெ.பிரகாசினி (276) | யோ.தாசராஜ் (16) | வே.தயாநிதி (38) | ச.மேரி கிறிஸ்டீனா (152) | நா.வனராஜன் (282) | தி.சுலக்சனா (108) | ம.கிருஸ்ணகாந்தன் (191) | மா.சண்முகலிங்கம் (408) | ஜோ.மரியதாஸ் (24) |
| 20 புதூர் | இரா.அசோக் (602) | த.சிவானந்தராசா (88) | ச.ஜெயகாந்தன் (63) | செ.குமார் (464) | சி.மில்ரல் (419) | வீ.பத்மநாதன் (68) | த.கிருபைராசா (123) | சி.மதிரூபன் (127) | க.தவராசா (190) |

(500 வாக்குகளுக்கு குறைவாக பெற்ற கட்சிகளின் பட்டியல் இதில் சேர்க்கப்படவில்லை)

மட்/மாநகரசபை 20வட்டாரத்திலும் நேரடியாக தேர்தல் களத்தில் இறங்கியவர்கள் 320 பேர். இவர்களில் அதிகமான வாக்குகளைப் பெற்றவர் ஞானசூரியம் சதுக்கம் 8ம் வட்டார தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு.துரைசிங்கம் மதன் என்பவராவார். இவர் பெற்ற வாக்குகள் - 1430

சுயேட்சையாக நின்று திருப்பெருந்துறை 19ம் வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்டவர் திரு மா. சண்முகலிங்கம். இவர் பெற்ற வாக்குகள் 408.

பெண் வேட்பாளர்களில் எவரும் நேரடியாக தெரிவு செய்யப்படவில்லை. இவர்களில் அதிகமான வாக்குகளைப்பெற்றவர் நொச்சிமுனை 14ம் வட்டார தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை சேர்ந்த திருமதி செல்வி மனோகர். இவர் பெற்ற வாக்குகள் - 812, இவரின் கட்சியிலும் இவரே கூடிய வாக்கைப்பெற்றவர்.

இப்போதைப் போலல்லாமல் எழுபதுகளிலும், எண்பதுகளின் ஆரம்பப்பகுதியிலும், மட்டக்களப்பு நகரில் உள்ள வெபர் மைதானம் உட்பட பல விளையாட்டுத்திடல்கள் கால்பந்து விளையாடுபவர்களால் நிறைந்து காணப்படும்.





# மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்கு எதிராக கோல் போட்டு அசத்திய மட்டக்களப்பு இளைஞர்

## ஆனால் இன்று மாவட்ட கால்பந்து தளர்கிறது

குறிப்பாக வெபர் மைதானத்தில் அப்போது இருந்த குறைந்தது மூன்று கால்பந்து மைதானங்களிலும் பள்ளிக்கூட மாணவர்களும், பெரியவர்களும் மாலை வேளையில் நிறைந்து காணப்படுவார்கள்.

அப்போதெல்லாம், இங்குள்ள மட்டக்களப்பின் பள்ளிக்கூட மற்றும் மாவட்ட மட்ட அணிகள் இலங்கையின் வெளி மாவட்டங்களுக்கு சென்று வெற்றி வாகை சூடி வருவது வழமையான விசயமாகவே இருந்தது.

இங்கிலாந்தை பொருத்தவரை அங்குள்ள தொழில்சார் கால்பந்து அணிகளில் உலகமட்டத்தில் பெயர் பெற்ற ஒரு அணி மன்செஸ்டர் யுனைட்டட். கால்பந்து நட்சத்திரமான டேவிட் பெக்கம், றூணி உட்பட பல பிரபல கால்பந்து பிரபலங்கள் கலக்கிய அணி அது. உலக மட்ட முதல்தர அணிகளின் வரிசையில் இடம்பிடித்தது. உலகெங்கும் ரசிகர்களையும் கொண்டது.
1970களில் ஒருதடவை இந்த அணி இலங்கைக்கு வந்து பல மாவட்டங்களிலும் நட்பு ரீதியான ஆட்டங்களை ஆடியது.



இலங்கை என்றில்லை தெற்காசியாவே உலக மட்டத்தில் ஒப்பிடும் போது கால்பந்தில் மிகவும் பிந்திய நிலையில்தான் இன்றுவரை இருந்து வருகின்றது. ஆசிய போட்டிகளில் கூட தெற்காசிய அணிகள் கால்பந்தில் வெற்றிபெற்றதாக சரித்திரம் நான் அறியக் கிடையாது.

அப்படியிருக்க உலக மட்டத்தில் பேர்போன மன்செஸ்டர் யுனைட்டட் இலங்கைக்கு வந்து ஆட்டங்களில் கலந்துகொண்டது. எதிர்பார்க்கப்பட்டது போல அந்த அணி அனைத்து ஆட்டங்களிலும் வெற்றி பெற்றது என்னவோ உண்மைதான்.

ஆனால், மட்டக்களப்பில் அந்த அணிக்கு ஒரு ஆச்சர்யம் காத்திருந்தது. அந்த அணி இங்கு வந்து மட்டக்களப்பு மாவட்ட அணியோடு ஆட ஆரம்பித்தது. கொஞ்ச நேரம் ஆட்டம் அப்படி இப்படிப் போக, திடீரென்று மட்டக்களப்பு மாவட்ட அணியில் விளையாடிய ஒரு இளம் ஆட்டக்காரர், ஆட்டக்களத்தின் நடுக்கோட்டுக்கு கொஞ்சம் அருகில் இருந்து ஒரு பந்தை லாவகமாக கிளப்பி அடிக்கிறார். அது அப்படியே போய் கோலாக மாற, மன்செஸ்டர் அணி அப்படியே ஆடிப்போய் விட்டது. உலக தொழில்சார் ஆட்டக்காரர்களையே விஞ்சிய திறனுடன் போடப்பட்ட அந்த கோலை மன்செஸ்டர் அணி மட்டக்களப்பு என்னும் இலங்கையின் ஒரு சிறிய ஊரில் இருந்த ஒரு ஆட்டக்காரரிடம் எதிர்பார்க்கவேயில்லை. பின்னர் எப்படியிருந்தாலும் மன்செஸ்டர் 11-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஆனால், அந்த அதிர்ச்சிதந்த கோலை போட்டவர்தான் மட்டக்களப்பு அணியின் பின்னாட்களில் தலைவராகவும், பயிற்றுவிப்பாளராகவும் இருந்த எம். ரட்ணசிங்கம் (ரட்ணா) அவர்கள்.

அவர் ஆடிய நாட்களிலும், பயிற்றுவிப்பாளராக இருந்த காலத்திலும் மட்டக்களப்பு கால்பந்து அணி இலங்கையின் பிரபலமான அணிகளில் ஒன்றாக இருந்தது. அவர் ஆடிய "பாடுமீன்கள்" அணியும் அப்படியே.

இப்போது 68 வயதாகிப்போன அவர், மட்டக்களப்பில் ஒரு புத்தகக் கடையில் வேலை செய்கிறார், கவலைப்படுவது மட்டக்களப்பு கால்பந்தின் இன்றைய நிலையைப் பற்றி.



எம். ரட்ணசிங்கம் (ரட்ணா)

அவருக்கு மாத்திரமல்ல இங்குள்ள பல பழைய கால்பந்து ஆர்வலர்களின் கவலை அதுதான். மாவட்ட கால்பந்து நிறைய வீழ்ந்துபோய் விட்டது என்று கூறும் மாவட்ட கால்பந்து சங்கத்தின் செயலாளரான ரி. காந்தன், பயிற்சி முகாம்கள் மற்றும் சுற்றுப்போட்டிகளை நடத்தி ஊக்கம் கொடுப்பதற்கு போதுமான அனுசரணை கிடைப்பதும் குறைந்துவிட்டது என்கிறார்.

கழகங்களில் இருப்பவர்களில் 80 வீதமானவர்கள் வேறு வேலைகளை நம்பியிருப்பதால், அவர்களுக்கு விளையாட்டுக்கு நேரம் ஒதுக்குவது கடினமாக இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

மட்டக்களப்பை பொறுத்தவரை முன்னைய நாட்களில் கால்பந்தை விரும்பி ஆடியவர்கள் அதிகம் என்று கூறுகிறார் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் உபதலைவரும், காத்தான்குடி லீக்கின் தலைவருமான எ. ரி. பாரூக். இப்போதோ அதனை விரும்புவர்கள் கால்பந்தை ஊக்குவிக்க நினைத்தாலும் ஆடுவதில் ஆர்வம் கொண்ட வீரர்களை இனங்கண்டு ஒன்று சேர்ப்பதில் பல கழகங்களும் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்களின் கவனச் சிதறல் அவர்களை தனிமைப்படுத்தி விளையாட்டில் ஆர்வத்தை குறைத்துவிட்டது. ஏனைய விளையாட்டுக்களின் ஆதிக்கமும் இதில் அடக்கம்.

எப்படியிருந்த போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்னுமொரு விசயத்தை நாம் கவனிக்க நேர்ந்தது. முன்பெல்லாம் அவ்வளவு சோபிக்காத ஏறாவூர் பகுதியை சேர்ந்த "இளந்தாரகை விளையாட்டுக் கழகம்" மாவட்ட போட்டிகளில் சோபித்து, ரசிகர்களால் விரும்பப்படும் ஒரு அணியாக திகழ்ந்து வருகின்றது.

ஆர்வம் உள்ள இளைஞர்களை உள்வாங்கி தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கி, ஒரு கட்டுப்பாட்டுடன் அவர்களை வைத்திருந்தமையே அவர்கள் சிறப்பாக ஆடுவதற்கு காரணம் என்கிறார் அந்த அணியின் பயிற்றுவிப்பாளரான எம்.எம். முஹிதீன்.

ஆகவே இங்கு ஆர்வமும்,



தொடர்ச்சியான பயிற்சியும், நல்ல வளமும், பயிற்சியாளரும் கிடைக்கும் போதுதான் வெற்றிகள் நெருங்குகின்றன என்பது தெளிவாகின்றது. இந்திய புகையிரத அணி, சீன மற்றும் பிரான்ஸ் அணிகளின் வருகை அப்போது இங்கு மட்டக்களப்பு அணிக்கு நல்ல அனுபவம் தந்தது என்று கூறும் ரட்ணசிங்கம், ஜி. சௌந்திரராஜன்(சேர்) போன்ற முன்னோடிகளால் தாம் வளர்க்கப்பட்டதும் வழி நடத்தப்பட்டதும் தமது அப்போதைய வெற்றிகளுக்கு காரணம் என்கிறார்.



இப்படியாக பலவிதமான எதிர்பார்புகள் இங்கு முன்னைய மற்றும் தற்போதைய மாவட்ட கால்பந்து ஆர்வலர்களுக்கு இருக்கிறது. அவர்கள் தமது நம்பிக்கைக்கு காரணமாக ஒரு சாதகமான விசயத்தையும் கூறுகிறார்கள். அது அரசாங்க அதிபர் எம். உதயகுமார் மாவட்ட கால்பந்து சங்கத்துக்கு தலைவராக இருப்பது. அவரும் ஒரு சிறந்த முன்னாள் கால்பந்து ஆட்டக்காரர். சுதந்திரன் அணிக்காக விளையாடியவர்.

~~ மிருஷன் ~~



# கிழக்குக்கு செய்தி சொல்ல ஆயிரக்கணக்கான கால்கள் இணைந்த ஒரு பயணம்

ஆயிரக்கணக்கில் திரண்டிருந்தது மட்டக்களப்பு. அண்மைக்காலத்தில் பெரும் கூட்டங்களுக்கு, போராட்டங்களுக்கு கூடாத கூட்டம் இது. ஜாதி, மதங்கடந்த கூட்டம்.

பாரிசவாதம் குறித்த விழிப்புணர்வுக்கான "ஸ்றோக் வோக்" அது. இலங்கை தேசிய பாரிசவாத தடுப்பு அமைப்பு கடந்த 9 வருடங்களாக இப்படியான 5 நடைபயணங்களை நடத்தியிருக்கிறது. ஆனால், வடக்கு கிழக்கில் நடந்த பாரிச வாதத்துக்கான முதலாவது விழிப்புணர்வு நிகழ்வு இது.

கூடிய கூட்டத்தின் அளவுக்கு பாரிசவாதத்தினால் ஏற்படக் கூடிய பிரச்சினையும் அதிகம் என்கிறார், சுகாதாரத்துறையை சேர்ந்த பலதரப்பினரையும் உள்ளடக்கிய இதற்கான ஏற்பாட்டு செயலணிக்குழுவைச் சேர்ந்தவரும், இலங்கை தேசிய பாரிசவாத குழுவின் உப செயலாளருமான, நரம்பியல் நிபுணர் டாக்டர் தி. திவாகரன்.

மூளைக்கு செல்லும் இரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்பும், அந்த நாளங்களில் ஏற்படும் ஒழுக்கும் பொதுவாக பாரிசவாதத்துக்கான காரணமாகின்றன. இரத்த நாளத்தில் ஏற்படும் அடைப்பு இதில் 85 வீதம் காரணமாகின்றது. இப்படியான சூழ்நிலையில் மூளைக்கு 5 நிமிடங்கள் இரத்தம் போகாது தடைப்பட்டால் மூளையின் அந்தப் பகுதி இறந்துபோகுமாம்.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, தீய கொழுப்பு, புகைத்தல் ஆகிய காரணங்களால் 20 வயதில் கூட ஒருவருக்கு பாரிசவாதம் வரலாம் என்கிறார் டாக்டர் திவாகரன். முன்பெல்லாம் முதற்காரணியாக திகழ்ந்த புகைத்தல் பழக்கம் இப்போது பின்னுக்கு தள்ளப்பட்டுவிட்டதாம். ஏனையவை அதனை விஞ்சிவிட்டனவாம்.

ஆறில் ஒருவருக்கு பாரிசவாதம் தாக்கலாம் என்று கூறும் மருத்துவர்கள், இலங்கையில் புத்தளம், அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு அடங்கிய நீட்சிப் பகுதி பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் உள்ள பகுதிகள் என்று எச்சரிக்கிறார்கள்.







## பாரிசவாதத்துக்கு சிகிச்சை உண்டு

பாரிசவாதத்துக்கு சிகிச்சை உண்டு என்று கூறும் மருத்துவர்கள், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மருத்துவமனையில் அதற்கான வசதிகள் இருப்பதாக கூறுகிறார்கள். ஆனால், ஒருவருக்கு பாரிசவாதம் தாக்கி மூன்று மணிநேரத்துக்குள் அவர் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படவேண்டும் என்ற எச்சரிக்கையையும் அவர்கள் கூடவே குறிப்பிடுகிறார்கள். அதனால், இந்த பாரிசவாத தாக்கத்தை இதய அடைப்புக்கும், அவ்வளவு ஏன் ஒரு விபத்துக்கும் சமமாக கணித்து, பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு விரைய வேண்டும் என்கிறார் அங்கிருந்த மற்றுமொரு மருத்துவரான டாக்டர் என். மௌலீசன்.

2016 முதல் ஒருவருடத்துக்குள் 130 பேர் இவ்வாறு மட்டக்களப்பு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டதாகவும், அவர்களில் 31 பேருக்கு அதற்கான ஊசி போடப்பட்டதாகவும் கூறும் மருத்துவ வட்டாரங்கள், அதில் 24 பேர் முற்றான சுகத்தை அடைந்ததாக கூறுகிறார்கள்.

ஆகவே உடனடியாக மருத்துவமனைக்கு வரவேண்டும் என்பது அவர்களது எதிர்பார்ப்பு.
அதேவேளை, பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டு உடனடியாக பூரணமாக சுகமடைய முடியாதவர்களுக்கான புனர்வாழ்வு நிலையம் ஒன்று "காருண்யா" என்ற பெயரில் வாழைச்சேனையில் அமைக்கப்பட்டுள்ளதாக கூறும் மருத்துவர்கள், அதனை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை குறைவு என்றும் கவலை தெரிவித்தனர்.

இவற்றை மக்களுக்கு சொல்லவே இந்த பயணத்தை அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

-- அலுவலக நிருபர் --

## பாரிசவாதத்தில் இருந்து உயிர் பிழைக்க ஒரு பயணம்

2018 | 24ம்
மாசி மாதம் | திகதி



டாக்டர் தி. திவாகரன்.

**3 மணிநேரத்துக்குள் மருத்துவமனைக்கு வரவேண்டும் என்பது முக்கிய செய்தி.**





# இயற்கை உர உணவுகளுக்கான பாலச் சந்தை





கல்லடிப் பாலத்தின் கல்லடிப்பக்க இறக்கம் அண்மைக்காலமாக கொஞ்சம் பரபரப்பாகத்தான் இருக்கிறது. கொஞ்சம் கடைகள் அங்கு வர, சிறுவர் விளையாட்டுத்திடலும், கூடும் இடங்களும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

ஆனால், சனிக்கிழமைகளில் அங்கு ஒரு சந்தை கொஞ்சம் வித்தியாசமாக கூடிக் கலைகிறது. இயற்கை உரத்தை, உணவை மாத்திரம் கொண்ட தாவர, விலங்கு உணவுப் பொருட்கள் இங்கு விற்பனையாகின்றன.







செயற்கை உரங்களை கொண்டு அதீத வளர்ச்சியை விவசாயத்துறையில் ஏற்படுத்திய மேலைத்தேய நாடுகள், இப்போது அப்படியாக விளைவிக்கப்படும் உணவுகள் நச்சானவை, பலவிதமான பக்கவிளைவுகளுக்கு காரணமாகின்றன என்று கூறி, இயற்கை உர உணவுகளை (ஓர்கானிக்) ஊக்குவிக்கத் தொடங்கியுள்ளன. அங்கெல்லாம் எங்கு பார்த்தாலும், ஓர்கானிக் உணவு என்பது ஒரு மந்திரம் போல பரவத்தொடங்கியுள்ளது. பெரும் அங்காடிகளில்கூட அவற்றுக்கு ஒரு பக்கம் சிறப்பாக ஒதுக்கப்பட்டிருக்கும்.

ஓர்கானிக் உணவுகள் ஒப்பீட்டளவில் விலை அதிகம் என்றாலும், அவை நஞ்சற்றவை என்ற பிரச்சாரம் காரணமாக பெரும் மதிப்பை பெற்று வருகின்றன. புற்றுநோய் போன்ற சில நோய்கள் பரவுவதற்கான காரணம் நேரடியாக பெரிதும் அறியப்படாததால் இந்த வகை உணவுகளுக்கு பிரபல்யம் அதிகரித்துள்ளது.

இப்போது ஓர்கானிக்கின் தேவை ஆசிய நாடுகளிலும், குறிப்பாக எமது தெற்காசிய வட்டகையிலும் பேசப்படத் தொடங்கியுள்ளது. இங்கு அந்த வகையில் இயற்கை உரங்களை கொண்டு தாவரங்கள் பயிரிடப்படுவது ஊக்குவிக்கப்படுகின்றது.

அந்த முயற்சிகளில் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆர்வம் காட்டுகின்றன.

இலங்கையிலும் அப்படியாக நடக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியே இங்கு மட்டக்களப்பில் சனிக்கிழமை தோறும் கூடும் இந்தச் சந்தை.

ஜனதாக்ஸன், யுனிசெர்ப், வேர்ல்ட்விசன் மற்றும் ஒக்ஸ்பார்ம் போன்ற பல நிறுவனங்கள் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இதன் ஒரு பகுதிதான் கல்லடிப் பால இறக்கத்தில் அமைந்திருக்கும் பிரிட்ஜ் மார்க்கெட் (பாலச் சந்தை) என்ற இந்தச் சந்தை என்கிறார் இந்தச் சந்தைத்திட்டத்தின் இணைப்பாளரான ஏ. அனுலா. பாலத்தின் அருகில் இருப்பதால் இந்த பாலச் சந்தை என்று பெயர் வரவில்லை என்றும், இயற்கை உரவிவசாயிகளுக்கும் மக்களுக்குமான ஒரு பாலமாக இருப்பதனாலேயே இந்தச் சந்தைக்கு இந்தப் பெயர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இயற்கை உரத்தை கொண்டு விவசாயம் செய்வோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெருகல் முதல் தாந்தாமலை வரை 746 பேர் இருப்பதாக கூறும் முன்னாள் பொறியியலாளரும், சந்தைத் திட்ட செயலாளருமான ராஜகுலேந்திரன், ஆனால், இவர்கள் எல்லாம் கால் ஏக்கருக்கும் குறைவான காணிகளை கொண்ட சிறு விவசாயிகளே என்றார்.

மட்டக்களப்பு பாலச் சந்தையை பொறுத்தவரை கண்டிக்கு அடுத்ததாக அமைக்கப்பட்ட இப்படியான இரண்டாவது சந்தை இது என்கிறார்கள் அவர்கள். இயற்கையான உரம் கிடைப்பதில் உள்ள சிரமம், விவசாய செலவினங்கள் ஒப்பீட்டளவில் செயற்கை உர உற்பத்தியை விட அதிகமாக இருப்பது போன்ற காரணங்களால் இங்கு பெரிய விவசாயிகள் இயற்கை உரத்தை பயன்படுத்துவதில் தயக்கம் காட்டுகிறார்கள்.

இதனால் ஓர்கானிக் விவசாயத்தை இங்கு பெருமெடுப்பில் செய்யமுடியவில்லை என்பது இங்குள்ள முயற்சியாளர்களின் கருத்து. இதனைவிட ஏனைய ஓர்கானிக் உணவு ஏற்றுமதி நாடுகளோடு போட்டியிட்டு அவற்றை சந்தைப்படுத்துவதற்கான வழிகளும் கண்டறியப்பட்டாக வேண்டும்.

இவை இந்த சிறுவிவசாயிகளின் கைகளில் இல்லை . இதற்கு ஒட்டுமொத்தமான பாரிய நடவடிக்கைகள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் இணைந்து எடுக்கப்பட வேண்டும்.

இதனை இந்த முயற்சியிலீடுபட்டுள்ள அமைப்புக்களும் ஒத்துக்கொள்கின்றன. உண்மையில் இது ஆரம்ப முயற்சிதான் போகவேண்டிய தூரம் இன்னும் நிறைய இருக்கிறது. அப்படியான முயற்சிகள் வெற்றி பெற்றால் இந்தப் பாலச் சந்தையும் தினசரிச் சந்தையாகலாம்.



**பெருமெடுப்பில் இயற்கை உர விவசாயம் காண இன்னும் நிறைய்செய்ய வேண்டியுள்ளது.**




**ஐரோப்பிய நாடுகளில் ஒரு மந்திரமாகியுள்ள ஓர்கானிக் உணவுகள்**



# இலங்கையில் பைலாவின் தோற்றிடம் மட்டக்களப்பு?

– என்.சரவணன் –



இலங்கையின் கலாசாரத்தில் இரண்டறக் கலந்திருக்கும் பைலா இசை மற்றும் பாடல்கள் இலங்கைக்கு வந்தது மட்டக்களப்புக்கு ஊடாகத் தான். ஆனால் மட்டக்களப்பின் பெருவாரியான தமிழ் மக்கள் மத்தியில் அது நிலைபெறவில்லை. சிங்கள சமூகத்தில் இன்றும் அது இசைக் கலாசாரத்தின் அங்கமாக ஆகியிருக்கிறது.

போர்த்துக்கேயர் ஆப்பிரிக்க மக்களை அடிமையாக்கி அவர்களை வர்த்தக,



வியாபார நடவடிக்கைகள் மேற்கொண்ட நாடுகளில் அடிமைப் பணிகளில் ஈடுபடுத்தினார்கள். போர்த்துகேயூ ஆப்பிரிக்க, சிங்கள சமூகங்கள் இணைந்து உருவான புதிய சமூகத்தில் பைலா அவர்களின் இசைவடிவங்களும் ஒன்று கலந்து புதிய வடிவம் பெற்றது என்கிற முடிவுக்கு வரலாம்.

முதலாவதாக கிறிஸ்தவ சமயத்தை இலங்கைக்குள் கொண்டுவந்ததைப் போல "கப்ரிஞ்ஞா" :பைலா" என்பவற்றையும் போர்த்துகேயரே இலங்கைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். இந்த "கப்பிரிஞ்ஞா" மற்றும் "பைலா"வில் இருந்து உருவெடுத்த இன்னொரு வடிவம் தான் "இலங்கை பைலா". இதை விளக்க தனிக் கட்டுரை தேவை.

இலங்கையில் போர்த்துகேயருக்கூடாக வந்து நிலைபெற்றவர்களை பறங்கியர் என்று அழைப்பது போலவே அதன் பின் வந்த ஒல்லாந்தரின் வழிவந்தர்களையும் பறங்கியர் என்று அழைப்பது வழக்கம். போர்த்துக்கேய பறங்கியர், டச்சு பறங்கியர் என்று இரு அடையாளங்கள் ஒரு அடையாளத்துக்குள் இருப்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

இலங்கையில் மேற்கு பகுதியில் மன்னாரில் நிலைபெற்றிருந்த போர்த்துகேயரின் அடிமைக் குடிகள் புத்தளம் கடற்கரைகளில் (குறிப்பாக சிரம்பியடி பகுதியை சூழ) அதிகமாக வாழ்ந்திருக்கிறார்கள். அதுபோல கிழக்கில் நிலைபெற்றிருந்த போர்த்துக்கேயருக்கு சேவகம் செய்யும் அடிமைகளாக மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் அவர்கள் வாழ்ந்தார்கள். இன்று தமிழ், சிங்களவர்களை திருமணமுடித்து ஒன்று கலந்துவிட்டவர்கள் பலர்.

இலங்கையில் முதலாவதாக 1505இல் கரையோரப் பகுதிகளை ஆக்கிரமித்த போர்த்துகேயர் இந்த காப்பிலி இனத்தவர்களை தமது இராணுவ சேவையிலும் பின்னர் தமது அலுவலக உதவிகளுக்கும், வீட்டு வேலைகளுக்கும் பயன்படுத்தினர்.

1628இல் அவர்கள் மட்டக்களப்பில் கோட்டையைக் கட்டி நிலைகொண்டனர். ஆக போர்த்துகேயர் இலங்கைக்குள் நுழைந்து ஏறத்தாள நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் தான் மட்டக்களப்பில் நிலைகொண்டர். அப்போது தான் காப்பிலி இனமும் அவர்களின் பண்பாட்டம்சங்களும் அங்கு அறிமுகமாயின.

1938இல் போர்த்துக்கேயர் ஒல்லாந்தரிடம் கோட்டையை கைவிட்டுவிட்டு போனபின்னரும் போர்த்துகேயர் பலர் தொடர்ந்தும் அங்கு வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வழிவந்தவர்கள் தான் அங்கு இன்றும் வாழும் பறங்கி இனத்தவர்கள்.

மட்டக்களப்பில் இயங்கிவரும் மட்டக்களப்பு பறங்கியர் சங்கம் (Burgher Union in Batticaloa) ஐந்தாண்டுகளுக்கு முன்னர் வெளியிட்ட தரவுகளின் படி தற்போது 18,000 பேர் அளவில் அவர்கள் இருப்பதாக தெரிவித்திருந்தது. மட்டக்களப்பில் மாத்திரம் 2000 பேர் வரை இருக்கக் கூடும் என்று அறியப்படுகிறது. திருகோணமலையிலிருந்து அக்கரைப்பற்று வரை பரவலாக அவர்கள் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது அவர்களின் கத்தோலிக்க ஆராதனை, பிரார்த்தனை நிகழ்வுகள் சிங்கள, ஆங்கில மொழிகளில் நிகழ்கின்ற போதும் ஆரம்பத்தில் தமிழிலேயே இருந்திருக்கிறது என்று அறியக் கிடைக்கிறது.

ஆரம்பத்தில் போர்த்துகீச மொழியை தமது பேச்சு வழக்காகக் கொண்டிருந்தாலும் வாழுமிடத்து தமிழையே அவர்கள் கடைப்பிடித்து வந்தனர். பிற்காலங்களில் அது வழக்கொழிந்து போனது.

வயலின், தம்போறு, கிற்றார், ரபான், பெஞ்சோ போன்ற வாத்தியக் கருவிகளை பிரதான வாத்தியக் கருவிகளாக தமது இசைக்கு அவர்கள் பயன்படுத்துவது வழக்கம். "லான்சர்" (Lancer), "கப்ரிஞ்ஞா" (Kafringha) போன்ற நடனத்தை ஒத்த தமது பண்பாட்டு நடன வடிவத்தை நத்தார் போன்ற முக்கிய நிகழ்வுகளில் அவர்கள் இன்றும் மரபாக கையாண்டு வருகிறார்கள்.

மட்டக்களப்பு பறங்கியர் சங்கத்தின் முன்னாள் செயலாளராக இருந்த மினோன் பெர்தொலோ அது பற்றி குறிப்பிடும் போது; இந்த நடனத்திலும், இசையிலும் நிறையவே மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. மூத்த தலைமுறையினர் ஆடும் போது எந்தளவு வித்தியாசத்தைக் கொண்டிருக்கிறது என்பதை எங்களால் உணர முடிகிறது. ஏனைய புதிய இசை, நடன வடிவங்களால் அவை நிறைய திரிபடைந்து விட்டது என்கிறார்.

இன்று அவர்கள் நாடு முழுவதும் பல்லின சமூகங்களோடு கலந்து தமது அடையாளங்களை இழந்துவிட்டிருந்தாலும், அந்த அடையாளங்களை முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக சேர்ந்து கொண்டாடும் பலரும் இருக்கவே செய்கிறார்கள்.


போர்த்துகேய மொழியும், ஆப்பிரிக்க மொழிகளும் கலந்து உருவான காப்பிலி கிரியோல் மொழி (Creole) இந்த பிரதேசங்களில் வாழ்ந்த அந்த மக்களால் நெடுங்காலமாக உபயோகிக்க்கப்பட்டு வந்தது. போர்த்துகேயர் இலங்கையை விட்டுச் சென்று மூன்றரை நூற்றாண்டுகள் கடந்துவிட்டபோதும் சில இடங்களில் இவர்கள் இன்றும் போர்த்துகேய "பத்வா" (Patois) மொழியைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் சில கட்டுரைகள் மேற்கோள் காட்டுகின்றன.

பைலா இசையும், "கப்ரிஞ்ஞா" ஆட்டமும் இவர்களின் வாழ்வில் கலந்த கலை வடிவங்கள். இதுவே காலப்போக்கில் இலங்கை முழுவதும் சிங்கள சமூகத்தின் பண்பாட்டிலும் ஒட்டிக்கொண்ட ஒன்றாக ஆகிவிட்டது.

போர்த்துக்கேய, ஒல்லாந்து, ஸ்பெயின் நாட்டு இசை வடிவங்கள் தாளக் கட்டுக்கள் சேர்ந்த கலவையாக பைலா மீண்டும் புதுப் பொலிவு பெற்றது 50களில் தான்.

இலங்கையில் "பைலா"வின்






தந்தையாக அழைக்கப்படும் மேர்வின் ஒலிவர் பஸ்ரியன் (வொலி பஸ்ரியன் என்றும் அழைப்பார்கள்) இலங்கைப் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் இசைக்குழுவில் கடமையாற்றி பெரும் வரவேற்பையும், பிரபலத்தையும் பெற்றார்.

பறங்கி இன சமூகத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் லெஸ்லி புரோஹியர் (Dr. Richard Leslie De Boer Brohier 1892-1980) இலங்கையில் வாழ்ந்த முக்கிய ஆய்வாளர்களில் ஒருவர். ஐந்து பரம்பரைகளாக அவர்களின் குடும்பம் வாழ்ந்து வருகிறது. அவர் எழுதிய "கொழும்பின் முக மாற்றம்" ("Changing Face of Colombo") என்கிற நூலில் இந்த இசை, நடன வடிவங்கள் பற்றி பல இடங்களில் குறிப்பிடுகிறார். இந்த நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு கூட இன்று கிடைகிறது. தமிழில் இது போன்ற ஆய்வுகள் மொழி பெயர்ப்பு செய்வது அரிதாக இருக்கிறது.

பைலா, கப்ரிஞ்ஞா, மஞ்சா போன்றவை மட்டக்களப்பில் அல்லது தமிழ் கலாசாரத்துடன் ஒன்றாமல் சிங்கள பண்பாட்டோடு பின்னர் ஒட்டிக்கொண்டதற்குப் பின்னால் இருந்த சமூக, பண்பாட்டுக் காரணிகளை தனித்து ஆராய வேண்டும்.

# தளர்ந்த உடலில் தளர்வுறா எண்ணம்

## வாகரைவாணனின் நூல் வெளியீட்டு விழா

அந்த விழாவுக்கு நான் அழையா விருந்தாளிதான். அதில் பேசிய ஒருவர் தந்த தகவலின் பேரில் அங்கு போனேன். ஆனால், போகாதுவிட்டிருந்தால் நல்ல தகவலை தவற விட்ட குற்ற உணர்வுக்கு உள்ளாகியிருப்பேன்.

ஒரு படைப்பாளியின் ஆக்கத்தை வைத்து அவரை மதிப்பிடுவதா, அல்லது அவரது நடத்தை மற்றும் போக்கும் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமா அல்லது இரண்டுமா என்ற விவாதம் நிறைய





நாளாக தொடர்ந்து வருகின்றது. ஆனால் வாகரைவாணன் எனக்கு எந்தச் சிரமத்தையும் வைக்கவில்லை. எதனைப்பார்த்தாலும் ஒன்றாக தெரிந்தார். ஒரு மகத்துவம் தெரிந்தது.

நிகழ்வு: "மட்டக்களப்பு தமிழகம் கொண்டாடும் தமிழ்த்தாய் மணி விழா". அதன் முக்கிய அம்சம் ஒரு மட்டக்களப்பு இலக்கியவாதி எழுதிய மூன்று நூல்களின் வெளியீடு.

இந்துக்கல்லூரியின் வாயிலில் நின்று ஒரு மெலிந்த உருவம் எங்களை வரவேற்றது. தானே வந்து எல்லோருடனும் பேசி வரவேற்றது. பகட்டு தெரியாத இந்த எழுத்தாளர்தான் வாகரைவாணன். மெலிந்த, (நலிந்த?) உருவந்தான், ஆனால் மனதின் உறுதி கண்ணில் தெரிந்தது.

இவருடைய நிகழ்வுக்கான அழைப்பிதழில்கூட அவர் பெயரை எங்கும் காணோம். இதனை குறிப்பிட்டு

### "எங்கும் பெயர் இல்லை ஆனால் எங்கும் நிறைந்திருந்தார்"

விழாவில் பேசிய உதவி கல்விப் பணிப்பாளர் த.யுவராஜன் 'எங்கும் பெயர் இல்லை, ஆனால் அனைத்துன் நானே' என்று நிறைந்து காணப்படுபவர் என்று பாராட்டினார்.

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் க. பாஸ்கரன் நூல்களை வெளியிட்டு வைத்தார். அவற்றில் இரண்டு தமிழ் மொழியிலானவை, ஒன்று ஆங்கிலத்தில்.

அதில் ஆங்கிலத்தில் வந்த நூலை விமர்சித்துப் பேசிய கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்தந்தை அ. நவரட்ணம் (நவாஜி) அவர்கள் 'தமிழ் மொழியின் புகழை உலகறியச் செய்ய அந்த நூலில் ஆங்கிலத்தை ஒரு ஊடகமாக ஆசிரியர் பயன்படுத்தியிருக்கிறார்' என்று விழித்தார்.

ஆங்கிலத்தில் ஒரு நூல் மட்டக்களப்பில் இருந்து வெளிவருகின்றது என்பதே தற்போதைய சூழ்நிலையில் ஒரு பெரிய தகவல். அப்படி எழுதுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் உள்ளோர் இங்கு மிகக்குறைவு. அதுவும் இந்த நூல் முற்றிலும் கிழக்கு மண்ணை, அதன் மனிதர்களை,கருத்தியல்களை, ஊரின் இலக்கியச் சிறப்பை பற்றி பேசியிருப்பதாகவும் நவாஜி கூறினார்.

கவிதைகளும், கட்டுரைகளும் அதில் அடக்கம்.

அப்படியிருக்க, அங்கு அதனை வரவேற்க வந்திருந்தவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்பது வேதனைக்கு உரியது. 'இது ஒரு விழாவுக்கு வந்த கூட்டமாக தெரியவில்லை கலந்துரையாடலுக்கு வந்த கூட்டம் போல இருக்கிறது' என்று யுவராஜன் கவலைப்பட்டார். ஊரில் திருந்த நிறைய இருக்கிறதோ?

படப்பிடிப்பு: கருணாகரன் ஹரீஸ்

பசுமை மாறா மண்ணின், களவாடப்படும் மண்ணின் பெருமை, பாரம்பரியம் பற்றி பேச விளைபவர்களை இங்கு தூக்கிப்பிடிக்க ஆளில்லையோ என்ற கவலை எழுந்தது.

அந்த நூலில் இருந்த ஒரு கவிதை பற்றி குறிப்பிட்ட அருட்தந்தை நவாஜி 'தளர்ந்த உடலில் தளர்வுறா எண்ணம்' என்ற ஒரு குறிப்பை சொன்னார். என்னவோ இது எனக்கு வாகரைவாணனுக்கும் பொருந்தும் என்று தோன்றியது.

ஒரு பள்ளிக்கூடத்தில் நடந்த நிகழ்வு பெரியவர்கள் மாத்திரமல்ல, மாணவர்களும் நிறைய வந்திருக்கலாம். இனிமேலாவது, உழைப்பவர்கள் பாராட்டப்படுதலுக்கு நிறைய மட்டக்களப்பில் செய்யப்பட வேண்டியுள்ளது.

இதில் நிறைவான ஒரு விசயம், வாகரைவாணனின் நூல்களை வெளியிட்டு வைத்தவர்கள் அவரது மாணவர்கள். அதுவும்கூட யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்கள். அது அவர்கள் தமது ஆசானுக்கு செய்த சிறப்பு அங்கிருந்து நாம் கற்க நிறைய இருக்கிறது போலும்.

-- அலுவலக நிருபர் --

## அரங்கம் வாழ்த்துகள்

அரங்கேறும் அரங்கமே! உன்னிடம்
இருப்பதோ பல் சுவைச் சுரங்கமே!
உன் பணி வளரட்டும் வான் உயரமே!
இதில் ஒளி காணட்டும் நம் சமூகமே!

உன் எழுது கோல் ஆளட்டும் இவ்
அகிலமே!
அதில் பிறக்கட்டும் நமக்கு விடிவு
காலமே!
உரக்க ஒலிக்கட்டும் உன் குரல்
எங்குமே!
அது தரட்டும் எமக்கு சுமுக
வாழ்வுமே!

சீவகன் அவர்களின்
புதிய முயற்சி வெற்றி பெற
மனமார வாழ்த்துகிறேன்!!
வாழ்க பல்லாண்டு!!!



வானொலியும், பத்திரிகையும் ஆரம்பித்திருப்பதாக கேள்விப்பட்டு, எங்களை தேடி, எங்கள் வாசல் வந்து வாழ்த்திய ஒரு உறவு. ஆனால், அவரை முதல்மாடியில் இருக்கும் எங்கள் அலுவலகத்துக்குள் அழைத்துச் செல்ல முடியாத நிலைக்கு வருந்தினோம். எங்கள் கலையக உறவுகளுடன் அவர்.

## தன்பனம்வெளி



மட்டக்களப்பு மாவட்டத்தில் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயம் மேற்கொள்ளும் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக தம்பனம்வெளி கிராமத்துக்கான வளர்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக கிராம வரவேற்பு வளைவுக்கான அடிக்கல்லை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்கள் நடுவதை படத்தில் காணலாம். அங்கு பெண்கள் முன்னணியில் இருந்து லண்டன் தமிழர்களின் திட்டங்களுக்கான பணிகளை மேற்கொள்வது ஆரோக்கியமான ஒன்றாக பலராலும் பார்க்கப்பட்டது. புலயாவெளி கிராமத்தின் முன்னேற்றப் பணிகளிலும் ஈழ்பதீஸ்வரர் ஆலயம் ஈடுபட்டுள்ளது.










# ஓவியர்களல்ல ஓவியங்களே பேச வேண்டும்

## ஓவியர் குலராஜும் அவரது ஓவியங்களும்

1972 ஆம் ஆண்டு, சென்னை அடையாறு கலசேத்திராவில் ஒரு விழா ஒழுங்கு செய்கிறார்கள்.

அங்கு ஓவியம் கற்கச் சென்ற மட்டக்களப்பைச் சேர்ந்த 21 வயதான ஒரு மாணவனிடம் வாசலில் கோலம் போடும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. அம்மாணவனுக்குக் கோலம் பொடுவதில் கொள்ளை ஆசை;



அவன் கோலம் போடத் தொடங்குகின்றான்,

ஏற்கனவெ அங்கு போடப்பட்டிருந்த கோலத்தை சற்று மெருக்கூட்டிப் போடுகிறான். அதன் அழகு கண்டு பலரும் வியக்கிறார்கள்.

விழா ஆயத்தங்களை பார்வையிட்டுக்கொண்டு வந்த கலாசேத்திர ஸ்தாபகரன ருக்மணி அருண்டேல் அக்கோலத்தைப் பார்வையிடுகிறார்.

மாணவன் ருக்மணி அம்மையரின் வாயில் இருந்து வரும் பாராட்டுரைக்குக் காத்திருக்கிறான். அந்தக்கோலத்தை உற்றுப் பார்த்த அவர்,

"முன்னே இருந்த ஒன்றைப்போலப் போடுவது கலை அல்ல. அது புது ஆக்கமாக இருக்க வேண்டும்,அது உன்னுடையதாக இருக்கவேண்டும். மற்றவரை பிரதி பண்ணல் கலை ஆகாது. புதிதாக எதாவது செய்யும்"

என்று கூறி விட்டுச் செல்கிறார்.

மாணவன் சோர்ந்துவிடுகிறான், எனினும் அவனுள் ஒரு ஞானத்தை அந்த அம்மையார் விதைத்து விட்டுச் சென்றுவிடுகிறார். அதுதான்

"மற்றவரைப் பார்த்துக் கொப்பி பண்ணாதே நீ உனக்கெனப் புதிதாக ஒன்றை உருவாக்கு"

அந்த மாணவன் பெயர் குலராஜ்

ஓவியர் குலராஜை நான் அறிந்தது 2000 ஆம் ஆண்டுகளில்.


அப்போதுதான் அவர் தமிழ் நாட்டிலிருந்து மீண்டுவந்து மட்டக்களப்பில் தனது வாழ்வை ஆரம்பித்திருந்தார்.

அப்போது நான் கிழக்குப்பல்கலைக் கழகத்தில் நுண்கலைத் துறைத் தலைவராகக் கடமை புரிந்து கொண்டிருந்தேன். நாங்கள் வருடம் தோறும் உலக நாடக தின விழாவை நடத்திக்கொண்டிருந்தோம்.

ஒரு வாரம் அவ்விழா நடைபெறும். அந்நாடக விழாக்களுக்கு முகப்புப் பந்தல் தோரணம் அமைக்க ஒருவரைக் கண்டுபிடித்தோம்.

அவரே குலராஜ். அழகாக மரபு தவறாமல் அவர் போட்ட நாடக விழா முகப்புப் பந்தல்கள் அவர் பக்கம் அனைவரது கவனத்தையும் திருப்பியது.

### யார் இந்தக் குலராஜ்?



மட்டக்களப்பின் பயனியர் தெருவில் கோவில்களுக்கு இந்துக் கடவுளர் படங்களடங்கிய அருமையான திரைச் சேலைகளை வரைந்து கொடுக்கும் ஒருவர் 1950 களில் வாழ்ந்து வந்தார்.

அவரது பெயர் ஈஸ்வரராஜா. அவரது மகனே குலராஜ்.

தந்தை திரைச் சேலை ஓவியம் கீறுவதைப் பார்த்துப் பார்த்து அவருக்கு வர்ணங்கள் எடுத்துக்கொடுத்து, வரைய ஒத்தாசை செய்து வளர்ந்தவர் குலராஜ்.

ஓவியம் அவருக்குத் தந்தை வழி முதுசம்.

1951 இல் பிறந்த இவர், 1972 இல் தமிழகத்தில் கலாசேத்ராவில் சேர்ந்து நான்கு வருடங்கள் ஓவியம் கற்கிறார்.

ரகு பிரசாத், ஸ்ரீனிவாசலு ஆகியோர் இவருக்கு ஓவிய ஆசிரியர்களாக அமைகிறார்கள்.

இவர்களுள் ஸ்ரீனிவாசலு இந்தியாவின் புகழ் பெற்ற ஓவியரான தேவி பிரசாத் ராய் சௌத்திரியின் மாணவராவர் .

ராய் சௌத்திரி 1950 களில் சென்னை நுண்கலைகல்லூரியில் முதல்வராக இருந்தவர்.

ஐரோப்பிய ஓவிய மரபைப் பின்பற்றி முக்கியமாக ரவிவர்மா போன்றவர்களின் ஓவிய மரபில் இந்திய ஓவியர்கள் பலர் வளர்ந்த காலத்தில் இந்தியமரபில் ஓவியம் வரைந்தவர்களுள் முகியமானவர் ராய் சௌத்திரி.

இந்திய மரபில் ஓவியம் வரையும் பல புகழ்பெற்ற தமிழ் ஓவியர்கள் உருவாகக் காரணமாக இருந்தவர் இவரே. இவர்களின் ஓவியங்கள் ஐரோப்பியத் தன்மையினின்று விடுபட்டு இந்தியத்தன்மையில் அமைந்திருக்கும்.

1976 இல் தமிழகத்திலிருந்து தாயகம் மீண்ட குலராஜ் கல்லடியிலிருந்த ஒரு துணி நெய்யும் ஆலையில் ஆடை டிசையினராகப் பணி புரிகின்றார்.
அது செயலற்றுப் போக 1978 இல் வீரகேசரி பத்திரிகையில் ஓவியராக இணைந்து கொள்கின்றார். 1983 இனக்கலவரம் காரணமாக மீண்டும் தமிழகம் செல்கின்றார் அங்கு மாலை முரசு நியூஸ் பேப்பரில் ஓவியராக இணைந்துகொள்கின்றார். 1983 தொடக்கம் 1988 வரை தமிழகத்தில் வாழ்ந்த இவர் கலங்காரி, தஞ்சாவூர், மதுபானி ஓவிய மரபுகளின் தாக்கத்திற்குள்ளாகின்றார்.

அங்கு அவருக்கு ஓவியர் வீரசந்தானத்தின் உறவுகிடைக்கிறது.இதனால் குலராஜின் ஓவியப் பார்வை இன்னொரு பரிமாணம் பெறுகின்றது .

அக்காலத்தில் Textile Painting இல் பாண்டித்தியம் பெறுகிறார்



திருமண மண்டப அலங்காரம் இவருக்குப் பிடித்த ஒன்று அதிலும் பாண்டித்தியம் பெறுகின்றார்

அதேவேளை தூர்தர்சன் தொலைக்காட்சியிலும் அவருக்கு வேலை கிடைக்கிறது . அங்கு மேடை அலங்காரம், மேடைப்பொருட்கள் அலங்காரம் என்ற செட் டிசன்களில் தன் கை வண்ணம் காட்டுகின்றார்.

1988 இல் மீண்டும் தாயகம் திரும்புகின்றார் மட்டக்களப்பின் கோவில் தோரண வேலைப்பாடுகள், சடங்குகளின் போது அமைக்கப்படும் மடைகள்

அப்போது தேவாதிகளுக்கு அணிபவர்கள் அணியும் உடைகள் அதன் கடும் நிறங்கள், சடங்குகளிற் பாவிக்கப்படும் சிவப்பு நிறக் குங்குமம், மஞ்சள் நிற மஞ்சள், பச்சை நிற வேப்பிலை, சிறுதெய்வக்கோவில்களிற் போடப்படும் பல்வேறுவகையன மயில்,வேல் போன்ற முகப்புத் தோரணங்கள், அங்கு வரிசையாக வைக்கப்படும் மடைகள், அக்கோவிகளில் தெய்வஏறி ஆடுபவர்களுக்கு மேலும் உற்சாகம் அளிக்க அல்லது தெய்வத்தை ஆவாஹனம் பண்ண,அல்லது நோய் தீர்க்க மந்திரித்துக்கட்டப்படும் செப்புத்தகடுகளில் கீறப்படும் யந்திரங்கள் எனப்படும் அட்சரங்கள்

அவற்றில் எழுத்துகளை பாவிக்கும் முறை என்பன அவர் மனதைக் கவர்கின்றன இவற்றை அவர் மண்ணின் டிசைன்கள்,

மக்களின் டிசைன்கள் என்கிறார்.

இந்த மண்ணுக்கான நவீன ஓவியம் இம்மண்ணின் மரபுகளிலிருந்து உருவாகவேண்டும் வெளியிலிருந்து இறக்குமதி செய்வதிலிருந்தல்ல என்பதில் அவர் காட்டும் உறுதி எம்மை அவர்க்கு அருகில் கொண்டு செல்கிறது.



1988 இல் மட்டக்களப்பில் வண்ணாத்திப்பூச்சி பூந்தோட்டம் கனடா உதவியுடன் ஆரம்பிக்கிறது. அங்கு ஓவியத்தை மன நலத்துக்காகப் பாவிக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைகிறது.

அதில் சேர்ந்து இளம் சிறார்களுக்கு ஓவியம் பயிற்றுவிக்கிறார். அதன்பின் கனடியரான போல் கோஹனுடன் இணைந்து பயனியர் வீதியில் ஓர் கலைக் கூடத்தை ஆரம்பிக்கிறார்

### குலராஜின் ஓவியங்கள்

குலராஜின் ஓவியங்கள் கனவுலகைச் சார்ந்தவையல்ல,

அடிமன உணர்வுகளை விளங்காத ரேகைகளிலும், நிறங்களிலும் கூறுபவை அல்ல. அவை மரபு சார்ந்தவை. ஆனால் நவீனத்தன்மைகாட்டுபவை. விளங்கிக்கொள்ளக்கூடியவை. பரவசம் தரக்கூடியவை

ஈழத்தமிழ் மக்களுக்கான, இன்னொருவகையில் மட்டக்களப்பு மண் வாசனை அல்லது மக்கள் வாசனை கலந்த தனித்துவமான ஓவியங்களை உருவாக்கி வருகிறார் குலராஜ்.

தொடர்ச்சி... (பக்கம்- 18)







# சிரியாவில் இலக்கு வைக்கப்படும் பெண்களும் குழந்தைகளும்



போர் என்ற அரங்கன் ஒரு இடத்துக்கு வரும் போது கூட கூட்டி வருவது கொலை, பாலியல் வல்லுறவு, சிறாரை போருக்கு பயன்படுத்துதல் என்பன போன்ற கொடிய பேய்களை.

சிரியாவிலும் அதுதான் நடந்தேறுகின்றது. இவை எதுவும் அங்கு தப்பித் தவறிக்கூட தவிர்க்கப்படவில்லை. பலத்த முயற்சிகள் மற்றும் கண்டனங்களுக்கு மத்தியில் ரஷ்யா ஒருவாறு போரை தற்காலிகமாக நிறுத்தினாலும், அவர்களின் கூட்டாளியான அதிபர் அசாத்தின் படைகள் தொடந்து தாக்கியுள்ளன.

இந்த போரின் இலக்கு கூட இதனால் குழந்தைகள் மற்றும் பெண்கள் என்று ஆகிவிட்டது. பல குழந்தைகள் பலியான கதைகள் ஊடகங்களை நிரப்பிக்கொண்டிருக்கின்றன. நடக்கும் போருக்கான காரணமறியா அந்த பிஞ்சுகள் கருகிக்கொண்டிருக்கின்றன. நச்சு வாயு பயன்படுத்தப்படுவதான குற்றச்சாட்டுகளின் மத்தியில் மூச்சுத்திணறி, எரிகாயம் பட்டு குழந்தைகள் தவிக்கின்றன.



## உதவி வழங்குவதற்காக அதிகாரிகள் பாலியல் சகாயம் கோருகிறார்கள்

மறுபுறம் இலக்கு பெண்கள். பல பெண்கள் கொல்லப்படுவது ஒரு புறம் என்றால், அங்கு அவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்பது நெஞ்சை உருக்கும் செய்தி.

எதிரிப்படை இதனை செய்வது என்பது வழமையான கதை. ஆனால், இங்கு உதவிக்கு வந்த நிறுவனங்கள் மீது இப்போது குற்றச்சாட்டுக்கள் குவிகின்றன. போரில் பாதிக்கப்பட்டு உதவி கோரிவரும் பெண்களை ஐநா உட்பட உதவி நிறுவனங்களுக்காக பணியாற்றும் ஆட்கள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்வதாக தமக்கு தெரியவந்துள்ளது என்று பிபிசி செய்தி நிறுவனம் கூறியுள்ளது.
பெண்களுக்கு உதவிகளை வழங்கவும், அவர்களை வேறு இடங்களுக்கு பாதுகாப்புக்காக அழைத்துச் செல்லவும் உதவிப்பணியாளர்கள் அவர்களிடம் பாலியல் சகாயத்தை பெறுகிறார்களாம்.

மூன்று வருடங்களுக்கு முன்னதாக இது குறித்து எச்சரிக்கப்பட்ட போதிலும், தொண்டு நிறுவன ஆட்களின் பாலியல் தொந்தரவுகள் தொடர்வதாக தகவல்கள் கூறுகின்றன.

இப்படியான துஸ்பிரயோகங்கள் பரவலாக நடப்பதால் சிரியாவின் பெண்கள் உதவிகளை பெற தயங்குவதாக உதவி நிறுவனங்கள் கூறுகின்றன. இப்படியான நடவடிக்கைகளை தாம் பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்று ஐநாவும் ஏனைய தொண்டு நிறுவனங்களும் எச்சரித்து வருகின்றன. ஆனால், பெரும் பலன் கிடையாது.
சிரியாவின் ஆபத்தான சில இடங்களுக்கு உதவிகளை கொண்டு செல்ல மூன்றாவது தரப்பினரையும், உள்ளர்க்காரர்களையும் நம்பியிருக்க நேர்வதால் சில உதவி நிறுவனங்கள் இந்த விடயத்தில் கண்டும் காணாமலும் இருக்கின்றனவாம்.

சில இடங்களில் குறுகிய கால பாலியல் தேவைகளுக்காக தொண்டுநிறுவன அதிகாரிகள் இப்பெண்களை திருமணம் செய்வதாக சில நிறுவனங்கள் கூறுகின்றன.








விவாகரத்து செய்துகொண்ட பெண்கள், துணையை இழந்த பெண்கள், உள்ளரில் இடம்பெயர்ந்த பெண்கள் இந்த விடயத்தில் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இருப்பதாக “சிரியாவில் இருந்துவரும் குரல் 2018” என்ற அறிக்கை கூறுகின்றது.
தெற்கு சிரியாவில் இப்படியான நிலை பரவலாக காணப்படுவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

இவை குறித்த மேலதிக ஆய்வுகள் தேவை என்றும் தொண்டு நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன














# குப்பையாகிய மண்முனை தென்மேற்கு



மண்முனை பாலத்தினை கடந்து மண்முனை தென்மேற்கு பிரதேசத்திற்குள்ளே காலடி வைக்க, ஆற்றோரம் கண்ணாமரங்களின் நெருக்கத்தின் உள்ளே, கார்பட் வீதியின் ஓரத்தில் மூட்டை மூட்டையாக ஏதோ கிடப்பது தெரிகிறது. என்னவென்று பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் என்னை தூண்டியது, ஓரத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டுப் பார்த்தேன். அவை, வலை மூட்டையல்ல, எங்கிருந்தோ? யாராலோ? வீசப்பட்ட குப்பை மூட்டைகள்.

இன்னும் சிறிது நெருங்கி பார்த்தேன் ரின்களும் என் கண்முன்னே தென்பட்டன. இது தொடர்பில் ஆராயவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. பலருக்கு இவ்வாறு எண்ணம் தோன்றுவது வழமைதான், ஆனால், அவ்விடத்தினை கடந்து சென்றுவிட்டால்; மறந்து விடுவார்கள். ஆனால் இப்பிரதேசம் என்னை மறக்க விடுவதாகவில்லை. மீண்டும், மீண்டும் ஞாபகமூட்டுவதாகவே நான் பயணித்த வீதிகள் காட்சி கொடுத்தன.





பட்டிப்பளை சந்தியை கடந்து தாந்தாமலை வீதியால் சென்றேன். களிக்கட்டுப் பாலத்தின் ஓரத்தில் பொலித்தீன்களும், மூட்டைகளும், நடப்பட்டிருந்த கம்பியின் ஓரத்தில் குவிக்கப்பட்டிருந்தன. குப்பை கொட்டும் இடமோ இதுவென்று நினைத்து, கம்பியின் மேற்பகுதியை அண்ணாந்து பார்த்தபோதுதான், பாதை வளைந்திருப்பதாக கூறும் சமிஞ்சை குறியீட்டுடன் பதாதை ஒன்று காணப்பட்டது.

அங்கிருந்து செல்கையிலே இன்னோர் பதாதை பின்பக்கம்தான் தெரிந்தது. ஆனால் கீழ் பகுதியில் குப்பை மூட்டைகள், முன்பக்கம் சென்று பார்த்தேன். அதுவும் வீதி சமிஞ்சை குறியீடுதான். நின்று பார்த்துவிட்டு சைக்கிளில் ஏறிய போது, வீதியால் என்னோடு நன்கு அறிமுகமாகிய கந்தன் வந்துகொண்டிருந்தான். அவனுக்கு இந்தப்பிரதேசத்தினைப் பற்றி நன்கு தெரியும். பிரதேச பற்றும் கொண்டவன். சுகத்தை விசாரித்துவிட்டு ஏன் இவ்வாறு குப்பைகள் கொட்டப்பட்டுகிடக்கின்றன. என்று கேட்க, இங்கு, எல்லாம் குப்பைதான் என்று வெறுப்புடன் கூறினான். அவனின் வெறுப்புப் பற்றி அறிய வேண்டுமென்ற விருப்பு எனக்கேற்பட்டது.



'யுத்தத்திற்கு முன்பு பிரதேசசபையால் குப்பை எடுக்கப்படுவதில்லை . யுத்தம் நிறைவுபெற்று பிரதேச சபைக்கான தேர்தல் நடைபெற்ற பின்புதான் குப்பை எடுக்க ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு ஊருக்கு ஒருநாளைக்கு வருவார்கள், எமது வீட்டுக்குப்பைகளை கொண்டு வீதியின் அருகில் வைப்போம். எல்லா வீதிகளாலும் குப்பை எடுக்க உழவு இயந்திரம் வருகை தராது. வருகைதரும் வீதியின் ஓரங்களிலே குப்பையை கொண்டு வைப்போம். அதனை எடுத்துக்கொண்டு விடுதிக்கல் கிராமத்தில் ஒரு இடத்தில் கொட்டினார்கள். அவ்விடத்திற்கு அருகில் மக்கள் வாழுகின்றனர். அவர்களும் மனிதர்கள்தானே? குப்பையும் நிரம்பி 2017 மே முதலாம் திகதி குப்பை மேட்டில் தீயேற்பட்டுவிட்டது. இதனால் பக்கத்தில் இருந்த மக்களுக்கு சுவாசிக்க முடியவில்லை. அடுத்தநாளே (2017.05.02) குப்பை கொட்டுவதற்காக வருகைதந்த உழவு இயந்திரங்களை கொட்டவிடாமல் மறித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கிருந்த குப்பைகளையும் குழிதோன்றி புதைத்து, அவ்விடத்தினை பிரதேசசபையினர் துப்பரவுசெய்தனர். குப்பை கொட்டும் இடம்தூய்மைப்படுத்தப்பட்டதே தவிர, வீட்டுக் குப்பைகளை எடுப்பதற்கு பிரதேச சபை வருவதில்லை. ஏனென்று கேட்டபோது, குப்பை கொட்டுவதற்கு இடமில்லையென்றனர். இதனால் வீட்டின் முன்புறம் அன்று வைத்த குப்பைகள் இன்றும் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன. தாந்தாமலைப்பகுதியிலும் குப்பை கொட்டுவதற்கு இடமொன்றினை பார்த்தனர். அந்த இடத்திலும் குப்பை கொட்டுவதற்கு மக்கள் எதிர்ப்பு



தெரிவித்திருந்தனர். அதனால் இன்றுவரை குப்பை எடுக்கப்படவில்லை. இதனால் பிரதேசமே குப்பையாய் இருக்கின்றது' என்றான் கந்தன்.

**பிளாஸ்டிக் குப்பைகள் கால்நடைகளுக்கு நச்சாகிவிடலாம்**


ஆனால், அவர், பிரதேசம் குப்பையாக இருக்கின்றது என்று கூறியபோது, பலருக்கு தோன்றுவது போன்று, என்மனதிலும் வேறொரு சிந்தனைதான் தோன்றியது.

கந்தனும் தன்விடயத்தினை முடித்துவிடல்லை, "நீ கண்டது இரு இடத்து குப்பையைத்தான், இன்னும் பல இடத்திலும் இவ்வாறுதான் இருக்கின்றன' என்றான். அதனையும் கூறும்படி கேட்டபோது, மயானங்கள், ஆற்றாங்கரை ஓரங்கள், வயலோரங்கள், கலாசார மண்டபத்திற்கு அருகிலெல்லாம், தலைமுடி, வீட்டுக்கழிவுகள், விலங்குக்கழிவுகள் என பலவகையான குப்பைகளும் கொட்டப்பட்டுக்கிடக்கின்றன. எங்கெல்லாம் பொது இடங்கள் இருக்கின்றனவோ அல்லது மக்கள் குடியிருப்பு இல்லாத இடங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் குப்பைகள்தான் என்று கூறிசென்றுவிட்டார். ஓரத்தில் பார்த்தபோது பொலித்தீன்கள் பறந்து கொண்டிருந்தன. கால்நடைகளும் வீதியால் நடந்து கொண்டிருந்தன. நேரமும் மாலை 6 ஆகிவிட்டது. உரியவர்கள் கவனிக்க வேண்டும்

**படுவான்கரையே குப்பை மேடானால் இலங்கையில் ஒரு இடமும் பாக்கியிராது**

~~ படுவான் பாலகன் ~~





# கிழக்கிலங்கை பாரம்பரிய மீனினங்கள் அழிந்து வருகின்றன!

அன்றைய ஞாயிற்றுக்கிழமை கல்லடிக்கடற்கரையை பார்த்து மகிழச்சென்ற பொழுதுகள் அங்கிருந்த மீனவவாடி மீனவர்களுடன் கழிந்தது. காய்ந்த வலைத்திரட்டுக்களும், கடலோர படகுகளும், மீனவர்களின் ஏக்கமான பார்வையும் கவனத்தை ஈர்க்க, வாடி மீனவர்களிடம் சென்று லாவகமாக பேச்சுக்கொடுத்தேன்.


துயரங்களும் துன்பங்களும் மட்டுமே வாழ்வாகிப்போன அவர்களின் உரையாடலின் உண்மைத்தன்மையை

## மீன்களையும் மீனவரையும் காப்பாற்ற வழி என்ன?

மீனவர்களின் வற்றிப்போன வார்த்தைகளும், ஒய்ந்து போன கண்களும் வரட்டு தேகமும் உணர்த்தியது.

மட்டக்களப்பின் மீனவர் தொழில் வருவாய் சம்பந்தப்பட்ட பொருளாதாரம் இப்போதெல்லாம் நீடித்திருப்பதில் சிக்கலை எட்டியுள்ளது.

மனித செயற்பாட்டின் பாதக விளைவுகளும் பாரம்பரியத்துக்கு முரணான தொழில் நடவடிக்கைகளும் மீன்பிடி பொருளாதார வலுவை குறைத்துள்ளது. மீனவர்கள் கூலி வேலைகளைத்தேடி நகரத்தின் வணிக கடைகளின் கூலித் தொழிலாளியாகவும் வேலை வாய்ப்புத்தேடி வெளிநாடு செல்பவர்களாகவும் மாறி வருகின்றனர்.



இதனால் கல்லடி போன்ற மீனவ சமூகம் அதிகம் வாழும் பகுதிகளிலேயே அவுஸ்திரேலியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட மீன்கள் விற்கப்படும் நிலைக்கு இது இட்டுச் சென்றுள்ளது.

மட்டக்களப்பின் காலங்காலமாக பிடிபடும் நாற்பத்தைந்திற்கும் மேலான கடல், வாவி மீனினங்கள் அழிந்து விட்டன. மேலும் செல்வன், விரால், பனையான், குறட்டை, மீசைப்பனையான், பெட்டியான், கொக்குச்சான், சுங்கான், கூனியான், கிழக்கன், உழுவை, பாற்பறவை, கிளிமீன் போன்ற மீனினங்கள் அருகிச்செல்லும் தறுவாயில் இருக்கின்றன.

இயற்கைக்கு ஒவ்வாத மீன்பிடி முறைமைகளும் சூழல் மாசாக்கமும், இயற்கை சமனிலை குழப்பங்களுமே இவற்றிற்கு பிரதான காரணங்கள் ஆகின்றன.

சுருக்கு வலை, தங்கூசி வலை, டிஸ்கோ வலை போன்ற வலைகளின் அதிகரித்த பாவனையானது கடலிலும், வாவிகளிலும், ஆறுகளிலும் மீன் உற்பத்தியையும், மீன் விளைச்சல் கட்டமைப்பையும் சீர்கெடுக்கின்றது. மீன் முட்டைகளையிட்டு உற்பத்தியாக்கும் நீர் பரப்புகள் மீன்பிடி பகுதிகளாக தொழிற்படுகின்றன. மீன் உற்பத்தியை தூண்டும் வரன்முறைகளை மீனவர்கள் சுய தேவைகளுக்காக மீறுகின்றனர்.
டைனமைட் எனப்படும் நச்சு மயக்க பதார்த்தம் இறால் பிடிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன. இவ் மயக்க பதார்த்தமானது மீன்களுக்கு ஒவ்வாது. இதனால் மீன்கள் தமது வாழ்விடங்களை விட்டு வேறு இடங்களை நோக்கிச் செல்கின்றன.


கடல் அட்டையை பிடிப்பதற்காக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட அங்கீகாரமானது அட்டை பிடிக்கும் உரிய இடங்களை விட்டு வரன்முறை தாண்டி மீன்களின் வாழிடங்களை குழப்புகின்றன. கடல் அட்டையை உணவாக உட்கொள்கின்ற மீனினங்களும் உண்டு. மீன்களின் உணவுகள் முற்றாக அழிதல் மீனினங்களின் வாழ்தலை மாற்றுகின்றன. கடலடியில் நடந்து அட்டை பிடிப்பதால், மீன் உற்பத்தி இடங்களும், கடற் தாவரங்களும் அழிக்கின்றன.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வளர்ப்பு மீனினங்கள் வாவிகளில் விடப்படுகின்றன. அவை உள்ளூர் மீனினங்களை உணவாக உட்கொள்கின்றன. இவை உள்ளூர் வாவி மீனினங்கள் அழிதலுக்கு காரணமாகும். நீர் நிலைகளின் ஆழத்துக்கு ஏற்ப அங்கு வாழும் மீனினங்களும் மாறுபடுகின்றன. நீர்ப்பரப்பின் மேலிருந்து குறித்த ஆழம் வரை சிறிய மீனினங்களும் சற்று அதிகமான ஆழத்தில் பெரிய மீனினங்களும் வாழ்வதோடு அவை சிறிய மீனினங்களை உணவாகவும் உட்கொள்கின்றன.

சிறிய மீன்களை தங்கூசி வலைகளைக் கொண்டு மீனவர்கள் சூறையாடும் போது, பெரிய மீனினங்களுக்கு உணவு கிடைக்காமல் அவை வேறு கடற்பரப்புகளை நோக்கி செல்கின்றன.

இரவு நேரங்களில் வாவிக் கரைகளிலும், ஆற்றங்கரைகளிலும் நவீன ஒளியியற் கருவிகள் (எல் ஈ டி விளக்குகள்) ஒளியூட்டப்படுவதால் மீனினங்கள் அவ்விடங்களுக்கு மீண்டும் வருவதில்லை. ஆரம்ப காலங்களில் தீப்பந்தங்கள் பயன்படுத்தப்பட்டன. அவை பெரிய அளவிலான பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

சட்டவிரோதமான வலைகளை பயன்படுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் இருந்தும் அவை தனிப்பட்டவர்களின் தலையீட்டினால் அமுல்படுத்தப்படுவது குறைந்து வருகிறது. இவ்வாறான தொடர்ந்த மீன்பிடி போக்கு தற்காலத்தில் இருப்பவற்றைக் காட்டிலும் வருகின்ற காலங்களில் பன்மடங்கு பாதிப்பை விளைவிக்க வல்லது.
புவி வெப்பமடைதலுடன் தொடர்புபட்ட காரணங்களும் மீன் உற்பத்தியை பாதிக்கின்றன. நீரின் வெப்பச் செறிவு விகிதம் மாற்றமுறும் சந்தர்பங்களிலும் நீரோட்டங்களின் திசைகள் மாறும் சந்தர்பங்களிலும் மீனினங்கள் வேறு கடற்பரப்புக்களை நோக்கிச் செல்கின்றது.



மீனவ தொழிற் சங்கங்கள் மற்றும் மீன் வளர்தலுடன் தொடர்புடைய ஏனைய அரச, தனியார் அமைப்புக்கள் மீனவர்களுக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தாதவரை

## மீனவருக்கு மீனினங்களின் வாழ்வு முறை குறித்த அறிவு புகட்டப்பட வேண்டும்



இந்நிலை தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

அவுஸ்ரேலியாவின் ஒவ்வொரு மீனினங்களுக்கும் அவற்றின் அளவு குறித்த அளவிடை இடப்பட்டிருக்கும். அவ் அளவிடையை காட்டிலும் பெரிதாக இருக்கும் பட்சத்திலேயே அவ் மீன்களை பிடிப்பதற்கும் விற்பதற்கும் அனுமதி கிடைக்கும். இவற்றை மீறுபவர்களுக்கான தண்டனையும் வழங்கப்படும். இவ்வாறான வழிமுறைகள் மட்டக்களப்பிலும் மேற்கொள்ளுமிடத்து மீன் உற்பத்தி பெறுமானம் அதிகரிக்கும்.
ஏலவே மட்டக்களப்பின் இம் மீனினங்கள் தொடர்பான ஆய்வுகள் இடம்பெற்று ஆய்வு மாநாடுகளிலும் பத்திரிகைகளிலும் பரவலாக எழுத்துவடிவங்களில் வெளிவந்திருந்த போதிலும் மீனினங்களின் உயிர்வாழ்தலுக்கான கணிப்பீடுகள் மீனவர்களை முழுவதுமாக சென்றடையவில்லை.

இது குறித்து அக்கறை கொண்ட அமைப்புக்கள் விழிப்புணர்வு கொண்டு, அதிகாரிகளின் செயற்திறன் மேம்பட்டு, மீனவர்கள் தமது பொருளாதார மேம்பாடு குறித்த தன்னார்வத்தை அதிகரிக்கும் பட்சத்தில் மீனினங்கள் மாத்திரமல்ல, அவற்றை பிடித்து வாழும் மீனவர்களின் வாழ்க்கையும் நீடித்து நிலைத்து நிற்கும்.

~~ யோகநாதன் ஜகேன் ~~

## வலை உருவகக் கதை
### விருந்துக்குப் போய் விருந்தான கதை

பாழடைந்து கிடந்த கட்டிடத்தின் சேதமடைந்திருந்த கூரையின் மூலையில் சிலந்தி கூடுகட்டிக் கொண்டிருந்தது. நீண்ட நேரமாக அங்கும் இங்கும் ஓடி வலை பின்னிக் கொண்டிருந்த சிலந்தியைக் கவனித்துக் கொண்டிருந்த பூச்சி, "சிலந்தியாரே! நீங்கள் தங்கியிருப்பதற்குச் சிறிய இடம் ஒன்று போதும்தானே! ஏன் பெரிய இடமாகப் பிடித்து வலை பின்னுகின்றீர்கள்" என்று விசாரித்தது.



சிலந்தி கூடு கட்டும் வேலையில் தன் கவனத்தை ஊன்றியபடியே பூச்சியிடம் "சிறிய இடமொன்று எனக்குக் குடியிருக்கப் போதும்தான். ஆனால் வீட்டுக்கு வரும் விருந்தினர்களை வரவேற்க வேண்டாமா? அவர்களுக்காகத்தான் கூட்டைச் சற்றுப் பெரிதாகப் பின்னுகிறேன். வீடு கட்டி முடிந்ததும் முதல் விருந்தாளியாக உன்னைத்தான் கூப்பிட விரும்புகிறேன்." என்றது.

சிலந்தியின் அழைப்பில் பூச்சி ஆனந்தம் கொண்டது.
கூட்டைக் கட்டி முடிந்ததும் சிலந்தி பூச்சியை 'வாருங்கள்" என்று மிகவும் பவ்வியமாக அழைத்தது.

பூச்சியும் முதல் விருந்தாளி தான்தான் என்ற பெருமையுடன் பறந்து சென்று சிலந்தி வலையில் அமர்ந்தது. வலையில் கால்கள் சிக்கிக்கொண்ட பூச்சி வலையின் நடுவில் இருந்த சிலந்தியிடம் தன்னை வந்து அழைத்துச் செல்லும்படி வேண்டிற்று.

விரைந்து வந்த சிலந்தி தன் கொடுக்குகளை பூச்சியின் உடம்பில் பாய்ச்சிற்று. பூச்சி துடிதுடித்து இறந்தது. விருந்தாளியாக வந்த பூச்சி சிலந்திக்கு விருந்தாகிப் போனது.

~~ செங்கதிரோன் ~~

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...



## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 02

அதெப்பிடி நல்லதண்ணிக்கிணறும், நல்லகனி மரமும், நாலு பக்கத்தாலயும் கயிட்டப்படுதோ அது போலதான் நல்ல மனிசருக்கும் வாழ்வு வந்தாயன்ன தாழ்வு வந்தாயென்ன நாலு சனம் பக்கத்திலயிருக்கும். என்ர அப்புக்கு சீனியாத்தைக்கு மட்டக்களப்பால மாப்பிளை கொணந்தது அவ்வளவா புறியமில்லை. ஏண்டா எங்கட அம்மா சீக்காழியா இருக்கக்க சாத்திரி சொன்னானாம் "இது பாவப்பட்ட சென்மந்தான். நீங்களும் பிள்ளை வரங்கேட்டு அழுததில பொங்கிக்கழிச்ச கழிவ உங்கட சட்டியில எறிஞ்சிட்டான் ஆண்டவன் எண்டு.அப்பவே அம்மாட தங்கச்சிய தான் எடுக்கவெண்டு அப்பு அடிபோட்டிட்டாராம். அதையெல்லாம் முறியடிச்சு மட்டக்களப்பான் வந்திட்டான் எணடதில கொஞ்சமென்ன ஞாயமான கடுப்புத்தான்.

"மட்டக்களப்பானுக்கு நாக்கில சரசுவதிதான் நிக்கிறா" எண்டு ஆத்தை சொல்லுவா. என்ன காரியமெண்டா, தெக்கால அடி வானத்துக்க ராமின்னல் தெறிச்சா மழை பின்னுக்காப் போயிடும். கமக்காரன் கலப்பையில கொழுவை மாட்டி வைக்கிறதில்லை. உழவு காலம் முடிய கழத்தி வைப்பான். ஏண்டா கொழு இரும்பு. மரத்தோட கிடந்தா கெதியா துருவேறிடும்; அது மரத்தையும் திண்டிடும்; மழை துலைச்சுப்போச்சிண்டா கொழுவைக்கழத்தி வைக்க வேணும். அதால, இந்த மின்னலுக்கே "கொழுக்கழத்தி மின்னல்" எண்டு பேரே வந்திட்டுது.

"சுசை மின்னல் அப்ப பகல்ல வராதா?"

"வரும்மணி! வெய்யிலுக்கு புலப்படாது."என்பார் அவரிட்ட நான் கேள்வி கேக்கிற நேரம் கண்ணை இடுக்கிக் கொண்டு ஒரு புன்னகையோட பேசுவார். ஆரும் அவரோட கதைச்சா அவற்ற வாயால அவிண்டு கொட்டுப்படுறதெல்லாம், முத்தும் மணியுந்தான். என்னதான் அவரில அப்புவுக்கு பொறாமை எண்டாலும் அவற்ற காலம் மாறமாற அதுகளும் மாறும் எதுகும் நிரந்தரமல்ல என்பார். பின்நாளில நான் நெருங்கிப்பழகி பிரிஞ்சுபோன அநேகமான பிள்ளைகளின் சவால் நிறைந்த வாழ்க்கையள்

பழைய மக்களின்ர வாழ்க்கையளோட ஒப்பிட்டு பாத்தா எனக்கு ஒரே ஒரு சந்தேகந்தான் ஏன் மட்டக்களபெண்டா புதுமையான மனிதர்களை மட்டுமே கொண்டிருக்கு

எங்கட மதிரங்குளத்து கந்தையர் கட்டினதும் ஒரு மட்டக்களப்பு மனிசிதான். மெலிஞ்ச உயரமான பொம்பிளை அவவோட நாங்கள் அரிவிவெட்டுக்கு போனடத்தைதான் பழக்கம்; மத்தியானம் எல்லாரும் கட்டுச்சோறு கொண்டு போவம். பன்னெண்டுமணிக்கு குளக்கட்டில இலுப்ப மரமும் கூழாவும் படர்ந்த இணல்ல, அவரவர் கட்டுச்சோத்தை பிரிப்பம். சொல்லி வைச்சமாதிரி எல்லாரும் பச்சையரிசிச்சோறுதான்.

கானக்கொச்சிக்காய் சம்பல்
குருவித்தலைப்பாகல் பிரட்டல்





நல்லதோர் ஈட்டிவாள் கையிலெடுத்து

பாசக்கயிறுருவி பண்டிக்கு நாய்விட்ட

பரமசிவன் ஐயனைப் பாடியே வாறோம்...."

கந்தையற்ற மனிசிக்கு தேன்மாதிரி குரல் எங்கதான் உந்தப்பாட்டெல்லாம் பழகின நீங்கள் எண்டு நாங்கள் கேப்பம்;

"மீன்குஞ்சிக்கு நீந்த செல்லியாமணி குடுக்கிற" என்பா எப்பிடி கந்தையாண்ணைய கட்டின நீங்க எண்டு கேட்டமோ தூசணத்திலயும் பாட்டு வரும்

**அரிஞ்சரிஞ்சி நிலவெறிக்க....**
**அவளிருந்து பாயிழைக்க...**
**துண்டு துடைதெரிய...**
**தொடர மனங்கூடுதில்ல....**

"மட்டக்களப்பானுக்கு
நாக்கில சரசுவதிதான்
நிக்கிறா;

அந்தாள் எந்த ஒரு காரியத்துக்கும் வாக்குச் சொன்னா சொன்னதுதான் பிசகாது. எழுதப்படிக்க தெரியாதுதான் ஆனா என்ன வானத்தை அண்ணாந்து பாத்து ஒவ்வொரு வாகடம் சொல்லுவார் தப்பாது. என்ன காத்தோடுறதையும் பூமியில நிக்கிற மரஞ்செடியள் நிக்கிற நிலையிலயும் பூச்சி பட்சியள் பறக்கிறதிலயும் வச்சே ஆள் கணிச்சுச் சொல்லுவார்.

உப்பிடித்தான் கமக்காறர் கலப்பைய உழவுக்கு நாள் வர இணக்கிறது. மழைக்காலம் வருதெண்டு கலப்பைக்கு மேழிவெட்ட பூவாலு போக வெளிக்கிடுறான் சின்னாம்பியர் வந்து,

" ஏண்டா அவதிப்படுறா...பொறு";
எண்டார். அவனுக்கு கோவம்

"என்ன சின்னம்பியண்ணை மனிசர் நாள்வேலைக்கு வெளிக்கிட நச்சுப்பல்லி சொல்லுறமாதிரி சொல்லுறாய்" எண்டு சினக்க ,

அந்தாள் சொல்லிச்சு, "எட பொடியா இப்போதைக்கு மழை இல்லடா.. ராவு ராவா கொழுக்கழத்தி மின்னல் தெறிக்கு காணல்லயா?" எண்டு.

நான் கேட்டன் அதென்ன சீனியப்பு கொழுக்கழத்தி மின்னல்" எண்டு.

" மகள் இஞ்ச வாமணி! அந்தா வாயால சொல்லுற கதையளில அபார நம்பிக்கை. ஏன்ன மட்டக்களப்பாருக்கு சரசுவதி வாலாயம், சாத்திரங்கள் மந்திரங்கள் எண்டு மட்டுமில்ல அவங்கள் அனுபோகமுறையளிலயும் விண்ணங்கள்தான் அந்தாளோட நீ கதைக்கிற ஒவ்வொரு நாளும் ஏதாவது புதிசா அறியலாம் என்பார்.

சீனியப்பு கைரேகை



பாக்கிறதில்ல
ஆனா சாத்திரம் சொல்லுவார். நல்லா பழமொழியள் சொல்லுவார் எனக்கு சின்ன வயதிலயே வில்லன் வீரப்பா மாதிரி சிரிக்கிறது பிடிக்கும். அட்டகாசமா சிரிப்பன் என்ர அம்மா,

அடிக்கடி சிரிப்பாளாகில் அடிமடி திறப்பாளாகில்

வெடுக்கெனப்பாய்வாளாகில் வேசையென்றெண்ணலாமே" என்று ஒருநாள் ஏச, சீனியப்பு சிரிச்சுப்போட்டு... "நீ சிரிபிள்ளை.வாய்விட்டுச்சிரிச்சா நோய்விட்டுப்போகும்" எண்டார். எல்லாம் மனிசர் எழுதிவைச்ச சாத்திரங்கள்தான்

சிறயாக்கருவாடு போட்டு சுண்டின கிழங்கு, வட்டுக்காய் வத்தக்குழம்பு. ஊறுகாய் எண்டு எவ்வளவு வகை. எல்லாற்ற பொதியும் எல்லாருக்கும் பங்கு அந்த நாளையில பொலிதீன் கிடையாது. வாழையிலைய வாட்டிக்கட்டி நல்ல வெள்ளை வேட்டித்துண்டில பொட்டலமாக்கட்டின சாப்பாடு.

இந்த கறிவகைய கமுகமடல்ல, காஞ்ச வாழைத்தடல்ல எண்டு கட்டடிக் கொண்டருவினம் அந்த நாளையில மோட்டர்மினுக்கு(மோல்டட்மில்க்) போத்தல்லயும் குழம்பு வரும்; மறுபடியும் பின்னேர வேலை ரெண்டரைக்குத்தான் துவங்கும்; அதுவரைக்கும் அந்த இணல்ல படுத்து ஒருகண் உறங்கிறவையும் உறங்காம தலையில பேன் பாக்கிறவையும், ஏதும் பாட்டுப்பாடுறவையும் எண்டு நல்ல கலகலப்பா போகும்.

"கூழாவடியாம் குளிர்ந்த நிழலாம்
குளக்கட்டு நீளம் புளியமிணலாம்...."

என ஒருவர் இழுக்க. மற்றவர் தொய்யவிடாமல்

"யாரடா எங்கள்
குளக்கட்டுத்தண்ணிலே....."என உரப்ப,
முன்னர் பாடியவர், "நாங்கள்தான் அந்த
சிந்து கவி பாடியோர்" எனத்தொடர,

நாயைப்பிடித்ததன் தௌளையுறந்து...

எண்டு வேலிக்க நிண்டு பாடினா என்ன மக்கா செய்யிற என்பா. பின்நாளில் அவாவின்ர தம்பியும் இந்த ஊருக்கயே கலியாணம் முடிச்சு வந்திட்டார்.

மட்டக்களப்பு என்று பிரிச்சு பாக்க முடியாத அளவுக்கு கலியாணபந்தத்தில நிறையப்பேர் இணைஞ்சிருக்கினம். பிறகு பாத்தா கலியாணம் செய்து வெளியால் வந்தவையவிட மட்டக்களப்போட ஐக்கியமானவைதான் அதிகம் மட்டக்களப்பார் பேசுற தமிழ் சங்ககாலத்து சொற்களை மொழிவழக்குகளை நிறைய கொண்டிருக்கிது

கத்தரிக்காயை வழுதுணங்காய் எண்டுதான் பெத்தாச்சி சொல்லுவா. உரல தவாரத்தில விடு உலக்கைய அசைவில வை என்பா,

"என்ர பேரன் பலகாரம் சுட்டு மணந்தா,.. மூசாப்பில கண்டிடுவான்"இப்பிடி இவா பேசுற கதையள வாயைப்பிளந்து கொண்டு கேப்பம். நல்ல தமிழும். பேசயுக்கயே கவிநயமும், பிஞ்சு மனமும் இருக்கிறதாலதான் இன்னும் கூட நசிந்து வாழ வேண்டியிருக்கிறதோ...நிமிருவமோ
(பாப்பம்)

**~~ தமிழ்க்கவி ~~**






ஊர் உயர கோல் உயரும் என்பது தமிழ் மூதாட்டியின் வாய்மொழி.

ஊர் உயர ஊடகங்கள் உயரவேண்டும் என்பதே நவகாலத்தின் தேவையாகும்.

உலக அரங்கத்தில் கோல் உயர உயிர்ச்சத்துள்ள ஊடகங்கள் ஆற்றும் வகிபாகத்தைக் காணமுடியும்.

உலக அரங்கம் உயர ஊர் உயர ஊடகம் உயர வேண்டும்.

ஊடகம் உயர அதில் உள்ளவர்கள் உயர வேண்டும். அதில் வரும் ஆக்கங்கள் உயர வேண்டும். அதனை வாசிக்கும் வாசகர் உயர வேண்டும். அதனால் அதன் வளம் உயர வேண்டும்.

ஊடகத்தின் பணி உயர்வானது. அதில் நம்பகத்தன்மை முக்கியமானது ; முதன்மையானது என்பர்.

மட்டு மெயில் (அஞ்சல் புகையிரதம் அல்லது தொடரூந்து ) எத்தனை மணிக்கு கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்படும் என்பதை ரயில் நிலையத்தில் கேட்பதைவிட இலங்கை வானொலி நிலையத்திலுள்ள அறிவிப்பாளர் ஒருவரைக் கேட்டால் அவர் சரியாகச் சொல்வார் என்ற நம்பிக்கை மக்களிடத்திலிருந்தது

இத்தனைக்கும் அந்த அறிவிப்பாளர் வானொலியில் திரைப்படப் பாடல்களை மட்டும் ஒலிபரப்பி அது என்ன படத்தில் வந்தது என்பதையும் பாடியவர்களையும் பொதுவாக நிகழ்ச்சிகளில் சொல்லும் அறிவிப்பாளர் மட்டுமே.

செய்திப்பிரிவு , சினிமாப்பாட்டுப்பிரிவு என்று பிரிவுகள் உள்ளன என்று தெரியாத நேயர்களே அப்படி ஒரு அறிவிப்பாளரைத் தொடர்புகொண்டு தொடரூந்து நிலைய நேரசூசியைக் கேட்டுள்ளார்கள் .

வானொலி என்ற ஊடகத்தில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையே இது காட்டி நிற்கிறது.

ஆனால் இன்று அத்தகைய நம்பகத் தன்மை ஊடகங்கள் மீது மக்களுக்கு உள்ளனவா என்பதை நாம் அனுபவ ரீதியாகக் காணலாம்.

சமூக வலைத்தளங்கள் ஊடகங்களை விட விரைவானவையாக இருப்பதால் நம்பகத்தன்மை அவற்றில் அதிகம் உள்ளது. ஆனால் அவை சரியானவற்றைத் தருகின்றன என நம்பிக்கை கொள்ளும் வகையில் அவற்றின் விரைவு முன் நிற்கிறது.

நியூசீலாந்துக்கு புதிதாக அதி நவீன வசதி கொண்ட இரட்டைதட்டுப் பேரூந்துகள் இலண்டனிலிருந்து இறக்கப்பட்டன. அவை இறக்கப்பட்டமை, சேவைக்கு வந்தமை போன்ற செய்திகளை இங்குள்ள இதழ்களும் வானொலி தொலைக்காட்சிகளும் வெளியிட்டன.

ஆனால் சேவைக்கு வந்த சில நாட்களில் ஒரு பஸ் - மரம் ஒன்றின் கோப்பை முத்தமிட்டு அதன் கண்ணாடி சாடையாக நொறுங்கிவிட்டது.

இந்தச் செய்தி உடனடியாக முகநூலில் வெளிவந்த பின்னர் தான் தொடரூந்துக் கட்டுப்பாட்டகத்திற்கு தெரியவந்ததாக சமூக வலைத்தளங்கள் பற்றி அண்மையில் வானொலியில் உரையாற்றிய ஊடகதுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் சொன்னார்.

சமூக ஊடகங்கள் இத்தைகைய விரைவான செய்திகளைத் தந்தாலும் அவை நடுநிலையான சமூகப்பாங்குள்ள தகவல்களைத் தருகின்றனவா என்பது கேள்விக்குறியே என்பது அவரது கருத்து.

தமிழர் சமூக அரசியலில் நம்மிடம் இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

எனவே ஊடகங்கள் சமூக வலைத்தளங்களுக்கு அப்பால் ஊடகங்கள் செய்யவேண்டிய பல செயற்கரிய செயற்பாடுகள் உள்ளன.

சமூக ஊடகங்களில் ஒரு கருத்துக்கு உரியவர் அதனை ஒரு நோக்கோடு இடும்போது - அதற்கு பின்னூட்டல் செய்பவர்களின் கருத்துக்கள் அவருடைய கருத்தின் நோக்கத்தை மீறி வேறு எங்கெல்லாமோ சென்று கருத்துப்பிறழ்வினை உருவாக்கும் பணியையே அவை பொதுவாக மேற்கொள்வதை நாம் காணலாம்.

இந்தப்பணியை பொதுவான ஊடகங்கள் செய்யமுடியாது.

இத்தைகைய விரைவான சமூகத் தளங்களையும் தாண்டிய சமூகத்தின் பால் கொண்ட பணியினை மேற்கொள்ளவேண்டிய தேவை ஊர் உயர உழைக்கும் நோக்கில் வெளிவரும் ஊடகங்களுக்கு உண்டு.

ஓர் ஊர் தன்னிறைவும் மன நிறைவும் கண்டு முழுநிறைவு கொண்ட ஊராய் வாழச் செய்வதன் பங்கு ஊடகங்களுக்கு உண்டு.

ஒரு காலத்தில் ஊர் என்றால் என்ன? ஊர் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் என்ன? என்பதை நம்மில் பலர் படித்துள்ளோம்.

ஊரின் மக்கள் அயல் ஊர் மக்களிலிருந்து பலவகையிலும் கீழ் மட்ட நிலையில் வாழும்போது,

ஊரின் குடிமக்கள் வாழ்வாதார பிரச்சினைகள் அதிகமாக இருக்கும்போது ;

ஊரில் உள்ளவர்கள் அயலிலுள்ள கள்வர்களாலும் கொள்ளையர்களாலும் சூறையாடப்படும்போது,

ஊர் மக்கள் அந்த ஊரை விட்டு வேறு ஊருக்கு பெயர்வதற்கு விரும்புவதும் இடம்பெயர்வதும் வழக்கமாயிற்று.

இதனால் ஊர்கள் அழிந்தன. சில ஊர்கள் புதிதாகத் தோன்றின.

காலம் காலமாக நீண்டு விரிந்து வாழும் மக்கள் கூட்டம் இன்றைய காலத்தில் அப்படி புலம்பெயர்வது என்பது கடினமான காரியமாகும்

அந்தக் காலத்தில் ஊர் மக்களுக்கு தெம்பு கொடுப்பதற்கும் நின்று நிலைக்க வழி சமைப்பதற்கும் வழி கட்டுவதற்கும் ஊடகங்கள் இருக்கவில்லை.

இன்று சரியான ஊடகம் ஒன்று இருக்கும் பட்சத்தில் ஊர்கள் அவை அழியாமல் உயர்ந்த ஊராக எழுந்து நின்றுகைக்கும் ஊராக நிமிர்ந்து நிற்கும்.

உலக அரங்கில் தம் ஊரின் பெயர் நிலைத்து உலகம் உயர அது வழி சமைக்கும்.

இன்றைய காலத்தின் தேவையாக வருகின்ற "அரங்கம் " முன்னால் நான் குறிப்பிட்ட பல பணிகள் உள்ளன.

1)வாசிக்கும் பழக்கத்தையும் , எழுதும் பழக்கத்தையும் முதலில் இளம் சந்ததியினருக்கு அரங்கம் தர வேண்டும். அது எப்படி என்று சொல்வதற்கு நான் ஆலோசகன் அல்ல . இதனை நடத்துபவர்கள் என்னைவிட அனுபவ ரீதியாக இவற்றின் பயன்களை நன்கறிந்த ஆலோசகர்கள்.

2) பாடசாலை மட்டத்தில் அரங்கத்தின் அறிமுகத்தையும் வாசக வட்டங்களையும் உருவாக்கும் வகையில் அது தனது பக்கங்களை வடிவமைக்க வேண்டும்.

3) எனது ஊர், எனது மண், எனது இயற்கை , எனது மரம், எனது புற்கள் எனது செடிகள் எனது காகம் எனது பறவை என்ற உணர்வை ஒவ்வொரு வாசகர் இடத்திலும் உருவாக்க வேண்டும்.

4) பெற்றோரை பிள்ளைகள் மதிக்கவும் பிள்ளைகளை பெற்றோர் மதிக்கவும் கூடிய செய்திகளையே இடவேண்டும். சமூகத்தின் தேவைகளுக்காக தணிக்கைகள் தவிர்க்கமுடியாதவை.

5) மகளிருக்கு வலுவூட்டும் செய்திகளை மட்டுமல்ல அனுபவ கட்டுரைகள் நேர்காணல்களை வெளிநாட்டு ஊடகங்களிலிருந்து மொழிபெயர்ப்பு செய்யவேண்டும் (இதற்கான மொழிபெயர்பாற்றல் சிறப்புறப் பெற்றவர்கள் அரங்கத்திடம் உள்ளனர் )

6) எனது அடையாளம் , எனது பெற்றோர், எனது பெயர்கள், எனது வேர் என்ற விடயங்களில் அரங்கம் வித்தியாசமான பணிகளைச் செய்யலாம். வெளிநாட்டு ஊடகங்கள் -உதாரணமாக நியூசீலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வெள்ளையர்கள் முதல் அனைவரும் குடியேற்ற வாசிகளே. வெள்ளையர்கள் தங்கள் மூதாதையர்களின் வேர்களைத் தேடுகின்றனர். அவர்கள் எங்கு இருந்தனர், வாழ்ந்தனர் என்ற விபரங்களை தேடும் பணியில் ஊடகங்கள் உதவுகின்றன.

அரங்கம் தோன்றும் மண்ணில் தங்கள் மண்ணை இழக்கும் மக்கள் தங்கள் மண்ணையும் தம் மூதாதையர் வாழ்ந்த ஊர்களையும், எல்லைகளையும், அவர்கள் திரிந்த கோவில்களையும், வழிபாடுகளையும், சடங்குகளையும், பண்பாடுகளையும் ஓரளவேனும் பதிந்து தம்மை அறிவதற்கு அரங்கம் உதவ வேண்டும்.

6) தேசிய ஊடகங்களின் கல்விப்பணியை விட பிரதேச ஊடகம் ஒன்றின் கல்விப்பணி மிகவும் வேறுபட்ட ஒன்றாம். தேசிய ஊடகம் பத்தோடு பதினொன்றாக தனது பக்கத்தில் வெளியிடும் " பாடம் ஒன்றின் வினாத்தாள் " பக்கத்திற்கும் பிராந்திய ஊடகத்தின் இத்தகைய பக்கத்திற்கும் நிச்சயமான வேறுபாடு இருக்க வேண்டும். இருக்கும். அப்படி வேறுபாடு இல்லாத பட்சத்தில் தேசிய ஊடகத்திற்கும் பிராந்திய ஊடகத்திற்கும் வேறுபாடு இருக்க முடியாது.

இந்த வேறுபாட்டைக் காட்டும்போது தான் அரங்கம் தனது சமூகத்தின் அங்கமாகும். அது எப்படி என்பதை நான் விளக்க வேண்டியதில்லை . அதனைத் தெரிந்தவர்கள் அரங்கத்தினுள் உள்ளார்கள்.

7) போராளிகளின் குடும்பங்கள், விதவைகள் , சமூகத்தினால் கைவிடப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விபரங்கள் அரசியற் பிரதிநிதிகளிடம் சரியான கணிப்புடன் இருக்குமா என்பது பலரிடமும் இன்றுள்ள கேள்வி.,
அரங்கம் அந்தப் பணியை முதலிற் செய்ய வேண்டும். ஏனெனில் அவர்களும் இதன் வாசர்களே.

தேசிய தினசரிகளுக்கு இந்தத் தரவு அவசியமில்லாதது. அதன் முதலாளிமாருக்கும் இங்கு குறிப்பிட்டவர்களின் உதவி என்றைக்கும் தேவைப்படாத ஒன்று.

ஆனால் வலம் வரும் உலகில் தினமும் சூரியனைப்பார்த்துச் சிரிக்கவிருக்கின்ற ஊரில் இவர்களும் சிரிக்க வேண்டும். அதனால் அரங்கத்திற்கு இவர்களின் தேவை தேவை.

ஊடகம் பற்றி பாரதி சொன்னார், ஆதித்தனார் சொன்னார் , பி பி சி செய்தியாளர் சொன்னார் என்று மேற்கோள்கள் காட்டி இக்குறிப்பை நடத்திச்செல்ல நான் விரும்பவில்லை.

"அறம் செய்ய விரும்பு" என்று

தொடர்ச்சி... (பக்கம்-18)

# மாய்ந்து, மாண்டுபோனவர்கள் சொன்ன பாடம்

## அழகிய மாந்தீவு மனிதர்களால் ஒதுக்கிவைக்கப்பட்டவர்களின் வாழ்விடம்

எண்பதுகளில், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலம். அந்நாட்களில் அங்கு வழிகாட்டிகள் (Pathfeinders) என்று ஒரு சங்கம் இருந்தது. எங்கள் அதிபர் பிரின்ஸ் காசிநாதரின் சிந்தனை வடிவம் அது.

'நீ சமூகத்தினால் உருவாக்கப்பட்டவன். எனவே சமூகத்திற்கு எப்போதும் பிரதியுபகாரமாயிரு' என்பதுதான் அந்தச் சங்கத்தின் நோக்கம்.

புளியந்தீவுக்கு சற்று அப்பால் மாந்தீவு என்று ஒரு தீவு உண்டு. அது மனிதர்களின் குடியிருப்பற்ற தீவு. அந்தத்தீவுக்கும் வேறுபகுதிகளுக்கும் எதுவித தொடர்பும் கிடையாது. அங்கு சமூகத்தினால் ஒதுக்கப்பட்ட சில மனிதர்கள் வாழ்ந்திருந்தனர். ஒரே ஒரு படகுமட்டும் த்தேவைப்பட்டால் அங்கு சென்றுவரும்.

இலங்கையின் மிகச்சொற்பமான தொழுநோயாளிகளுக்கான வைத்தியசாலை அங்கு அமைந்திருந்தது. எதுவித வசதிகளும் இல்லாத வைத்தியசாலை. தொழுநோய்கண்டவர்களுக்கு மீட்சி இருக்காத நாட்கள் அவை. நோய்த்தொற்று ஏற்பட்டதும் அங்கு வருபவர்கள், நோய்முற்றி, அங்கங்கள் உருக்குலைந்து, அழுகி கோரமான மனிதவுடல்களுடன் இறுதியாய் மூச்சடங்கும்வரை அங்குதான் வாழவேண்டும். அவர்களுக்கான சவச்சாலையும் அங்குண்டு. நோய்க்கு இன, மத, மொழி வேறுபாடுகிடையாதல்லவா.

இந்த தொழுநோயாளர் வைத்தியசாலை ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்டது என்றே நினைவில் இருக்கிறது. அண்மையில் கொழும்புக்கு அருகே உள்ள Hendala தொழுநோயாளர்



வைத்தியசாலையில் ஒருவர் 70 வருடங்களாக வாழ்ந்திருந்ததாக அறியக்கிடைத்தது. அந்த மனிதரின் வாழ்க்கைக்குள் என்னைப் பொருத்திப்பார்க்கிறேன். எத்தனை கொடுமையானதாக அவருடைய வாழ்வு இருந்திருக்கும். எத்தனை கொடியது சில மாந்தர்களின் யாக்கை.
முதல் நாள் நாம் அங்கு அழைத்துப்போகப்பட்டபோது வாவியைக் கடக்கும்வரை மனதில் இருந்த குதூ கலமான மனநிலை அங்கு வாழ்ந்திருந்த



மனிதர்களைக் கண்டபோது அகன்று போனது. உருக்குலைந்த கை கால்விரல்கள், மூக்கு, வாய், கோரமான முகங்கள் என்பன எம்மை அதிர்ச்சியான ஒரு மனநிலைக்குள் தள்ளியிருந்தன.
40 வருடங்களின் பின்பும் அந்தக் காட்சி இன்றும் நினைவில் நிற்கிறது.

தொழுநோய்பற்றி வைத்தியர் ஒருவர் உரையாற்றினார். எமது அச்சங்கள் அகன்றபின் சிரமதானம் ஆரம்பிக்கப்பட்டது. குப்பைகளை அகற்றினோம், கான்களை, தங்குமிடங்களை சுத்தப்படுத்தினோம். அதன்பின்பு 2 – 3 தடவைகள் அங்கு சென்றுவந்தபின் அங்கிருந்தவர்களுடன் ஒருவித உறவு ஏற்பட்டிருந்தது. எமது வருகைக்காக அவர்கள் காத்திருந்தார்கள். நாம் அங்கு செல்வதற்கு காத்திருந்தோம். அவர்களின் கண்களில் வாஞ்சை ஒளிந்திருந்து எம்மை பார்த்துக்கொண்டிருந்து.

மாந்தீவினுள் புத்தவிகாரை, மசூதி, கோயில் ஆகியன இருந்தன என்றே நினைவிருக்கிறது. நோயின் பிடியில் இருந்தும், மனவலிகளில் இருந்தும் விடுபட அவர்கள் இறைஇல்லங்களை நாடியிருக்கக்கூடும். கையறுநிலையில் மனிதர்களுக்கு அனுமானுஷசக்திகளில் அதீத நம்பிக்கை எற்படுவதுண்டல்லவா.

வருடக்கணக்கில் அங்கங்கள் அழுகி உருக்குலைய உருக்குலைய ஒரு சிறு இடத்தில் வாழ்ந்து முடிந்த அந்த மனிதர்களின் மனநிலைகள் எப்படி இருந்திருக்கும் என்று நினைத்துப்பார்க்கிறேன். எத்தனை வேதனையான வாழ்க்கையாக இருந்திருக்கும் அது.

மனிதனுக்கு இன்னொரு மனிதனின் அன்பு, ஸ்பரிசம், அரவணைப்பு என்பன எத்தனை முக்கியமானது என்பதை காலம் எனக்கு கற்பித்திருக்கிறது. அவர்களை நினைத்துப்பார்க்கிறேன் எத்தனை எத்தனை ஆண்டுகள் இன்னொரு மனிதனின் அன்பு, அரவணைப்பு, ஸ்பரிசமின்றி வாழ்ந்து கழித்திருப்பார்கள். எத்தனை கொடுமையான நிலை இது. இதைவிட வறுமையான வாழ்க்கையேதுமுண்டா?

கடந்த வருடம் ஒரு மாலை எனது அதிபருடன் உரையாடிக்கொண்டிருந்தபோது, சஞ்சயன், உனக்கு, மாந்தீவிற்கு நாம் செல்வோமே அது நினைவு இருக்கிறதா? இப்போது அங்கு ஒருவரோ இருவரோதான் இருக்கிறார்களாம் என்றார். அவரது கையைப்பற்றி, சேர், அங்கு நான் கண்டதும், கற்றதும் வாழ்க்கை முழுவதும் எனக்குப் பலவிதங்களிலும் வழிகாட்டியிருக்கிறது என்றேன்.

'எப்படி?'

பணம், பெருமை, கௌரவம், பதவிகள் என்பனவற்றிலும் மேன்மையானது துன்புறும் மனிதனுக்கு உதவுவது. நோயுற்றிருப்பவர்களுக்கும், வேதனையில் உழல்பவர்களுக்கும் யாராவது தம்முடன் உரையாடமாட்டார்களா? தனது மனப்பாரங்களை கேட்கமாட்டார்களா என்று ஏங்குவார்கள். இப்படியான 'மனிதர்களுடன் உரையாடுபவர்களது மனம் மிகவும் விசாலமானது. எனது வாழ்விலும் நானும் மனப்பாரங்களை இறக்கிவைப்பதற்காக அவதிப்பட்டிருக்கிறேன். அதேபோல் பலரும் தங்கள் மனப்பாரங்களை என்னை நம்பி இறக்கிப்போயிருக்கிறார்கள். இவையெல்லாவற்றையும் கற்பித்தது எது என்று நினைக்கிறீர்கள்' என்றேன்.

90 வயதைக் கடந்த அவரது கண்கள் ஒளிகொண்டன.

'பாடசாலைகள் கல்விமான்களைவிட மனிதர்களையே நாம் உருவாக்கவேண்டும்.

அதுவே ஒரு பாடசாலை ஒரு சமூகத்திற்குச் செய்யக்கூடிய சேவை' என்றார் அவர்.

~~ சஞ்சயன் செல்வமாணிக்கம் ~~

## ஊர் உயர தெடர்ச்சி...

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னர் வாழ்ந்த ஒளவ்வையார் வாய்மொழிந்த வரப்புயர நீர் உயர்ந்து ஊர் உயரும் கதையுடன் இதனை ஆரம்பித்தேன். தமிழரின் பல சங்கத் தமிழ் நூல்களில் பேசப்பட்ட அதியமான் மன்னன் அவ்வையாருக்கு கொடுத்த நெல்லிக்கனிபோல
"அரங்கம்" அது தோன்றும் மண்ணின் மக்களின் இன்றைய அவசிய தேவைகளுக்கு அமைய அதன் திட்டமிட்ட சேவைகள் நிறைவாய் அமைந்து அது நீண்டு நிலைபெற்று தொடர்ந்து வாழவும், தமிழர்கள் எப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அவர்களுடன் நல்லுறவைப்பேணும் வகையில் அதன் பணி விரியவும் வாழ்த்துகிறேன்.

ஊடகங்கள் நல்ல நியாயத்தன்மை கொண்டவையாக விளங்கிய காலத்தில் இலங்கைத் தமிழ் ஊடகத்தின் நல்ல பெரும் ஆசான்களாய் வாழ்ந்த எஸ் எம் கோபாலரத்தினம், இரா பத்மநாதன், எஸ் டீ. சிவநாயகம், ஜோர்ஜ் சந்திரசேகரன், போன்ற விருட்சங்கள் பிறந்த மண்ணில் அவர்கள் உட்கொண்ட உரம் இன்னும் நிறைய இருக்கிறது. அவை இன்னும் நுகரப்படவேண்டும். அதை நுகருவதற்கான இளையவர்களை "அரங்கம்" மேடையேற்றவேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன்.

## ஓவியர்களல்ல ஓவியங்களே பேச வேண்டும் தெடர்ச்சி...

இன்று தனித்துவம் மிக்க கலைஞராக நிமிர்ந்து நிற்கிறார். குலராஜ் பாணி என்றொரு பாணியையே உருவாக்கி வைத்திருக்கிறார்

"இது எனது பாணி, தேடலுக்கூடாக நான் கண்டது"
எனக்கூறும் இவர் மாணவரை "
என்னைப்போல வரையவேண்டாம்
உங்கள் பானியில் வரையுங்கள்" என்றும் வழிப்படுத்துகிறார்

குலராஜின் ஓவியங்களில் காணப்படும் மாந்தர் சாதாரண மாந்தர்.

ஒரு வகையில் மண் சார்ந்த நிறத்தில்,மண்சார்ந்த கோடுகளில் மண்சார்ந்த பண்பாட்டை குலராஜின் ஓவியங்கள் காட்டி நிற்கின்றன எனலாம்

அவரை நாம் மண் சார்ந்த நவீன ஓவியர் என அழைப்பதில் தவறிருக்காது என்றே நினைக்கிறேன்.

அண்மையில் சில ஓவியக் கண் காட்சிகள் பார்க்க சென்றிருந்தேன்.

அவர்களில் அதிகமானோர் சமகாலப் பிரச்சனைகளைக் காட்டுகிறோம் என்ற போர்வையில்



யுத்தம், அவலம், அரசியல் வாதிகளின் ஏமாற்று, பேரினவாத ஆக்கிரமிப்பு என்ற மக்களுக்குவப்பான விடயங்களை எல்லோரும் எப்போதும் பேசும் விடயங்களை ஓவியமாக்கியிருந்தனர். அவற்றில் பல எனக்கு விளங்கவில்லை. என் முகபாவத்தைக் கண்ட அவர்கள் ஒவ்வொரு சித்திரம் பற்றியும் எனக்கு ஒவ்வொரு லெக்சர் அடிக்க ஆரம்பித்து விட்டனர்.

ஓவியர்கள் பேசக் கூடாது. ஓவியங்கள் பேச வேண்டும். அவை நமக்குள் ஓர் அதிர்வை ஏற்படுத்த வேண்டும். குலராஜின் ஓவியங்கள் அதைச் செய்கின்றன.



# மட்டக்களப்பு திரௌபதி அம்மன் வழிபாட்டின் தனித்துவம்

மட்டக்களப்பில் நிலவும் திரௌபதை அம்மன் வழிபாடு தனித்துவமான, தொன்மையான ஒரு வழிபாட்டு முறையாக அமைவதுடன், மட்டக்களப்பின் தனித்துவமான பண்பாட்டு அடையாளமாகவும் விளங்குகின்றது.

அம்பாறை, மட்டக்களப்பு என இரண்டு மாவட்டங்களாகப் பிரிந்து கிடக்கிற "மட்டக்களப்புத் தேசத்தில்", அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பழுகாமம் மற்றும் புளியந்தீவு - பாஞ்சாலிபுரத்திலும் அமைந்துள்ள திரௌபதியம்மன் கோயில்கள் பிரச்சித்தமானவை.

இதற்கப்பால், இலங்கையின் வடமேற்கில் புத்தளம் மாவட்டத்தில் உடப்பு மற்றும் முந்தல் கிராமங்களிலும் பிரசித்தமான திரௌபதி அம்மன் கோயில்கள் உள்ளன. "மட்டக்களப்பு தேசத்தில்" திரௌபதி அம்மன் ஆண்டுத் திருவிழா,



பாரதக்கதையை மையமாகக் கொண்டு 16 நாள் நடைபெறுவதே வழமை. மேலும் கிழக்கிலங்கை கிராமியத் தெய்வ வழிபாட்டு மரபிற்கேற்ப சடங்கு வழிபாடாக நடைபெறுவதும் வழமை. அம்மரபையொட்டி அம்மன் ஆண்டுத் திருவிழா கதவு திறத்தலுடன் ஆரம்பிக்கிறது. ஆனால் உடப்பிலும் முந்தலிலும் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கிறது. இங்கு கரகம் பாலித்தல் முக்கிய நிகழ்வாக இடம் பெறகின்றது. தமிழ் நாட்டிலும் கரகம் பாலித்தல் நிகழ்கிறது.



இவ்வழிபாட்டு முறையைப் பற்றி தாதன் கல்வெட்டில், "பாரதத்திற் சொன்னபடி கம்பம், வனவாசம், கடல்குளித்துத் தீப்பாய்தல், அம்பு வில்லுத் தண்டுடனே ஐவர் கொலுவாக்கி வைத்து, ஆடலோடு பாடி ஆதி துரோபதைக்கு மாடமுயர் கோயில் வரிசையுடன் இயற்றிக் கும்பிட்டார், தெண்டனிட்டார்" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தம்மட்டம், மல்லாரி, தாரை, சின்னஞ் சங்குதொனி, உடுக்கு, சிலம்பு மணி, ஒளிதங்கு தீபமெழ அடுக்கு முறையோடு அரவான் பளப்பலியும் பத்ததிபோற் காட்டி..." எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இம்மரபையொட்டி திரௌபதி அம்மன் சடங்கில்: கலியாணக் கால் வெட்டுதல், பாரதக் கதைப்படிப்பு, வனவாசம்,



வனவாசம், தவநிலை, அரவான் களப்பலி என்பன "சடங்குகளிடையே நிகழ்த்திக்காட்டப்படும் நாடகங்கள்" என்கிறார் பேர.சி.மௌனகுரு.
இவை சடங்காகவும் நாடகமாகவும் நிகழ்த்தப்படுகின்றன. சடங்கில் உடுக்கடித்தல், காவியம் பாடி உருவேற்றல் முக்கிய அம்சமாகும். பாண்டிருப்பில் வனவாசச் சடங்கிலே, பஞ்சபாண்டர்க்கும் திரௌபதிக்கும் ஆறு பேர் உருவேறி ஆட, அவர்களை உண்மையான பாண்டவர்களாகவும் திரௌபதியாகவும் நினைத்து மக்கள் பூஜிப்பர். கோயிலை அத்தினாபுரியாக வைத்து, பல கிராமங்களுக்கச் சென்று திரும்புதல் வனவாசம் சென்று திரும்புதலாகவும் அபிநயிக்கப்படுகிறது.

பாண்டிருப்பு கோயில் வட இந்தியா கொங்கு நகரிலிருந்து வந்த தாதன்மா முனியாலும் அவனது ஆட்களாலும், பழுகாமம் கோயில் இந்தியாவினின்று வந்த அடியார் ஒருவராலும் தோற்றம் பெற்றது என்பது அங்கு நிலவும் ஐதீகம். உடப்பில் வாழும் இந்துக்கள் இராமநாதபுரத்தில் இருந்து வந்து குடியேறிய மறவர் பெருங்குடிகளின் வழித்தோன்றல்கள் என்பதுவும், கண்ட வன்னியன் என்ற வன்னியன் பராமரித்த ஆலயம் அது என்பதுவும் அங்கு நிலவும் ஐதீகம்.

முந்தல் மக்கள், தஞ்சை போன்ற இடங்களிலிருந்து அரசியல் காரணங்களுக்காக புலம் பெயர்ந்தவர்கள் என்பது அங்கு நிலவும் ஐதீகம். இவை, தமிழகத்திலிருந்து திரௌபதி அம்மன் வழிபாடு இங்கு பரவிய முறையை விபரிக்கின்றன.

தவநிலை, அரவான் களப்பலி, தீமிப்பு போன்ற முக்கிய சடங்குகள் நடைபெறுகின்றன. புளியந்தீவில், ஆலாத்திப்பிள்ளைகள் தெரிவு என்னும் சடங்கும் இடம் பெறுகிறது. உடப்புத் திழுவிழாவில், தோத்தரசன் கோட்டை பிடித்தல் எனும் விசேட வைபவம் இடம் பெறுகிறது.

திரௌபதி அம்மன் சடங்கில் தீமிதிப்பு - பூமிதிப்பு பிரதானமனாது. எனினும் மட்டக்களப்புத் தேசத்தில் இச்சடங்கு தீப்பள்ளயச் சடங்கு என்று அழைக்கப்படுகிறது. "பள்ளயம்" என்பது, நோர்ப்பு என வழங்கும் உணவையே குறிக்கும். இது, தமிழக திரௌபதை அம்மன் வழிபாட்டில் இடம் பெறும் "பெருங்சோற்று இடும் வீரபந்தி" என்பதை ஒத்திருக்கிறது. அப்பால், சங்க இலக்கியமான புறநானூற்றில் காட்டப்படும் "ஈரைப்பதின்மரும் பொருது களத்தொழிய பருங்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தாய்" என்ற பாரதம் தொடர்பான தகவலையும் நினைவூட்டுவதாகவும் அமைந்திருக்கிறது.

திரௌபதி அம்மனை "வருந்தியழைத்து கும்பிட்டு மன்றாடி வந்தனை செய்து வழிபாடுகின்ற" மரபு இங்குண்டு. பஞ்சபாண்டவர்களாகவும் திரௌபதியாகவும் வேடம் பூண்டு, உருவேற்றம் கொள்வோருக்குப் பூசை செய்து வழிபடுதலே மரபாகும். திரௌபதி மற்றும் பஞ்சபாண்டவர்கள் தெய்வங்களும் ஏனைய தெய்வங்களும் உருக்கொண்டு தெய்வம் ஆடுதல், பேசி-நடித்து-பாடி நிகழ்ச்சிகளை நடத்துதல் சிறப்பம்சமாகும். மாறாக உடப்பில் திரௌபதி அம்மனுக்கே வழிபாடு நிகழ்கிறது.



இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் புதுச்சேரியிலும் திரௌபதி அம்மனுக்குத் தனிக்கோயில்கள் உள்ளன. அவ்வகையில், பரந்த பிரதேசமொன்றில் நிலவும் திரௌபதை அம்மன் வழிபாட்டின் தொடர்ச்சியாகவே இங்குள்ள திரௌபதை அம்மன் வழிபாட்டைக் காணவேண்டும். பாரதம் பற்றிய செய்திகள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களிலேயே இடம் பெற்றிருக்கின்றன. எனினும் 1400 வருடங்களுக்கு முன் கி.பி. ஏழாம் நூ ற்றாண்டில் பல்லவர் காலத்தில், மக்களுக்குப் போர்க்குணம் எற்பட வேண்டும் என்பதற்காக பாரதம் படிக்கும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டது. இக்காலத்தே "பாரத வெண்பா" எனும் நூலும் இயற்றப்பட்டது. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மன், மகாபலிபுரத்தில் பஞ்சபாண்டவர் தேர்களை ஒற்றைக்கல்லிலும் அமைத்தான்.


இக்காலத்திலேதான் தமிழகத்தில் பாரதம் வழிபாட்டு நிலைக்கும் மாறியது என்பர். எனினும் 200 ஆண்டுகளுக்கு முன்னர் செஞ்சியை மையமாகக் கொண்ட யாதவ அரசர்கள் காலத்தில் திரௌபதி வழிபாடு எழுச்சி பெற்றது. இது ஆய்வாளர்களது கருத்து. எனவே, 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட வழிபாட்டு முறையே மட்டக்களப்பு தேசத்தில் நிலவுகிறது எனலாம்.

மட்டக்களப்பு மான்மியத்தின் தாதன் கல்வெட்டின்படி, "பாரதநாட்டு - கோங்கு நகர் கோவேசியர் குலத்தில் உதித்த தாதன்" மூலம் திரௌபதி வழிபாடு பரவியது என்கிறது. அண்மைக்கால ஆய்வுகள் இத்தகவலை உறுதி செய்வதாகவே அமைந்திருக்கின்றன. மட்டு மாநாகரில் திருக்கோயிற் சந்நிதியைக் கண்டு நமஸ்கரித்த தாதன், எதிர்மன்னசிங்கமென்னும் நரபதி - மன்னவன் உதவியுடன், "வடவால் நிறைந்திருக்கும் வனமும் கடலும் அடைவாகத் தேடி", "கடலருகிலிருந்த வனத்தைக் கண்டு, அங்கு "தீவளர்த்துப் பாய்ந்து பின்பு காட்டிய முறைப்படி", இங்கு கோயிலும் வழிபாடும் இடம் பெற்றது. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கண்டி அரசன் விமலதர்மசூரியன் இக்கோயிலுக்கு வயலும் வெள்ளிக் களஞ்சியமும் வழங்கினான் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்விடம் முன்னர் ஆலஞ்சோலை எனவும் பின்னர் பாண்டவர் இருப்புக் கொண்ட இடம் என்பதால் பாண்டிருப்பு என மாறியது என்றும், கோயில் தாதன் ஆலயம் என அழைக்கப்பட்டு பின்னர் திரௌபதை ஆலயமாக மாறியது என்றும் கூறுவர். இவ்வகையில் பாண்டிருப்பு கோயில் 400 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தன எனலாம். ஏனைய திரௌபதி அம்மன் ஆலயங்களும் தொன்மையானவை என்பதை அங்கங்கு நிலவும் தொன்மைக் கதைகள் மூலம் அறிய முடிகிறது!

பரந்தெதொரு பிரதேசத்திலமைந்த திரௌபதை அம்மன் வழிபாட்டினுடைய வரலாற்றில், மட்டக்களப்பு தேசத்து திரௌபதை அம்மன் வழிபாடு தனித்துவமான ஒன்றாகவே விளங்குகின்றது. அதாவது, இன்று தமிழ் நாட்டில் நிலவும் திரௌபதி அம்மன் வழிபாட்டின் புராதனத் தன்மையை இங்கு காணக்கூடியதாக இருக்கும் போலுள்ளது. "தமிழ் நாட்டில் இன்று வளர்ச்சி பெற்றுக் காணப்படும் பாரத விழாவின் புராதானத் தன்மையையும் மூல வடிவத்தையும் மட். பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயில் பாரதப் படிப்பும் தீப்பள்ளயச் சடங்கும் உணர்த்துகிறது எனலாம்" என்று கூறுகிறார் பேரா.சி.மௌனகுரு அவர்கள்.

~~ விஜய் ~~



# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்

## கதைசொல்லிக்கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம் எமக்குச் சொன்ன நனவிடை தோய்தல் கதை

மகாபாரதக்கதையை வியாசர் முதல் ஜெயமோகன் வரையில் பலரும் எழுதியிருக்கின்றனர். தற்போது ஜெயமோகன் வெண்முரசு என்னும் தலைப்பில் ஆயிரக்கணக்கான பக்கங்களில் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்.

அதனை ஒரு தவப்பணியாகவே அவர் மேற்கொண்டு வருவது தெரிகிறது. 2014 ஆம் ஆண்டில் விஷ்ணுபுரம் விருது விழா முடிந்து வீடு திரும்பியதும், தனது குழந்தைகளுக்கு மகாபாரதக்கதையைச் சொல்லி, அதில் வரும் பாத்திரங்களின் இயல்புகளையும் விபரித்திருக்கிறார்.

அவர் கதைசொல்லும் பாங்கினால் உற்சாகமடைந்த அவரது குழந்தைகள், "அப்பா, இந்தக்கதையையே இனி எழுதுங்கள்." என்று வேண்டுகோள் விடுத்ததும், அவர் அன்றைய தினமே மகாபாரதக்கதைக்கு வெண்முரசு என்று தலைப்பிட்டு ஒவ்வொரு பாகமும் சுமார் 500 பக்கங்கள் கொண்டிருக்கத்தக்கதாக இன்று வரையில் எழுதிக்கொண்டிருக்கிறார்.



"பேராசிரியர் மௌனகுரு அவர்களையும் இன்றே பார்த்துவிட முடியுமா...? " என்று கோபாலகிருஷ்ணனிடம் கேட்டேன். "இன்று மாலை நீங்கள் அவரை மட்டக்களப்பு நூல்நிலைய கேட்போர் கூடத்தில் பார்க்கலாம்." என்றார் நண்பர்.

"எனக்கு மட்டக்களப்புக்கு வரும்போதெல்லாம் 1964 ஆம் ஆண்டளவில் நான் யாழ்ப்பாணத்தில் படித்த ஸ்ரான்லிக்கல்லூரிக்கு மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலிருந்து வருகை தந்து வள்ளி திருமணம் என்ற கூத்தை அரங்காற்றுகை செய்தவர்கள்தான் நினைவுக்கு வருகிறார்கள்" என்றேன்.

"கன்னங்கறுப்பி... சிவப்பி....
கறுத்தக்கொண்டைக்காரி அய்யா மாரே...
அவள் காதிலே குண்டலம் கடுக்கணும்
போடுவாள் அய்யாமாரே..." என்று
நான் பாடத்தொடங்கினேன். சுமார் 53 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கற்ற கல்லூரி மேடையில் அன்று கேட்டு ரசித்து உள்வாங்கிக்கொண்ட அந்தக்கூத்துப்பாடலை அதன் பின்னர் வேறு எங்கும் கேட்கவில்லை என்று சற்று ஏமாற்றத்துடன் நண்பரிடம் சொன்னேன்.


அதன்பின்னர் அந்தவகை கூத்துக்கள் பல்வேறு பரிமாணங்களை பெற்றுவிட்டதாகச்சொன்ன நண்பர், " நீங்கள் கூத்தை ரசிக்கவேண்டுமென்றால் சிறிது காலத்திற்காவது மட்டக்களப்பில் இருக்கவேண்டும்" என்றார்.

"புலம்பெயர்ந்த பின்னர் இழந்தது அதிகம்தான். அவுஸ்திரேலியாவில் அண்ணாவியார் "பத்தண்ணா" இளைய பத்மநாதனால்தான் அங்கு கூத்துக்கலை உயிர்வாழ்கிறது. அவருக்குப்பின்னர்....?" என்று எனது ஏக்கத்தையும் நண்பரிடம் சொன்னேன்.

இங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் மற்றும் ஒரு முதிய கலைஞரிடம் செல்லவிருக்கிறோம் என்று சொன்னவாறு, மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் வீட்டுக்கு எந்த முன்னறிவிப்புமின்றி காரைச்செலுத்தினார் கோபாலகிருஷ்ணன்.

மட்டக்களப்பில் மஞ்சந்தொடுவாயில் 1933 இல் பிறந்திருக்கும் மாஸ்டர் சிவலிங்கத்திற்கு தற்பொழுது 84 வயது. எங்களைக்கண்டதும் உற்சாகமாகப் பேசத்தொடங்கிவிட்டார்.

நாம் அவரது வீட்டின் கேட்டில் தட்டிய



ஓசைகேட்டு உறக்கத்திலிருந்த அவரே எழுந்து வந்து கேட்டைத்திறந்து அழைத்தார். கோபாலகிருஷ்ணனை உடனே அடையாளம் கண்டுகொண்டார்.

என்னை நான் அறிமுகப்படுத்தியதும் முகம் மலர்ந்து சிரித்தார். நீண்ட பெரிய இடைவெளியின் பின்னர் அவரைப்பார்க்கின்றேன். வீரகேசரியில் நான் பணியாற்றிய காலத்தில் அவர் தினபதி சிந்தாமணியில் பணியிலிருந்தவர். எனது சிறிய பராயத்தில் எங்கள் ஊருக்கு வந்து பாரதி குறித்து வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை அவர் நடத்தியிருப்பதை நினைவுபடுத்தினேன்.

சிறுநீரக சிகிச்சைக்குட்பட்டிருக்கும் அவரது உடலில் முதுமைக்கான தளர்ச்சியிருந்தபோதிலும், எம்மைக்கண்டதும் அந்தத்தளர்ச்சி எங்கோ ஓடி மறைந்துவிட்டதை அவதானிக்க முடிந்தது. அயர்ச்சியின்றி கலகலப்பாக பேசினார்.

ஏறக்குறைய அரைநூற்றாண்டு காலமாக சிறுவர்களுக்கு கதைசொல்லும் கலைஞராகத்திகழ்ந்தவர். கவிதை, நாடகம், சிறுவர் இலக்கியம், வில்லுப்பாட்டு, நகைச்சுவை உரைச்சித்திரம் முதலான துறைகளில் பிரகாசித்தவர். அதற்காக பல விருதுகளும் பெற்றவர். சென்னைக்கலைக்கல்லூரியில் கேலிச்சித்திரத்துறையிலும் பயின்றிருப்பவர்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதமணி வீ. சீ. கந்தையா, கிருபானந்த வாரியார், செல்லையா இராசதுரை ஆகியோரிடத்திலும் கொழும்பு தமிழ்ச்சங்கம், மட்டக்களப்பு இந்து சமய அபிவிருத்திச்சங்கம் ஆகிய அமைப்புகளிடத்திலும் பட்டங்கள் பெற்றவர். இலங்கை கலாசார அமைச்சு, வடகிழக்கு மாகாண அரசின் சாகித்திய விருது, மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய தமிழியல் விருது என்பவற்றையும் பெற்றவர்.

இவரது ஆற்றல்களை நன்கு இனங்கண்டுகொண்ட புலவர் மணி, இவரை இலங்கை வானொலி கலையகத்திற்கு அழைத்துச்சென்று சிறுவர் மலர் நிகழ்ச்சியை தயாரித்து வழங்கும் வானொலி மாமா சரவணமுத்துவிடம் அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

"சிறுவர்களுக்கு நேரில் கதை சொல்லமுடியும். ஆனால், வானொலி ஊடாக சிறுவர்களுக்கு எவ்வாறு கதை சொல்வீர்...?" என்று அந்த மாமா இவரிடம் கேட்டதும், அங்கிருந்த மாமாவின் பெரிய டயறியை கையில் எடுத்திருக்கிறார் சிவலிங்கம்.

"அதனை எதற்கு எடுக்கிறீர்....?" மாமா கேட்கிறார்.

"இதிலும் கதை இருக்கிறது" எனச்சொல்லிவிட்டு, டயறியை கையில் வைத்து விரல்களினால் அதில் வெவ்வேறு ஒலி எழும்வகையில் தட்டியிருக்கிறார்.

குதிரை வேகமாக ஓடுகிறது என்று சொல்லி டயறியில் தட்டி குதிரை ஓடும் ஒலியை எழுப்பியிருக்கிறார். பின்னர் இப்பொழுது குதிரை நடக்கிறது எனச்சொல்லி குதிரையின் மெதுவான நடையையும் அந்த டயறியிலேயே மெதுவாகத்தட்டித்தட்டி காண்பித்திருக்கிறார். குதிரையின் கதையையும் சொல்கிறார்.
பல வருடங்களுக்கு முன்னர் இலங்கை வானொலி கலையகத்தில் வானொலி மாமா இவருக்கு நடத்திய நேர்முகத்தேர்வில் தான் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டேன் என்பதை இந்த கதைசொல்லிக்கலைஞர் அன்று நினைவு மறதியின்றி எம்முன்னே அபிநயத்துடன் ஒரு டயறியில் தட்டி குதிரை ஓடும், நடக்கும் ஒலியலைகளை எழுப்பி எம்மிருவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

## கையில் கிடைத்ததை வைத்து தாளம் போட்டு குழந்தைகளுக்கு கதை சொன்னவர்

கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்துடன் ஜெயமோகன் எழுதும் வெண்முரசுவுக்கு வயது மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் விரும்பிய காவியம்தான் மகா பாரதம்.

எனது இலங்கைப்பயணம் தொடர்பானது பற்றி, எழுத்தில் ஏன் மகாபாரதம் வருகிறது, ஜெயமோகன் வருகிறார்..? என்று வாசகர்கள் யோசிக்கக்கூடும். இலங்கையில் ஒரு காலகட்டத்தில் மாணவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மகா பாரதக்கதையைச் சொல்லிக்கொண்டிருந்த இரத்தினம் சிவலிங்கம் என்ற இயற்பெயர்கொண்ட மாஸ்டர் சிவலிங்கம் அவர்களைத்தான் அன்று பார்ப்பதற்கு புறப்பட்டுக்கொண்டிருந்தேன்.

மட்டக்களப்பில் நண்பர் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணனுடன் அன்று காலை புறப்படுவதற்கு முன்னரே அன்றைய தினம் எங்கெங்கு செல்வது என்று தீர்மானித்துக்கொண்டேன்.

கிழக்கு மாகாணத்தில் கலைப்பாரம்பரியத்திற்கு நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது. யாழ்நூல் தந்த சுவாமி விபுலாநந்தருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அந்த வரலாறு எழுதப்பட்டிருக்கிறது.

இசை, கூத்து, கல்வி, நாடகம், இலக்கியம், இதழியல் உட்பட பல்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்தவர்கள் தோன்றிய மட்டக்களப்பில் இந்தப்பயணத்தில் நான் பார்க்கவிரும்பியவர்களும் அநேகம். தரிசிக்க விரும்பிய இடங்களும் அநேகம். கிடைத்துள்ள குறுகிய அவகாசத்தில் முடிந்தவரையில் விரும்பிய இடங்களுக்குச்சென்றேன்.

தற்பொழுது ஜெயமோகன் தனது அபிமான வாசகர்களுக்காக மகா பாரதக்கதையை வெண்முரசு என்ற தலைப்பில் எழுதிவருவதுபோன்று, சில வருடங்களுக்கு முன்னர் மாஸ்டர் சிவலிங்கம், வீரகேசரி வாரவெளியீட்டின் சிறுவர் பகுதியில் மாணவர்களுக்காக மஹா பாரதக்கதையை 57 வாரங்கள் தொடர்ந்து எழுதியிருக்கிறார். அந்தத்தொடரை பின்னர் மாணவர்கள் விரும்பிப்படிக்கும் வகையில் தனி நூலாக அழகிய வண்ணப்படங்களுடனும் வெளியிட்டிருக்கிறார். இதுவரையில் இந்த நூல் மூன்று பதிப்புகளைக்கண்டுவிட்டது.

"தனித்துவத்துக் கொரு உருவம்
மாஸ்டர்.
நல்ல தங்குபுகழ்க்கொரு உருவம்
மாஸ்டர்.
வல்ல இனித்தகதைக் கொருஉருவம்
மாஸ்டர்.
நீங்கா எளிமைக்கும் பண்புக்கும்
மாஸ்டர்.
நனிபுனைந்த கதைகளெலாம் நூல்களாக
நாம் கண்டு சுவைக்கின்ற
நற்பேறுற்றோம்.
இனியென்ன,
நீங்களும்தான் வாங்கி வாங்கி
இனித்தினித்துப் படிப்பதற்கும்
இடையூறுண்டோ...? "

என்று இந்த நூலை வாழ்த்தி வரவேற்றுள்ளார் கவிஞர் திமிலைத்துமிலன். மாணவர்களுக்கும் குழந்தைகளுக்கும் கதைசொல்லும் ஆற்றல் கைவரப்பெற்று விளங்கிய மாஸ்டர் சிவலிங்கம், அன்றைய தினம் என்னையும் கோபாலகிருஷ்ணனையும் தனது மனதிற்குள் குழந்தைகளாக உருவகித்துக்கொண்டே தனது வானொலி கலையக வாழ்க்கை மற்றும் பத்திரிகை உலக அனுபவங்களை சொல்லிக்கொண்டிருந்தார்.

(பயணங்கள் தொடரும்)

~~ முருகபூபதி – அவுஸ்திரேலியா ~~



# கிழக்கிலங்கையின் கலை இலக்கியச் செல்நெறி

## (அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பேர்ண் நகரில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன் ஆற்றிய உரையின் இரண்டாம் பகுதி) 02

பாரம்பரியக் கூத்துவடிவினை அதாவது நாட்டுக் கூத்தினை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் ஒருபுறம் முன்னெடுக்கப்படும் அதேவேளை இதற்கு எதிரான அல்லது மாற்றான அல்லது இதனை விமர்சனம் செய்யும் கருத்தியலும் மட்டக்களப்பில் முளை கொண்டுள்ளது.

கூத்தினை நவீனமயப்படுத்தல் என்பது நகர்ப்புறம் சார்ந்த நடுத்தரவர்க்க அல்லது செல்வம்மிக்க மேல்தட்டுவர்க்கத்தினரின் நுகர்வுக்காகவும் வணிக நோக்கிலும் அமைந்த செயற்பாடு எனவும் இது இயந்திர நாகரீகத்தின் வெளிப்பாடு எனவும் அதனால் கலை இலக்கியம் மக்களுக்காக என்ற நிலை மாறி பொழுதுபோக்கிற்காக என்ற திசை நோக்கிப் பயணிப்பதாகவும் இதனால் கூத்தின் சமூகப்பரிமாணம் இழக்கப்படுவதாகவும் எதிர்க்கருத்தியலாளர்கள் வாதிடுகின்றனர்.

கிராமங்களில் சமூகத்தை அதாவது பாமரமக்களை – உழைக்கும் மக்களை உள்வாங்கி ஒரு சமூகப்பரிமாணத்துடன் உருவான கூத்தினை அதன் பழைய வடிவத்திலேயே பேணவேண்டும் அதாவது அதன் "வட்டக்களரி" வடிவத்திலேயே வளர்த்தெடுக்க வேண்டும் என்று கூத்தினை நவீனமயப்படுத்தலின் மாற்றுக்கருத்தியலாளர்கள் கூறுகின்றனர்.

இந்த மாற்றுக்கருத்தினை முன்னெடுத்து பாரம்பரியக் கூத்தினை மீளுருவாக்கம் செய்வதில் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் தற்போதைய பணிப்பாளர் கலாநிதி ஜெயசங்கர் மற்றும் மட்டக்களப்புச் சீலாமுனையைச் சேர்ந்தவரும் பேராசிரியர் மௌனகுரு அவர்களின் நெருங்கிய உறவினரும் பட்டதாரி ஆசிரியருமான கௌரீஸ்வரனும் முனைப்புடன் செயற்படுகின்றனர்.
எனவே கூத்துக்கலையைப் பொறுத்தவரை அதனை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் ஒரு புறமும் அதற்குச் சமாந்தரமாக அதன் பாரம்பரிய வடிவத்தை மீளுருவாக்கம் செய்யும் செயற்பாடுகள் மறுபுறமும் நிகழும் போக்கே இன்றைய கிழக்கிலங்கைக் கூத்துக்கலையின் செல்நெறி ஆகும். எது சரியென்பதைக் காலம் தீர்மானிக்கும்.

### மேடை நாடகங்கள்

---

அடுத்து மேடைநாடகங்களை எடுத்துநோக்குவோம். 1960 களில் மேடை நாடகங்களுக்கு இருந்த மவுசும் வளர்ச்சியும் இன்று குறைந்துவிட்டன. கிழக்கிலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் பெரும்பாலானவர்கள் நாடகக் கலைஞர்களாகவும் அன்று விளங்கினர். திருகோணமலை மாவட்டத்தில் வ.அ.இராசரத்தினம், மதிவதனன், சித்தி அமரசிங்கம் போன்றோரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கவிஞர் காசி ஆனந்தன், அன்புமணி, நவம், எஸ்.பொ. மற்றும் சிறிகந்தராசா போன்றவர்களும் அம்பாறை மாவட்டத்தில் மருதூர்க்கொத்தன், கவிஞர் நீலாவணன், மு.சடாட்சரன், சண்முகம் சிவலிங்கம் போன்றவர்களும் மேடை நாடகங்களில் ஈடுபாடுகாட்டிய மூத்த எழுத்தாளர்களாவர்.

கவிஞர் நீலாவணன் அவர்கள் பா நாடகங்களை எழுதி மேடையேற்றும் ஆற்றல் படைத்திருந்தார். அவரது "மழைக்கை" எனும் பா நாடகம் பாராட்டுப் பெற்றதாகும். இதில் முஸ்லீம்களான மருதூர்க்கொத்தன் கிருஸ்ணன் வேடத்திலும் எம்.ஏ.நு.்.மான் பிராமணன் வேடத்திலும் நடித்திருந்தனர் என்பது சுவையான தகவலாகும்.

### பள்ளிக்கூடங்களில் நாடகம்

---

பாடசாலைகளில் இல்லங்களுக்கிடையே வருடாவருடம் விளையாட்டுப் போட்டி நடைபெறுவது போல் அன்று நாடகப் போட்டிகளும் நடைபெற்ற காலமொன்றிருந்தது. நாடகமன்றங்கள் பல இயங்கின. மட்டக்களப்பிலே இயங்கிய "தமிழ்க்கலாமன்றம்" நகைச் சுவை நாடகங்களை மேடையேற்றியதில் பிரபல்யம் பெற்றதாகும். ஆனால் இன்று மேடைநாடக முயற்சிகள் வெகுவாகக் குறைந்து விட்டன. தென்னிந்திய தொலைக்காட்சி நாடகங்களின் ஆக்கிரமிப்பும் செலவு மற்றும் பொருளாதாரத் தட்டுப்பாடும் இதற்கான பிரதான காரணங்கள் ஆகும். ஆனாலும் மட்டக்களப்பு நுண்கலைக்கழகம் - மேடை நாடகங்களைத் தயாரித்து அவ்வப்போது அரங்கேற்றிவருகிறது. சில வருடங்களுக்கு முன்னர் அதன் ஸ்தாபகர் அலோசியஸ் என்பவர் எழுதித் தயாரித்து, நெறியாள்கை செய்து தானும் அதில் நடித்து மேடை ஏற்றிய "தழும்பு" எனும் நாடகம் சிலாகிக்கத் தக்கதொன்றாகும். வசதி படைத்த நலன் விரும்பிகளும் அரச மற்றும் அரசசார்பற்ற நிதி நிறுவனங்களும் பொருளாதார அனுசரணை வழங்க முன்வருவார்களாயின் மேலும் பல



த.கோபாலகிருஷ்ணன்

மேடை நாடகங்கள் அரங்கேறுவதற்கு வாய்ப்புண்டு.

அதேவேளை வீதி நாடகங்களைப் பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்டம் இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட முன்னணியில் திகழுகிறது. கதிரவன் த.இன்பராசா அவர்களின் தலைமையில் புதுக்குடியிருப்பில் இயங்கும் "கதிரவன் கலைக்கழகம்" இது வரைக்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீதிநாடகங்களை நிகழ்த்திச் சாதனை படைத்திருக்கிறது. சிறுவர் உரிமைகள், பெண் உரிமைகள், வாக்குரிமை, சூழல் பாதுகாப்பு, மரம்நடுகை, பசுமை பேணல், டெங்கு நோய் ஒழிப்பு, மதுவிலக்கு, சுகாதாரப் பழக்கங்கள், போதை வஸ்த்துப்பாவனைத் தடுப்பு, வீதிப்போக்குவரத்து ஒழுங்கு, வறுமை ஒழிப்பு, தற்கொலைத்தடுப்பு, முதியோர் பராமரிப்பு, முதியோர் கல்வி, போசாக்கு உணவு, பாலர் பாடசாலைக் கல்வி, இயற்கைப் பசளைப் பாவனை, நீர் மற்றும் மின்சாரத்தின் சிக்கனப்பாவனை, திண்மக்கழிவு முகாமைத்துவம், எயிட்ஸ்நோய் விழிப்புணர்வு, மாற்றுத்திறனாளிகளைப் பேணல், விதவைகள் மறுவாழ்வு போன்ற விடயங்களில் மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் இந்த வீதி நாடகங்கள் நிகழ்த்தப் பெறுகின்றன.

இத்துறைகள் சார்ந்து இயங்கும் அரச நிறுவனங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் தங்கள் உத்தியோகபூர்வ நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப பொருளாதார அனுசரனை வழங்குகின்ற காரணத்தால் இத்தகைய வீதி நாடகங்கள் மேலும் மேலும் விரிவாக்கம் பெறும்நிலை இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவுகிறது. அண்மையில் மட்டக்களப்பு வந்து "வாக்குரிமை" சம்பந்தமாக மக்களை விழிப்பூட்டும் வீதி நாடகமொன்றைப் பார்வையிட்ட இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுத்தலைவர் மஹிந்த தேசப்பிரிய அவர்கள் அதனால் கவரப்பெற்று அந் நாடகத்தைக் கொழும்புக்குத் தருவித்து அங்கும் காட்சிப்படுத்தியமை இவ்வீதி நாடகங்களின் தரத்திற்கும் தேவைக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

(அடுத்த இதழில் தொடரும்)

# மட்டக்களப்புக்கான முதலாவது புற்தரை கிரிக்கெட் மைதானம்



மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக் கழகம் தனது ளிநாட்டில் உள்ள உறுப்பினர்களின் தவியுடன் அமைக்கவுள்ள புற்தரை ிக்கெட் மைதானத்துக்கான (டேர்/ப் க்கெட்) ஆரம்பநிலை ஒப்பந்தம் /02/2018 அன்று கைச்சாத்தானது.

டக்களப்பு ஈஸ்ட்லகூன் ஹொட்டலில் ற்கான நிகழ்வில் இலங்கை ிக்கெட் அணியின் முன்னாள் லைவர் பந்துல வர்ணபுர மற்றும் புல் சந்தன ஆகியோருடன், ாட்டைமுனை அணியின் பிரிட்டிஷ் கிளையின் உறுப்பினர்களான வசீகரன் மற்றும் உதயராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.
தலைமை அதிதியாக மாவட்ட அரச அதிபர் எம். உதயகுமார் கலந்துகொண்டார். மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவர் ரஞ்சன், செயலாளர் பிரதீபன், மெதடிஸ்த மத்திய கல்லூரி, வின்செண்ட் பாடசாலை அதிபர்கள், கிரிக்கெட் கழகங்களின் தலைவர்கள், கோட்டைமுனை விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர்கள் ஆகியோரும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் நிர்மாணிக்கப்படும் முதலாவது புற்தரை கிரிக்கெட் மைதானம் இதுவாகும்.

பல லட்சம் ரூபாய்கள் செலவில் உருவாகும் இது மட்டக்களப்பு சவுக்கடியில் அமைக்கப்படவுள்ளது.





# புது அரங்கம்

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் புது நூல்களின் வரவு களைகட்டத் தொடங்கியுள்ளது. அடிக்கடி நூல் வெளியீட்டு நிகழ்வுகள் நடந்தவண்ணமே உள்ளன. ஆயிரம் பூக்கள் மலர்ந்தாலும் அதில் அர்ச்சனைக்குரிய சில பூக்களாவது மிஞ்சுமல்லவா?

இவ்வருட ஆரம்பத்தில் மட்டக்களப்பின் முதல் நாவலான ஏரம்ப முதலியின் "அரங்கநாயகி" மீள் பதிப்புடன் இந்நிகழ்வு தொடங்கி, இந்த இரு மாதகால இடைவெளியில் பதின்மூன்று வரையான நூல்களின் வரவுகள் நிகழ்ந்துள்ளன.

இதில் ஈழத்தின் முதல் வரலாற்று நாவலான திருமலை கி. த. சரவணமுத்தப்பிள்ளையின் "மோகானங்கி"யின் மீள்பதிப்பும் அடங்கும்.

புது அரங்கத்துக்கான காட்சி இது. இவ்வருடத்தில் கிழக்கிலிருந்து வெளிவந்த, வரும் நூல்களைப் பற்றிய அறிமுகக்குறிப்புகளை வாராவாரம் தாங்கிவரும். பின்பொருகால் மீட்டிப்பார்க்கும் போது வரலாற்று தகவலாகவும் இது அமையும். நீங்கள் தகவல்களைத் தந்தால்தான் இது முழுமை பெறும்.

ஒன்று

---

ஆ.மு.சி வேலழகனின்


நெஞ்சில் நிலைத்த நினைவுகள்"

மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளர் ஆ.மு.சி வேலழகன் தனது அனுபவங்களையும் பட்டறிவையும் திரட்டி கவிதை, சிறு கதை, நாவல், வரலாறு, ஆய்வு என்று பல தளங்களில் படைப்புக்களை தந்து கொண்டிருக்கும் 75 வயது இளைஞன். இதுவரை 27 நூல்களை எமக்கு தந்துள்ளார். மட்டக்களப்பின் மண்வாசனையையும் பேச்சு வழக்கையும் பண்பாடுகளையும் மருத நில, முல்லை நில மக்களின் வாழ்வையும் அவருடைய படைப்புக்களில் தரிசிக்கலாம். எமது மண்ணின் ராஜநாராயணன் எனலாம்.

இதில் "நெஞ்சில் நிலைத்த நினைவுகள்" அவரின் வாழ்வின் சுயசரிதையின் ஒரு பகுதி. பன்னிரெண்டு அத்தியாயங்களை கொண்டது. ஒன்று தொடக்கம் ஏழு வரையான பகுதி தன்னுடைய இளமைக்காலம், வறுமை, பட்ட துன்ப துயரங்களையும் வயல் காடு என வாழ்ந்த வாழ்க்கையையும் தன் உழைப்பு சுரண்டப்பட்ட விதத்தையும் பேசுகின்றது. 8வது அத்தியாயம் காதல் வாழ்வையும் மன்னார் வயல் வாழ்வையும் 9ம் பகுதி 1963ம் ஆண்டு கால அம்பாறை கரும்புத்தோட்ட வாழ்வையும் 10வது அத்தியாயம் தனது நண்பனது சிறைச்சாலை வாழ்வையும் என அழகாக பதிவு செய்கின்றன.

1977ம் ஆண்டு கால இன வன்முறையையும் மட்டக்களப்பார் வெளியிடங்களில் எவ்வாறு மாட்டுப்பட்டு துன்பப்பட்டனர் எனவும் பேருந்து ஓட்டுனரான தான் எவ்வாறு சமயோசிதமாக துனிச்சலுடன் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டார் எனவும் 11ம் அத்தியாயம் பதிவு செய்கிறது.

இறுதியான 12வது அத்தியாயம் 1990ம் ஆண்டு கால இன முரண்பாடு கூர்மையடைந்த பின் மட்டக்களப்பு – கொழும்பு செல்லும் தமிழ் மக்கள்




எதிர்நோக்கிய பிரச்சினைகள் என அழகாக அனுபவப்பகிர்வின் ஒரு பகுதி முற்றுப்பெறுகிறது.

சுயசரிதை என்பது தனிமனித வாழ்வியலை மட்டுமின்றி ஒரு காலகட்ட சமூக, அரசியல், கலை இலக்கிய பண்பாடு, வரலாற்று விடயங்களையும் மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ பேசவேண்டும்.(பேரா.செ.யோ) இவ்வகையில் ஆ.மு.சி வேலழகனும் பேச விழைகின்றார் எனலாம்.

(காட்சி நீளும்)

~~ ச. மணிசேகரன் ~~

# கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் திருகோணமலை மாவட்ட பொது மக்கள் கலந்துரையாடல் கூட்டம்

கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் திருகோணமலை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் 04ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு திருகோணமலை குளக்கோட்டன் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒன்றியத்தின் இணைப்பாளர்களான சிரேஸ்ட சட்டத்தரணி த.சிவநாதன், செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் ஆகியோரின் அழைப்பின் பேரில் இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

'1987 இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் கீழ் தற்காலிகமாகவேனும் இணைக்கப் பெற்றிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் 2007ம் ஆண்டு தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பெற்ற பின்னர் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் பல எதிர்மறைத் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக 2012 ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் இருப்பு நாளாந்தம் கேள்விக்குள்ளாகி வருகின்றது. மட்டுமல்லாமல் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் மேம்பாட்டிற்குப் பாடுபடக் கூடியதாகக் கட்சி அரசியலுக்கு அப்பால் மக்கள் மயப்படுத்தப்பெற்றதும் வினைத்திறன் மிக்கதுமான பொதுவான – பலமான மக்கள் அமைப்பொன்று முழுக் கிழக்கு மாகாணமும் தழுவியதாக இல்லை.

இந்தப் பின்னணியில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் தங்களைத் தற்காத்துத் தங்கள் எதிர்கால இருப்பைப் பாதுகாத்துப் பேணி வளர்த்தெடுப்பதற்குரிய "பொறிமுறை" யொன்றினை உருவாக்குமுகமாக த.சிவநாதன், (சிரேஸ்ட சட்டத்தரணி) மற்றும் செங்கதிரோன்.த.கோபாலகிருஸ்ணன் ஆகியோரின் அழைப்பின் பேரில் ஏற்பாடு செய்யப்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட மட்டக் கலந்துரையாடல் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 6ம் திகதி மட்டக்களப்பு, கல்லடி உப்போடை துளசி மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் பொது மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் விரிவான கலந்துரையாடலின் பின்னர் பின்வரும்; தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

"எதிர்வரும் கிழக்குமாகாணசபைத் தேர்தலில் கிழக்குமாகாணத் தமிழர்களின் சார்பில் அதிஉச்சபட்ச ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரு பொதுச் சின்னத்தின்கீழ் ஒன்றிணைந்து ஓரே அணியில் போட்டியிட வேண்டும். இதனைச் சாத்தியப்படுத்தும் வகையில் மக்களைத் தயார்ப்படுத்த வேண்டும்.

இத்தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகப் பிரதேச ரீதியாகத் தெரிவு செய்யப்பெற்ற செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய நடவடிக்கைக்குழுவும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பெற்றது. இப்புதிய அமைப்புக்குக் "கிழக்குத் தமிழர் ஒன்றியம்" எனப் பெயரிடப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இதனைப் போன்று அம்பாறை மாவட்டத்திற்கான கலந்துரையாடல் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 21ம் திகதி அக்கரைப்பற்று, குருக்கள் வீதி, இந்து இளைஞர் மன்றக் கட்டிடத்தில் நடைபெற்றது. அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் பொதுமக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் விரிவான கலந்துரையாடலின் பின்னர் கடந்த ஜனவரி 06ம் திகதி அன்று நடைபெற்ற மட்டக்களப்புக் கூட்டத்தின் தீர்மானத்தை ஒருமனதாக ஏற்றுக் கொள்வதாக அக்கரைப்பற்றுக் கூட்ட (அம்பாறை மாவட்ட) அவையும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது. அத்துடன் அம்பாறை மாவட்ட நடவடிக்கைக் குழுவும் தெரிவு செய்யப்பெற்றது.

திருகோணமலை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டத்தில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு பங்களிப்பினை வழங்கி உதவுமாறு வேண்டுகோள் விடுக்கிறோம்.'

சிறுவிளம்பரம்

உ
சிவசக்தி சிவமயம் ஸ்கந்தாயநமஹ
சிவசக்தி SPS சோதிட நிலையம்
வாஸ்து நிபுணர் சோதிட கலாமணி
இந்து மக்கள் பேரவை மாவட்ட தலைவர்.
மட் / ஆலையடி பிள்ளையார் பிரதம குரு.
"வாமதேவ சிவாச்சாரியார்"
சிவஸ்ரீ பா. செ. சிறிஸ்கந்தராசக் குருக்கள்
உ
அன்பர்களே!
சிறந்த முறையில் ஜாதக பலன் ஆரூடம் துல்லியமாக அறிந்துகொள்ளவும் கணனி மூலம் பாரம்பரிய குறி சோதிடம், திருமண தடை, குழந்தை பேறு இன்மை, கிரகதோசம் மனை, வாஸ்து தோசம் நிவர்த்தி, வீடு குடிபுக, வீடு காவல் பூமி பூசை மற்றும் கணபதி லஷ்மி வாஸ்து ருத்திர நவக்கிரக கோமம் கும்பாபிஷேகம் சங்காபிஷேகம் திருவிழாக்கள் அனைத்தும் செய்து தரப்படும்.
நன்றி
இல - 25A, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.
065 - 5680166
077 - 9349218






# தம்பலகாமம்




கரிய குவளை மலர் மேய்ந்து
கடவாய் குதட்டி தேனொழுக
எருமை கிடந்து மூச்செறியும்
எழிலார் தம்பை வள நாட்டின்"

என திருக்கோணாசல புராணம் தம்பலகாமத்தின் வளத்தை அதன் அழகை பாடுகிறது. ஈழத் தமிழரின் மிகப் புராதனமான கிராமங்களில் தம்பலகாமம் தனித்துவமான வரலாற்றையும் கலாசார மரபுகளையும் கொண்ட கிராமம்.









ஒரு கிராமத்தின் தோற்றமே அதன் பழைமையை உணர்த்தி நிற்கும். தன் தோற்றத்திலேயே மிகத் தொன்மையான மரபுகளை வெளிப்படுத்தும் அழகு தம்பலகாமத்துக்கு உண்டு.

தம்பலகாமம் திருகோணமலைக்கு தெற்கே பதினைந்து மைல் தொலைவிலமைந்த வருடம் தோறும் வயல் விளை நிலங்கள் சூழ மருத மணம் கமழும் தொல்குடிகள் வாழும் அழகிய கிராமம். ஆற்றுப் படுக்கைகளின் வழி நீர் நிறைந்து வாய்க்கால் வழியே வட்டமிடும் வயல் நிலங்கள் சூழ திட்டுத் திட்டாய் கடல் நடுவே தெரியும் தீவுக் கூட்டங்கள் போல புராதன குடியிருப்புகள்.

திருமலை கண்டி வீதியில்13ம் கட்டையில் தம்பலகாமச் சந்தி வரும் அதிலிருந்து உள் நுளைய முதலில் வருவது புதுக்குடியிருப்பு. தொடரந்து நாம் பயணிக்க வீதி இரண்டாக பிரியும்.

இடது புறம் செல்லும் வீதி ஊரின் ஒரு பகுதி திட்டுக்களை நோக்கி நகர, வலப்புறமாய் திரும்பும் வீதி கோயில் குடியிருப்பு நோக்கி செல்லும்.

குடியிருப்பு அது ஆதி கோணநாயகர் கோயில் அமைந்துள்ள பகுதி. அதனால் அதற்கு கோயில் குடியிருப்பு எனும் பெயர் பெரு வழக்காயிற்று. 1624ல் போத்துக்கேயரால் திருக்கோணேஸ்வரம் இடிக்கப்பட்ட போது அங்கிருந்து விக்கிரகங்களை கொண்டு வந்து வைத்து பூசை செய்ததால் ஆதி கோணை நாதர் என்று அழைக்கப் பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. ஆனாலும் இங்குள்ள கோயில் அதற்கு முன்னமே தசம்பன் எனும் மன்னனால் அமைக்கப்பட்டதாகவும், விஜயபாகுவுடன் தொடர்புபட்டதாகவும் குளக்கோட்டன் காலத்துக்குரிய கோயில் எனவும் பல தகவல் தம்பலகாமத்தின் பூர்வீக வரலாற்றுக்கு துணை நிற்கின்றன.

இடப் புறவழியால் செல்லும் போது பட்டிமேடு, கூட்டாம் புளி, கள்ளிமேடு, முன்மாரித் திடல், சிப்பித்திடல், வர்ணமேடு, முள்ளியடி வரை நீண்டு ஆலங்கேணி செல்லும் பாதையயை சந்திக்கும்.

மற்றய வீதி கோயில்குடியிருப்பு வரை நீண்டு, குஞ்சடப்பன் திடல், நாயன்மார் திடல், நடுப்பிரப்பம் திடல் வழியே முள்ளியடி சேரும்.

இவற்றை விட ஐயனார் திடல்,பொக்குறுணி(இப்போ பொன்கேணி), சம்மாந்துறை என்பனவும் உண்டு.

இந்த ஊரின் ஒவ்வொரு திடலும் மா, பலா, வாழை, கமுகு, தென்னை என விரிந்திருக்கும் தென்றல் தாலாட்டும் தீங்கனிச் சோலைகள்.

இந்த நிலப்பரப்பையும் இதை அண்டியுள்ள பகுதிகளும் ஒரு இராஜதானியாய் இருந்த அடையாளங்களும் தொல்லியல் சான்றுகளும் உள்ளன. தம்பன் எனும் மன்னன் ஆண்ட காரணத்தால் அவன் பெயரையடியொற்றி தபம்பலகாமம் நகர் எனவும் பின்னாளில் தம்பலகாமம் எனவும் அழைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அத்தோடு திருக்கோணாசல புராணம் தனிப் படலத்தின் மூலம் இப் பிரதேசத்திற்கு சிறப்பு சேர்க்கிறது. தம்பை நகர் படலம் என பல பாடல்களில் விளக்குவதை காணலாம். திருத் தம்பலேஸ்வரம் எனவும் அழைக்கப்பட்டதாக செய்திகள் உள்ளன.

தம்பை நகர் என்ற சொல்லாட்சி சரசோதி மாலையில் இப்படி குறிப்பிடப்படுகிறது.

"உரைத்த சக வருடமுறும் ஆயிரத் திருநூற்றொரு

நாலெட்டினிலிகுவ சந்தந் தன்னிற்

தரித்திடு வைகாசி புதன் பனையினாரிற்

தம்பை வளர் பராக்கிரம பாகு"

கோணேசர் கல்வெட்டு

"சத்த வாரி திகழ் தம்பை மாநகரில்

அற்புதமுடனே முப்பதவணம்

நெற்பயிர் விளையும் நிலமுமளித்து"

என குறிப்பிடுவதும் தம்பை நகர் என்பதை மேலும் உறுதிப் படுத்துகின்றன.

தமிழ் சொல்லியல் இலக்கண அடிப்படையிலும் தம்பலம் எனும் சொல் இப் பிரதேசத்தின் இயற்கை வளத்தோடு பொருந்தி வருவதை காணலாம்.

தம்பலடித்தல் என்ற சொல்லுக்கு உழவு பயிரிடுதல் என விரிகிறது. தொழில் அடிப்படையிலும் இப் பெயர் உருவாகியிருக்கலாம்.

தம்பலாடல் என்ற சொல்லுக்கு அகராதி தரும் விளக்கம் சேறாடல் அல்லது சேறடித்தல்.வயல் நிலங்கள் கிடா மாடுகளைக் கொண்டு சேறடித்து பயிரிடும் மரபு இன்று வரை காணப் படுவது பெயரோடு பொருந்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமத்தின் வரலாறு பற்றி பேசும் போது இங்கு கண்டுபிடிக்கப் பட்ட பன்னிரண்டாம் நூற்றாண்டு கல்வெட்டு முக்கியம் பெறுகிறது. பதினொரு வரிகள் கொண்ட அந்த கல் வெட்டில் இந்த ஏழு வரிகள் முக்கியம் பெறுகின்றன.

5.உடையார் நிச்ச

6.யித்த ஜகதப்ப

7.கண்டன் தாநத்(து)

8.க்கு நிலையாக்க(கித்)

9.தம்பலக ஊ

10.ரை நான்கெல்

11.லைக்கு தள எல்லை

தம்பலகாமம் எனும் பெயர் பன்னெடு காலப் பழமை வாய்ந்தது என்பது இக் கல் வெட்டின் மூலம் நிருபணமாகிறது.

இக் கல்வெட்டை வாசித்த பேராசிரியர் பத்மநாதன் இப்படிக் கூறுகிறார். 'தம்பல்காமம் ஊர் ஜகதப்ப கண்டன் என வழங்கிய போர் வீரர் கணம் ஒன்றின் பொறுப்பில்விடப்பட்டது என்பதுமது ஆட்சியாளர் செய்த ஒர் ஏற்பாடு' என்பதும் சாசனத்தின் மூலம் தெளிவாகிறது.

தம்பல்காமம் ஒரு வீரப் பட்டினமாக வீரர் கணமொன்றின் காவலில் உள்ள வணிகம் அமைந்து இருந்ததா? என்பதை வருங்கால ஆய்வுகள் மூலமே நிச்சயிக்கக் கூடியதாகும்.

தம்பலி என்ற சொல் மருத மரத்தை குறிக்கிறது தம்பலகாமத்தின் அடையாளங்களில் ஒன்று மருத மரங்கள் அந்த அடிப்படையிலும் நாம் பொருள் காணலாம்.

மிகப் பழமையான ஒரு சமூகக் கட்டமைப்பின் தொடர்ச்சியே கோணேசர் கல்வெட்டு சொல்கின்ற வழமைகள். இலங்கையில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத வரலாற்று பண்பாட்டுச் சிறப்பை கோணேசர் கல்வெட்டு தம்பலகாமத்துக்கு தருகிறது. தம்பலகாமத்து சமூகத்தினர் கோணேசர் கல்வெட்டு தம் பரம்பரை சொத்து என உரிமை கொண்டாடுகின்றனர். வழி வழியாக தங்கள் பரம்பரைக்கு கையளிக்கப் பட்ட சொத்து என்பது இவர்கள் நம்பிக்கை.

தனித்துவ வழிபாட்டு மரபுகளுடன் ஆதி கோணநாதர் கோயிலும், பாலம்பட்டாறு பத்தினி அம்மனும், கள்ளி மேட்டு கண்ணகை அம்மனும் மாரியம்மன் வழிபாடும், நாயமார் வேள்வி வதனமார் மரபு கும்பம் ஆடல் என தனித்துவ நம்பிக்கைகள் சார்ந்த பண்பாட்டின் வழி வந்த பழந்தமிழர் மரபுகளும் இக் கிராமத்தின் கலாசார இருப்பை பேசுகின்றன.

முன்னைய காலத்திலிருந்தே பல புலவர்கள் இங்கு தென்னியாவிலிருந்து வந்த புலவர்களுடன் வாது கவி செய்து வென்றதாக செவி வழி செய்திகள் சொல்கின்றன, வெருகல் சித்திரவேலாயுதர் காதல் எனும் இலக்கியத்தை படைத்தவர் இக் கிராமத்துப் புலவர் வீரக்கோன் முதலியார் அவர்கள்.

இசை நாடகம், வசந்தன், கரகம், காவடி என தமிழர் கலைகள் காலம் காலமாய் பேணப்பட்டு வந்துள்ளமையும் இன்று வரை அவற்றின் தொடர்ச்சியும் நீட்சியும் காணப் படுவதும் நம் கவனத்தைப் பெறுகின்றன.

1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயல்கள் இந்த கிராமத்தின் வாழ்வை சிதைத்தழித்தது எனலாம். பலரும் பல திசைக்கும் இடம்பெயர, தம்பல்காமம் களையிழந்து போக அண்மைக் காலத்தில் மீள் எழுச்சி ஏற்பட்டாலும் இன்னமும் புனரமைப்பு முழுமை பெறாத கிராமமாகவே காட்சி அளிக்கிறது. தம்பலகாமத்தின் வரலாறு பற்றி மிக தொன்மையான காலத்திலிருந்து ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியை காணமுடியும்.


**பால.சுகுமார்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக் கழகம்**


SUN FANCY HOUSE
PRIDE OF BATTICALOA
மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்கான
பொருட்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஸ்தாபனம்.
அழகு சாதனப்பொருட்கள், எவசில்வர், சமயலறை உபகரணங்கள்,
விளையாட்டுப் பொருட்கள், பிளாஸ்ரிக், அலுமினியப்
பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள், சுவர் அலங்காரங்கள்,
கைகடிகாரம் முதல் grand father clock வரை என அணைத்தையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள கூடிய ஒரே ஸ்தாபனம்.
இல 163 இல 173
திருமலைவீதி மட்டக்களப்பு
தொ.பே: 0652223092
தொ.நகல்: 0652227800
இணையம்: www.sunfancylk.com


Akshayini
Beauty salon
Professional skin care & Beauty Services for woman
Beauty Courses @ Akshayini Beauty Salon
Diploma in Hair Dressing
Diploma in Beauty Culture
Diploma in Bridal Dressing
Basic Skin Care
Basic Hair Care
Self Makeup
Party Makeup
Different Types of Eye Makeup
NVQ Exam Guidance
19 A, Kumarakovil Road, Iruthayapuram Central, Batticaloa
0771105282 / 071110582
Akshayini Beauty Salon


HOME CARE
Supplier for Water Filters, Earthen ware & Plants
54 A, Mamangam Kovil Road, Amirthakaly, Batticaloa
Phone: +94 65 2222892, Mobile: +94 77 9028887
Email: homecarebatti@gmail.com
Best Quality Water Filters
All Kind of Clay Materials
All Kind of Plants
Handcraft Items
&
Transport Service
PROPRIETOR : V.MOHAN


PUSHPA CONSTRUCTION
Pushpa Home Designer & Builder
கட்டிடநிர்மான சேவைகள் ஒரே கூரையின் கீழ் (All Services are under the one roof)
G.Pushpaharan
Proprietor
23,Pumping Station Road,
Palameenmadu,Batticaloa
077 990 1403


Manufacturers & Sellers of
All Kind of Gem & Jewellery
SUN GEM & JEWELLERY (pvt) Ltd.
Gold Centre, Shop No. 84, 180, N H M Abdhul Carder Mw, Colombo 11, Sri Lanka.
Tel : +94 11 2330664, +94 11 2330663 Fax : +94 11 2322204 Email : sungempvt@gmail.com